# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/28/NEWS/2013

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே! Engal Thesam එංගල් දේසම්

மலர்: 12 | இதழ்: 24 | 2013 டிசம்பர் 15-31 | ஹிஜ்ரி: 1435 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 259




மனித உரிமைகள் பேரவையை எப்படி

07



இனவெறியை உடைத்த வரலாற்று நாயகன்

10

## பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமி முக்கியஸ்தருக்கு தூக்கு தண்டனை



பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமியின் உதவிப் பொதுச் செயலாளரும் சங்ரம் தினசரிப் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான கல்விமான் அப்துல் காதிர் முல்லாவுக்கு பங்களாதேஷ் சிறைச்சாலையொன்றில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

முழு விபரமும் 5 ஆம் பக்கம்

# குருணாகல் தல்கஸ்பிட்டி முஸ்லிம்களின் காணிகளை சுவீகரிக்க முடிவு

## 36 குடும்பங்களின் காணிகள் கண்டி பௌத்த விஹாரைக்கு

அயாத் அஹமத்

ஜனாதிபதி செயலகத்தின் விசேட செயற்திட்டத்தின் கீழ், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நடவடிக்கையின் பிரகாரம், குருணாகல் தல்கஸ்பட்டி கிராமத்தின் மொரக்வத்த பகுதியிலுள்ள 36 குடும்பங்களின் குடியிருப்புக் காணிகளை கண்டி பத்தினி பௌத்த விஹாரைக்கு பெற்றுக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் அரச நிருவாக மட்டங்களில் இடம்பெறுவதாக தெரியவருகிறது.

இக்காணிகளை சுவீகரித்து உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கடந்த டிசம்பர் 7ஆம் திகதி தல்கஸ்பிட்டி அல் அஸ்ரக் மஹா வித்தியாலயத்தில் இடம்பெற இருந்தது. எனினும், அது தற்காலிகமாக தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி நிகழ்வில் காணி சீர்திருத்தக்குழுவின் அதிகாரிகள், கண்டி பத்தினி விஹாரைக்கு பிரதம பிக்கு மற்றும் ரிதீகம பிரதேசசபைத் தலைவர் ஆகியோர் கலந்துகொள்ள திட்டமிட்டிருந்ததாகவும் பிரதேச மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்ததால் அது கைவிடப்பட்டதாகவும் பிரதேச முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட இக்காணி, 1976 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் சமரபாலவின் மூலம் கிராம அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக 6.5 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

➡ 16

## பெண் நாய்களுக்கு 7 ரூபா 50 சதம் ஆண் நாய்களுக்கு 5 ரூபா

### அடுத்த ஆண்டிலிருந்து வரி விதிக்க நடவடிக்கை

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த நாய்களுக்கு வரி அறவிடும் திட்டமொன்றை அமுல்படுத்த இருப்பதாகவும் இதற்கமைய பெண் நாய்களுக்கு 7 ரூபா 50 சதமும் ஆண் நாய்களுக்கு 5 ரூபாவும் வரி அறவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து கொழும்பு நகராட்சி தலைமை கால்நடை அதிகாரி தர்மரத்ன கருத்து வெளியிட்டபோது, கொழும்பு நகரில் மாத்திரம் 15 ஆயிரம் நாய்கள் சுற்றித்திரிகின்றன.

➡ 16

## றியாழ் மௌலவியின் மறைவுக்கு யூசுப் அல்கர்ளாவி அனுதாபம்



இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் செயலாளராக பல ஆண்கள் கடமை புரிந்த முன்னணி இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவரான அல் ஹாஜ் எம்.ஜே.எம். றியாழ் அவர்களின் மறைவு பெரும் கவலையைத் தருகிறது என இஸ்லாமிய அறிஞரும் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியத்தின் பொதுச் செயலாளருமான யூசுப் அல்கர்ளாவி அவர்கள் வெளியிட்டிருக்கும் அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

➡ 16



பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமியின் உதவி பொதுச் செயலாளர் அப்துல் காதிர் துக்கிலிடப்படுவதற்கு முன்னர் பாதுகாப்போடு அழைத்துச் செல்லப்பட்டபோது.

## தொடர்ந்து தோற்றுப்போகும் உள்ளூராட்சி சபைகள்; அடிமட்டத்தில் அரசாங்கம் ஆட்டங்காணுகிறதா?

பஷீர் அலி

உள்ளூராட்சி சபைகள் பலவற்றின் வரவு-செலவுத் திட்டங்கள் தொடர்ச்சியாக தோற்கடிக்கப்பட்டு செல்வதால் இது அடிமட்டத்தில் அரசாங்கம் ஆட்டங்காண தொடங்கியுள்ளதைக் காட்டுவதாக சில அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். கிட்டிய மாதத்துக்குள் இதுவரை 7 பரதேச சபைகளினதும் இரண்டு மாநகர சபைகளினதும் வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளன.

மதவாச்சி, வத்தளை, இம்புள்பே, அலவ்வ, ராஜாங்கணய, மீரிகம, எம்பலிப்பட்டிய, கிண்ணியா ஆகிய பிரதேசசபைகளும் கெஸ்பாவ, பேலியகொடை ஆகிய மாநகரசபைகளின் வரவு-செலவுத்திட்டங்களே தோற்கடிக்கப்பட்டுள்ளன.

➡ 16

## பொது அறிவு தெரியாத பொதுபலசேனா: போட்டுடைக்கிறது யாழ். தமிழ்-பௌத்த சங்கம்

ஒரு பௌத்த துறவியை தலைவராகக் கொண்ட பொதுபலசேனா இனவாதம் பேசுவது கண்டிக்கத்தக்கதும் வருத்தத்திற்குரியதுமாகும். இலங்கையில் மட்டுமே இரண்டு அரசகரும மொழிகள் (தமிழ், சிங்களம்) இருக்கின்றன. ஏனைய நாடுகளில் இல்லை என்று கூறிய அவரின் பொது அறிவை பார்க்கும்போது பரிதாபமாக இருக்கிறது.

சிங்கப்பூர், கனடா உள்ளிட்ட சுமார் 40 கும் மேற்பட்ட நாடுகளில் இரண்டு அல்லது இரண்டுக்குமேற்பட்ட மொழிகள் அரசகரும மொழிகளாக காணப்படுகின்றன. இந்த பொது அறிவைக் கூட தெரியாத ஒரு நிலையிலேயே பொதுபலசேனா செயற்படுகிறதா? என யாழ் மாவட்ட தமிழ் - பௌத்த சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

➡ 16

## கக்கூஸ் வரியும் விரைவில் அமுலுக்கு வரலாம் ஆருடம் கூறுகிறார் ரணில் விக்ரமசிங்க



நெத்தலி முதல் பெண்கள் மாதாந்தம் பயன்படுத்தும் பேட்கள் வரையில் அனைத்திற்கும் வரி விதிக்கப்படுகிறது. இன்னும் கொஞ்ச காலத்தில் மலசல கூடங்களுக்கும் வரி விதிக்கப்படலாம் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் நலத்திட்டங்களுக்கு பணமில்லை என்ற அரசாங்கத்துக்கு விமானநிலயம், ஆடம்பர விளையாட்டரங்கு, கசினோ வலயங்கள் அமைக்க எங்கிருந்து பணம் வருகிறது?

கடன்பளு தலைக்குமேல் சென்றிருக்கிறது.

➡ 16


INSIGHT

2 Month residential program in IT and English for girls

மாணவிகளுக்கான 2 மாத கால IT and English வதிவிடப் பயிற்சிநெறி

After O/L What Next?

Diploma in Information Technology

Get up to speed in the information highway, learn the latest software and master the basics of computing.

Diploma in English

Whether you choose to pursue higher education or go for vocational education after your O/Ls, this diploma program would give confidence in using English with ease

பதிவுகளுக்கு: IT & English என டைப் செய்து 0773171722 என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும்

இடம்: மாவனல்லை

கட்டணம்: ரூபா. 36,000 (உணவு, தங்குமிட வசதி உட்பட)

பாதுகாப்பான இஸ்லாமியச் சூழல், நவீன கணினி வசதிகள், உயர் கல்வி வழிகாட்டல், குறைந்த கட்டணம் நிறைந்த பயன், முழுமையான இஸ்லாமியப் பயிற்சிகளுடன் இணைந்த கற்கை நெறிகள்.

Insight Institute of Management and Technology

18 A. Palmyrah Avenue, Colombo 3


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகளே சமூகத்தின் கல்வி வீழ்ச்சிக்கு காரணமாயுள்ளன



## வைத்திய நிபுணர் முஸ்தபா ரயீஸ்

இன்று முஸ்லிம் பாடசாலைகளிலும் மத்ரஸாக்களிலும் மாணவர்களின் அடைவுகளில் பெரும் வீழ்ச்சியைக் காணமுடிகிறது. மாணவர் இடைவிலகும் வீதமும் அதிகரித்துள்ளது. மாணவர் நெறி பிறழ்வுகளுக்கு உள்ளாகுதல், பாடசாலைகளையும் மத்ரஸாக்களையும் ஆசிரியர்களையும் வெறுத்தல் மட்டுமல்லாது இவற்றின் அடியாக கல்வியையே வெறுத்தொதுக்கும் அபாயகரமான நிலையும் வளர்ந்துவருகிறது. பாடசாலைகளிலும் மத்ரஸாக்களிலும் வீடுகளிலும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தண்டனை மட்டுமல்லாது அவர்களை மதிக்காமை, அங்கிகரிக்காமை போன்றவையும் இதற்குரிய காரணங்களாகும் என வைத்திய நிபுணர் முஸ்தபா ரயீஸ் தெரிவித்தார்.

குருணாகல் சியம்பளா கஸ்கொடுவை மதீனா தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் அஷ்ஷெய்க் எம்.ஜே.எம். மன்சூர் நளீமி தலைமையில் நடைபெற்ற ‘2020 ஆம் ஆண்டுக்குள் பிரம்பில்லாத முஸ்லிம் பாடசாலைகளும் மத்ரஸாக்களும்’ எனும் தொனிப்பொருளில் ஆரம்பித்துள்ள இலங்கைக்கான தேசிய திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஆசிரியர் மாணவனை தண்டிப்பதற்காக கையில் பிரம்பொன்றை எடுக்கிறார் என்றால் அவர் எடுப்பது பிரம்பல்ல, ஒரு கத்தரிக்கோலாகும் ஆலவிருட்சமாக வளர வேண்டிய மரத்தையும் அதன் வேர்களையும் கிளைகளையும் கத்தரித்து பொன்சாய் மரமாக்கவே அவர் முயற்சிக்கிறார். 42 நாட்களில் 90 அடிகளையும் தாண்டி வளரக்கூடிய ‘சைனீஸ் பம்பு’ எனும் சீன மூங்கில் மரங்கள் இன்று கத்தரிக்கோல்களை கையில் எடுப்பவர்களினால் பொன்சாய் மரங்களாக மாறியிருக்கின்றன.

ஒரு மாணவனுக்கு விழும் அடி அவனது உடம்பில் விழும் அடியல்ல. அவனது உள்ளத்தின் ஆழத்தில் விழும் அடி. உடலியல், உளரீதியாகவும் வழங்கப்படும் தண்டனைகள் அனைத்தும் இதுபோன்றதே என மேலும் அவர் தெரிவித்தார்.

# மகளிர் மட்டும் பஸ் திட்டம் கிடப்பில்



## மீள்பரிசீலணை குறித்து புத்திஜீவிகள் வலியுறுத்து

‘மகளிர் மட்டும்’ பஸ்கள் எங்களுக்கு தேவையில்லை. அப்படி தனித்துவமான பஸ்களில் பிரயாணம் செய்ய எமக்கு விருப்பமில்லை. அவ்வாறுதான் புகையிரதங்களிலும் பெண்களுக்கான தனித்துவ பெட்டிகளை ஒதுக்கித்தரத் தேவையில்லை என சில பெண்கள் தன்னிடம் கூறியதாகவும் எனவே, இவ்வகை பஸ்களை அறிமுகம் செய்யும் முயற்சிகள் கைவிடப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்தியா போன்ற நாடுகளில் பெண்களுக்கென தனித்துவமான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும்போது, எமது நாட்டில் சாத்தியமில்லை எனக் கூற முடியாது. அமைச்சர் ஒருசில பெண்களிடம் கேட்டுவிட்டு அக்கருத்தை முழு பெண்கள் சமூகத்தின் கருத்தாக முன்வைக்க முடியாது. போக்குவரத்துகளில் பயணம் செய்யும் பெண்கள் பாலியல் ரீதியான பல்வேறு இம்சைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனவே மகளிர் மட்டும் பஸ்கள் திட்டத்தை அமுல்படுத்துவது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என புத்திஜீவிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# மூதூர் ஆலிம்சேனை பாடசாலை வீதியை புனரமைத்துத்தருமாறு கோரிக்கை

எப். முபாரக்

மூதூர் பிரதேசசபைக்கு உட்பட்ட ஆலிம்சேனை பாடசாலை வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மற்றும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இக்கிராமத்தின் வீதி, சுமார் 10 வருடங்களுக்கு மேலாகியும் புனரமைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதியில் மாரிகாலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் விபத்துகள் ஏற்படுவதாலும் பயணம் செய்வது பெரும் சிரமமாக உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் பலமுறை கூறியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# கொழும்பில் தமிழ்மொழி மூல பாடசாலைகளை இழுத்து மூடவேண்டியும் வரலாம்



## மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்

கொழும்பிலுள்ள பெரும்பாலான முஸ்லிம் பாடசாலைகளுக்கு சிங்கள மொழிமூல கல்விக்கே விண்ணப்பங்களை அனுப்புகிறார்கள். தமிழ் மொழிக்கு வரும் விண்ணப்பங்கள் குறைவாகவுள்ளன. இன்னும் 10 வருடங்களின் பின்னர் தமிழ்மொழி மூல பாடசாலைகளை இழுத்து மூடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என ஐ.தே.க. யின் மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பு முஸ்லிகளின் கல்வி நிலை மற்றும் வாழ் வாதாரம் குறித்து அவர் கருத்துக் கூறுகையிலேயே மேற்காண்டவாறு தெரிவித்தார். கொழும்பு மத்தி, வடக்கு போன்ற நகர்களில் வாழ்கின்ற முஸ்லிம்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் பிரச்சினையாகவுள்ளது. அவர்களுடைய கல்வி மற்றும் தொழில்வாய்ப்பு என்பன பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன. இப்பிரதேசங்களிலுள்ள பெரும்பாலானவர்கள் அன்றாடத் தொழில் செய்து குடும்பம் நடத்துபவர்கள்.

இங்குள்ள மாணவர்கள் படிக்கக்கூடிய பாடசாலைகளில் போதியவு தளபாடங்களின்மை, ஆசிரியர் பற்றாக்குறை எனப் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகளை சிங்கள மொழியில் கற்பிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். தமிழ்மொழி மூல பாடசாலைகள் ஓரளவுக்கு தரம்வாய்ந்ததாக இருந்தாலும் சிங்கள மொழி மூலம் கற்பிக்கும் முஸ்லிம் பாடசாலைகளின் தரம், சிங்களப் பாடசாலைகளோடு ஒப்பிடும்போது நெருங்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

சிங்கள மொழி மூலம் கற்பிப்பதற்கு கொழும்பைப் பொறுத்தவரைக்கும் போதியளவு ஆசிரியர்கள் இல்லை. கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் முஸ்லிம் பாடசாலைகளில் கல்விகற்கும் சிங்கள மொழிமூல மாணவர்கள் எவரும் சித்தியடையவில்லை.

இது விடயமாக பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் கூடிய கவன மெடுக்க வேண்டும். எனவே, இல்லையென்றால் எதிர்காலத்தில் தமிழை மறந்த ஒரு சிறுபான்மை சமூகத்தையே கொழும்பில் காண வேண்டி வரும். மேலுமிது சமூக கலாசாரரீதியில் எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்தலாம் எனவும் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

# வீதிகளில் கான் வெட்டினால் கைது

## பொலிஸ் வலியுறுத்தல்

தெருக்களில் கவனயீனமாக செயற்படுகின்றவர்கள் மீது கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

வீதிகளுக்கு குறுக்காக கான் வெட்டுதல், கற்களைப் பரப்பி வைத்திருத்தல், மின் கம்பிகளை இணைத்தல் போன்ற செயற்பாடுகளினால் அடிக்கடி விபத்துக்குள்ளாகி மரணங்கள் சம்பவித்துள்ளன.

இவைகளை கவனத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இப்புதிய நடவடிக்கை குறித்து அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில பாடத்திட்டம்

ஐ.ஏ. காதிர்கான்

பைஸர் முஸ்தபா மன்றம் இந்தியன் ஒயில் கம்பனியுடன் இணைந்து கொழும்பு மாவட்டத்திலுள்ள 1500 அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.


இதற்காக 15 அறநெறிப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 35 ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்ட நிகழ்ச்சி ஆறுமாத காலங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுமென்று முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சரும் ஸ்ரீ.சு.க. மத்திய கொழும்பு அமைப்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.



ஜமாஅத்தே இஸ்லாமியின் கள்எலிய மன்றத்தினர் நடத்திய அறிவுக்குப் பரிசு போட்டி நிகழ்ச்சியின் பரிசளிப்பு விழா, கள்எலிய அலிகார் மஹா வித்தியாலயத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக மினுவாங்கொடை கல்வி வலய தமிழ்ப் பிரிவு முன்னாள் பணிப்பாளர் திருமதி ஹரூபா அஸ்ஹர் கலந்துகொண்டார்.

படமும் தகவலும்: இஸ்மத் அலி





மள்வானை உலகிட்டிவல அல்ஹிக்மா பாலர் பாடசாலையின் வருடாந்த கலைவிழா மள்வானை அல்முபாரக் தேசிய பாடசாலை கலையரங்கில் இடம்பெற்றது. மாணவர்களின் நிகழ்ச்சிகளையும் கலந்துகொண்ட பெற்றோரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டும் இலங்கை முஸ்லிம்கள் மற்றுமொரு தீவிரவாதத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்

## இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி பிரகடனம்

நாட்டில் ஒரு பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டிருக்கும் நிலையில் இலங்கை முஸ்லிம்கள் மற்றுமொரு தீவிரவாத சூழலை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். இன நல்லிணக்கம், சகவாழ்வு முதலானவை இதனால் அச்சுறுத்தல்களுக்குள்ளாகி இருக்கின்றன. அதேவேளை, முஸ்லிம் சமூகத்திற்குள் இருக்கும் பிளவுகளும் எம்மை அரித்துக் கொண்டிருக்கின்றன. சர்வதேச இஸ்லாமிய சமூகமும் பல்வேறு சோதனைகளுக்கு உட்பட்டிருக்கிறது என இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி வெளியிட்டுள்ள. பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் 61 ஆவது வருடாந்த அங்கத்தவர் மாநாடு கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருது லீ மெரிடியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போதே மாநாட்டுப் பிரகடனம் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

01. அனைத்திற்கும் முதலாக முஸ்லிம் சமூகம் அல்லாஹ்வை ஆழமாக விசுவாசித்து, அவ்னது போதனைகளை தனது வாழ்வு முழுவதிலும் செயல்படுத்தி, நாட்டுக்கும் உலகிற்கும் ஒரு முன்மாதிரி சிறுபான்மை சமூகமாக அனைத்துத் துறைகளிலும் வாழ்ந்துகாட்ட வேண்டும்.

02. மார்க்கம் தொடர்பில் மறுமை நாள்வரை நிலவப் போகின்ற அனுமதிக்கப்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக, முஸ்லிம் சமூகம் பிளவுண்டு சிதைந்து விடாமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா வெளியிட்ட ஒற்றுமைப் பிரகடனத்தை இறுக பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

03. தஃவாவில் கையாளப்படுகின்ற பல்வேறு அணுகுமுறைகள் பல்வேறு இஸ்லாமிய அமைப்புகள் தோற்றம்பெறக் காரணமாக இருந்தன என்ற நிதர்சனத்தை உணர்ந்து இவ்வமைப்புகள் பணியாற்ற வேண்டும் எனவும் தமக்கிடையே காணப்படுகின்ற இடைவெளிகளைக் குறைத்து

➡ 16

# திருமலையில் அதிகரிக்கும் தற்கொலை முயற்சிகள்

எச்.எம். ஹலால்தீன்

திருகோணமலையில் மாதம் ஒன்றுக்கு 35 கும் மேற்பட்ட தற்கொலை முயற்சிகள் இடம்பெற்று வருவதாக டாக்டர் ஜீவ்ராஜ் தெரிவித்தார்.

திருகோணமலை சர்வோதய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாதாரண காரணங்களால் தான் அதிகமான தற்கொலை முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இவர்களுள் அதிகமானவர்கள் 18-24 வயதுக்கிடைக்கப்பட்ட பெண்களே.

குடும்ப வறுமை, கையடக்க தொலைபேசிகளைப் பாவிக்க விடாமல் தடுப்பது, காதல் விவகாரம், கோபத்தைக் கட்டுபடுத்த முடியாமை, பொறுமை இன்மை, சிறுவயதுத் திருமணம் மூலம் ஏற்படும் குடும்பத்தகராறு முதலான காரணங்களால் இவ்வாறான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

திருகோணமலையில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களுள் அண்மைய ஒரு மாதகால கணிப்பீட்டின் படி தமிழர்கள் 25 பேரும் சிங்களவர்கள் 05 பேரும் முஸ்லிம்கள் 05 பேரும் என தெரியவந்துள்ளதாக டாக்டர் ஜீவராஜ் தெரிவித்தார்.

# அன்பும் அக்கறையும் காட்டப்படும் குழந்தைகள் அறிவு வளர்ச்சியில் மிளிர்கின்றனர்

## சுகாதரா சேவை அதிகாரி ஏ.சி.எம். பஸால்

ஜெஸ்மி எம் மூஸா

சிறுவர்கள் மீது அன்பும் அக்கறையும் காட்டும்போது அவர்களது மூளை வளர்ச்சி அதிகரிப்பதாக உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனை ஒவ்வொரு பெற்றோரும் கவனத்திற் கொள்ளும் போதே குழந்தை வளர்ப்பில் உச்சப் பயனைப் பெறலாம் என கல்முனைப் பிராந்திய சுகாதார சேவை அதிகாரி ஏ.சி.எம். பஸால் தெரிவித்தார்.

மருதமுனை கிட்ஸ் வேல்ட் பாலர் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு அல்மனார் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

குழந்தைகள் பொருட்களை உடைக்கும்போது அவர்களைத் தண்டிக்கின்றனர். உண்மையில் பொருட்களை உடைக்கும் குழந்தைகளே தேடும் குழந்தைகளாகவும் அறிவு முதிர்ச்சி பெறறவர்களாகவும் மாறுகின்றன.

ஒரு குழந்தை கருவிலேயே கற்க ஆரம்பிக்கின்றது. இதனால் குழந்தை வயிற்றில் இருக்கும் போதே பெற்றோர் நல்ல விடயங்களைப் பேசவும் வினவவும் தொடங்க வேண்டும்.

எந்தப் பெற்றோர் அதிகம் தமது குந்தைகளிடம் பேசுகின்றார்களோ அந்தக் குழந்தைகள் ஒரு வயது முதலே பேசவும் அறிவுள்ள விடயங்களைச் செய்யவும் தொடங்குகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.



# முஸ்லிம் பிரதேசத்தை அபகரிக்கவே இத்திட்டம் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் குறித்து மு.கா.

முஸ்லிம் பிரதேசத்தை அபகரிப்பதற்காக சிலர் செயற்படுகின்றனர். சிறுபான்மையினரின் பலத்தை சின்னாபின்னப்படுத்தத்துடிக்கும் சிலரின் நிகழ்ச்சி நிரலே கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் தனியாக அமைவது தொடர்பான கருத்தாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இவ்விவகாரம் குறித்து மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம், பிரதிச் செயலாளர் நிசாம் காரியப்பர், பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் ஆகியோர் காட்டமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

கல்முனையிலுள்ள மக்களை பிரிப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். கல்முனை முஸ்லிம்களை சிறுமைப்படுத்த எடுக்கும் முயற்சியே இதுவாகும். அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள் இருந்தும் சிங்கள இனத்தை சேர்ந்த ஓர் அரசாங்க அதிபரை நாம் ஏற்றுக் கொண்டு இனவாதம் பேசாமல் வாழ்கின்றோம். அப்படியிருக்க ஒருசிலர் தமிழ்ப் பிரதேசசபை என தனியாக பிரித்து பிரிவினையை வளர்க்கின்றனர் என ஹரீஸ் எம். பி. தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக இரு சமூகங்களும் தமக்குள் ஒன்றுபட்டு குரல் எழுப்புவதற்கான சூழ்நிலையை நிரந்தரமாக இல்லாமல் செய்வதற்கான ஒரு தந்திரமாகவே இவ்விவகாரம் அரச மட்டத்தினால் கையாளப்படுகிறது என்பதை தமிழ் சமூகம் புரிந்துகொள்ள வேண்டும் என கல்முனை மாநகர மேயர் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

# கடலில் கலக்கும் மகாவலி கங்கையை கிண்ணியாவுக்குள் கொண்டுவர திட்டம்

கிண்ணியா கொட்டியாரக் குடா கடலில் கலக்கும் மகாவலி கங்கை நீரை திசைதிருப்பி ஐந்தாயிரம் ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொடுக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார். கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார்.

1984 ஆம் ஆண்டிலிருந்து சவூதி அரேபியா அரசாங்கம் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கி வருகிறது. அந்நிதி கிழக்கு மாகாணத்திற்கு வழங்கப்படுவதை விட திட்டமிட்ட அடிப்படையில் வேறுவேறு பிரதேசங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், என்னால் 200 கோடி ரூபா சவூதி நிதியினையே பெற்று இப்பிரதேச அபிவிருத்திக்கு செலவிடக் கிடைத்துள்ளது.

மகாவலி நீர்ப்பாசனம் மூலம் தீனேரி, கண்டல் காடு, குரங்கு பாஞ்சான் உள்ளிட்ட பல வயல் நிலங்கள் பயனடையவுள்ளன. இதனால் எமது பிரதேச விவசாயிகளின் நீண்டநாள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் என நம்புகிறேன். என மேலுமவர் தெரிவித்தார்.

# பொதுபலசேனாவை சட்டத்தால் கட்டுப்படுத்தும் காலம் கனிந்துவிட்டது

## புதிய சட்ட ஏற்பாடு குறித்து அவதானிகள் கருத்து

இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு, அவர்களுக்கெதிரான விசமப் பிரசாரங்களை முன்னெடுத்து வரும் இனவாதக் குழுக்களை கட்டுப்படுத்தி அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த தண்டனை சட்டக் கோவையில் சட்டமூலங்கள் இணைக்கப்படவுள்ளதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜப்பானின் இலங்கைக்கான விஷேட தூதுவர் யசூசி அகாசியை சந்தித்து உரையாடும் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இப்புதிய சட்ட ஏற்பாட்டுக்கு அமைச்சரவையில் அங்கிகாரம் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்திருந்தார்.

அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத நடவடிக்கைகளில் பொதுபலசேனா கடுமையாக களத்தில் செயற்பட்டு வருகிறது. இன்னும் சில பௌத்த கடும்போக்கு அமைப்புகளும் செயற்பட்டு வருகின்றன.

பொலிஸாரோ, மகா சங்கத்தினரோ இந்த அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் மெத்தனப்போக்குடன் செயற்பட்டமை பொதுமக்கள் மத்தியில் பாரிய அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறான சூழ்நிலையிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீமுடைய புதிய அறிவிப்பொன்று வெளிவந்திருக்கிறது. எனவே, அமைச்சர் சொன்னதுபோல் புதிய சட்ட ஏற்பாடு கொண்டுவரப்படும் பட்சத்தில் பொதுபலசேனா உள்ளிட்ட சில தீவிரவாத அமைப்புகள் சட்டத்தினால் தளர்த்தப்படலாம் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சர்வதேச சக்திகளின் பின்னணியுடன் இயங்குகின்ற பொதுபலசேனா போன்ற அமைப்புகளை சட்டரீதியாக கட்டுப்படுத்துவதன் மூலமே நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பான நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் எனவும் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



பாடமுனை அஷ்ரப் வித்தியாலயத்தில் இயங்கி வரும் சக்தி கழகத்தினால் சக்தி வாரம் 2013 நிகழ்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. சக்தி வலு சேமித்தல் தொடர்பான நிகழ்வு, சக்தி விழிப்பூட்டல், விவாதப்போட்டி போன்ற நிகழ்சிகளில் மாணவர்களும் பெற்றோரும் பங்கு கொண்டிருப்பதை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மலர்: 12 இதழ்: 24 2013 டிசம்பர் 15 - 31



77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com


## மர்ஹூம் மௌலவி ரியாழ் ஓர் உதாரண புருஷர்

அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட ரியாழ் மௌலவி அவர்களின் தஃவா வாழ்க்கை ஆலிம்களுக்கு மட்டுமன்றி ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உதாரணமாகும். இயக்கம், தரீக்கா அமைப்பு என்று பிரிந்து சிந்திக்கும் சமூகத்தில் எல்லோருக்கும் நல்லவராக வாழ்வை அமைத்துக் கொள்வது இலகுவான காரியமன்று. இஸ்லாத்துக்கு முரணான சிந்தனைகள் பெருகியிருந்த காலத்தில் 1933 ஆம் ஆண்டில் அவர் பிறந்து கபூரியா அரபுக்கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்த காலம் முதலே, தன்னை தூய்மையான தஃவாவில் ஈடுபடுத்திக் கொண்ட ஒருவராக நாம் ரியாழ் ஹஸ்ரத் அவர்களைக் காண்கிறோம்.


ஹஸ்ரத் அவர்கள் மனித உள்ளங்களை வென்றுவைத்துள்ள பாங்கை விளங்கிக்கொள்வதற்கு அவரது ஜனாஸா தொழுகை மற்றும் நல்லடக்க வேளை ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது. தரீக்கா அமைப்பைச் சேர்ந்த ஷரீஆ கவுன்ஸிலின் தலைவர் மௌலவி ஹஸ்புல்லாஹ் அவர்கள் ஜனாஸாத் தொழுகைக்கு முன்னர் வழங்கிய முழாக்கராவில், ரியாழ் மௌலவியின் சிறப்புகளைக் கூறி மறுமை வாழ்வுக்காக துஆச் செய்தார். தொடர்ந்து ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் மௌலவி தாஸீம் அவர்கள் வழங்கிய சிற்றுரையில் துஆவும் சேவை நலமும் வெளிப்பட்டன. அவர் தௌஹீத் சிந்தனைப் பிரிவைச் சேர்ந்தவர் என்பது தெரிந்ததே. கபுரடி பயானை நிகழ்த்திய மௌலவி ரம்ஸி அவர்கள் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் மாதம்பை இஸ்லாஹிய்யா அரபுக்கல்லூரியின் அதிபர். இவ்வாறு எல்லாத் தரப்பினரும் ஒருமித்த கருத்தில் மெச்சுகின்ற ஆளுமை வீரராக ரியாழ் மௌலவி வாழ்ந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படை.

கபூரிய்யாவில் பெற்ற மௌலவி பட்டத்துடன் நின்றுவிடாது ஆசிரியர் நியமனமும் பெற்று, அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றார். ரியாழ் மௌலவி 1950 இற்கு முன்னரே சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்று, மார்க்கக் கல்வியுடன் பொதுக் கல்வியையும் உலமாக்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு உதாரணமாக விளங்கியுள்ளார். பயிற்சியை முடித்த பின்னர் அவர் ஓயவில்லை. உள்ளக மாணவராக தெரிவு செய்யப்படும் தகைமையுடன் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, அரபு இஸ்லாமிய நாகரிகத்துறையில் பட்டமும் பெற்று மற்றுமோர் உதாரணத்தை உலமாச் சமூகத்துக்குக் காட்டினார். தொடர்ந்து வந்த உலமாக்கள் பெருமளவில் பாட்டப்படிப்பில் ஈடுபட்டார்கள் என்பது நாம் அறிந்ததே.

ஆசிரியராக, வட்டாரக் கல்வி அதிகாரியாக, பிரதி கல்விப் பணிப்பாளராகத் தொழில் புரிந்த காலத்தில் அத்தொழிலில் மட்டும் நின்றுவிடாமல் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவில் முக்கிய பொறுப்புகளை ஏற்று அவ்வமைப்பை சமூகமயமாக்கி உலமாக்கள் மற்றும் மௌலவி ஆசிரியர்களின் நலன் கருதி கல்வி அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் விளைவாக கலாநிதி பதியுதீன் மஹ்மூத் கல்வியமைச்சராக இருந்தபோது மௌலவி ஆகியோர்களும் பயிற்சிக்கு உள்வாங்கப்படும் வாய்ப்பு கிடைத்தது. மாலை நேரங்களில், விடுமுறை தினங்களில் முஸ்லிம் ஊர்கள் தோறும் சென்று ஜம்இய்யாவைப் பலப்படுத்துவதுடன் கிளைகளை ஆரம்பிக்கவும் ஆவன செய்தார். இஸ்லாமிய தஃவாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து தௌஹீத், தப்லீக், ஜமாஅத்தே இஸ்லாமி ஆகிய மூன்றும் மார்க்கம் அனுமதித்த விதிமுறைகளில் செயற்படும் இஸ்லாமிய அமைப்புகள் என்ற தீர்மானத்தை ஜம்இயதுல் உலமா எடுக்கவும் அதனை பள்ளிவாசல் தோறும் அறிவிக்கவும் நடவடிக்கை எடுத்து சகவாழ்வுக்கு உதாரணமாக விளங்கினார்.

தனக்கென ஓர் ஆணித்தரமான கொள்கை சிந்தனை இருந்தபோதும் ஏனைய அமைப்புகளுடன் முடியுமானவரை அனைத்து விடயங்களிலும் உடன்பாடான போக்கை கடைப்பிடித்த மர்ஹூம் ரியாழ் (கபூரி) அவர்கள், இந்நாட்டு உலமாக்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் உதாரணமாக திகழ்ந்துள்ளார். அன்னாரின் மறுமை ஈடேற்றத்திற்காக பிரார்த்திப்போமாக!

## மர்ஹூம் மௌலவி ரியாழ் (கபூரி) ஒரு பன்முக ஆளுமை



ஜம்இய்யதுல் உலமாவின் முன்னாள் பொதுச் செயலாளரும் ஓய்வுபெற்ற பிரதி கல்விப் பணிப்பாளருமான மௌலவி எம்.ஜே.எம். ரியாழ் அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்த செய்தி சென்ற வாரம் முஸ்லிம் சமூகத்தின் பல தரப்பிலும் கவலையை ஏற்படுத்தியது.

வெள்ளையுள்ளம், கனிவான பேச்சு, மற்றவரோடு நட்புடனும் வாஞ்சையுடனும் பழகும் பண்பாடு, எப்போதும் சமூக விவகாரங்கள் பற்றியே சிந்திக்கும் உள்ளம், எளிமையான நடையுடைய பாவனை இதுதான் ரியாழ் மௌலவியின் அசல் என்றால் மிகையாகாது. அவர் மத சமூக நிறுவனங்களிலும் தனி மனிதர்களிடத்திலும் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதற்கு அவரது ஜனாஸா தொழுகை எடுத்துக்காட்டாகும். இலங்கையின் அனைத்து இஸ்லாமிய அமைப்புகளினதும் பொது நிறுவனங்களினதும் முக்கிய பிரமுகர்கள் அங்கே நின்றனர். தப்லீக் ஜமாஅத், தௌஹீத் ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாமி, தரீக்கா அமைப்பினர், தேசிய மற்றும் பிராந்திய ஜம்இய்யதுல் உலமா அங்கத்தவர்கள், சட்டத்தரணிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள் என்று இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மொத்தப் பிரமுகர்களுமே திரண்டுவந்து ஜனாஸா தொழுகையில் பங்குபற்றியமை அல்லாஹ் அவருக்கு வழங்கிய அருளாகும்.

கபூரிய்யா அரபுக்கல்லூரியிலிருந்து ஒரு மௌலவியாக வெளியேறி, மௌலவி ஆசிரியராக நியமனம் பெற்று, ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று, பின் பேராதனை பல்கலைக்கழகத்தில் அரபு இஸ்லாமிய நாகரிகத்துறையில் பட்டம் பெற்று, இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்வாங்கப்பட்டு, அரபுக் கல்வி அதிகாரியாகவும் பின்னர் பிரதி கல்விப் பணிப்பாளராகவும் உயர்வுபெற்று தனது தொழில் வாழ்க்கையில் உயர்ந்ததுபோல், ஆரம்ப காலத்திலேயே அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவில் பொதுச் செயலாளராகவும் நீண்டகாலம் பணியாற்றினார். வேற்றுமையில் ஒற்றுமை கண்ட ஒரு மனிதராக ரியாழ் மௌலவியைக் கூறலாம். தப்லீக், தௌஹீத், ஜமாஅத்தே இஸ்லாமி என்பன சுன்னத் வல் ஜமாஅத்தின் அங்கிகரிக்கப்பட்ட இஸ்லாமிய அமைப்புகள் என்ற தீர்மானத்தை ஜம்இய்யதுல் உலமாவில் எடுக்க அயராது உழைத்தார். இலங்கையில் எல்லா மாவட்டங்களுக்கும் சென்று ஜம்இய்யாவின் கிளைகளை அமைத்தார். இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான பிரச்சினைகளை தன் சொந்தப் பிரச்சினைகளாக எடுத்து எப்போதும் அதற்காகப் பாடுபட்டார்.

எப்போதும் அவரைச் சந்திக்கலாம்; எந்த நேரமும் பேசலாம்; எப்பிரச்சினை பற்றியும் கலந்துரையாடலாம் என்ற வகையில் அவர் ஒரு திறந்த மனிதனாக எல்லாத் தரப்பினருக்கும் நண்பராக கடைசி வரையும் வாழ்ந்தார். பந்தா இல்லை; படாடோபம் இல்லை; எந்தக் கெடுபிடியும் இல்லை; சமூகப் பிரச்சினையில் யாருக்கும் விட்டுக்கொடுப்பு இல்லை; எந்த அரசியல்வாதியிடமும் சோரம் போகவில்லை. அவர் எந்தளவுக்கு சமூகம் சார்ந்த, மார்க்கம் சார்ந்த விடயங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தை மட்டும் இங்கு குறிப்பிடுறோம்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பாடப் புத்தகமொன்றில் 'மகிழ்ந்தான் பையன்' என்ற பெயரில் அன்பு முகைதீனின் கவிதையொன்று சேர்க்கப்பட்டிருந்தது. அந்த வெளியீட்டில் ரஸூலுல்லாஹ்வின் படம் என்று ஒரு படம் பிரசுரமாகியது. அதற்கு முஸ்லிம் சமூகத்திலிருந்து கடும் எதிர்ப்பலைகள் கிளம்பின. ஜம்இய்யதுல் உலமாவின் செயலாளர் என்ற வகையில் ரியாழ் மௌலவி அவர்களும் கல்வியமைச்சுக்கு கடிதமெழுதிக் கண்டனம் தெரிவித்து உடனடியாக அதை மாற்றும்படி கேட்டுக்கொண்டார். அன்றைய அரசாங்கத்துக்கு இவ்விடயம் பெரும் நெருக்கடியாகவும் இருந்தது. 1989 இல் லயனல் ஜயதிலக்கா அவர்கள் கல்விச் சேவை அமைச்சராக இருந்தார். ரியாழ் மௌலவி கல்வியமைச்சில் பொறுப்பான பதவியில் இருந்துகொண்டே அரசுக்கு எதிராக செயற்படுகிறார் என்ற கருத்தை யாரோ விஷமிகள் அமைச்சரிடம் கூறியுள்ளனர்.

அமைச்சு உடனடியாக மௌலவி ரியாழ் அவர்களுக்கு எதிராக விசாரணை நடத்த தீர்மானித்தது. அமைச்சர் லயனல் ஜயத்திலக்க இதில் நேரடியாக ஈடுபட்டார். விசாரணைக்கான அழைப்பாணை கிடைத்தது. வேலை இடைநிறுத்தம், வேலை நீக்கம் என்ற மட்டத்துக்கு இந்த விசாரணை கடுமையாக இருக்கும் என்றளவுக்கு நிலைமை இருந்தாலும் அல்லாஹ் காப்பாற்றுவான் என்ற தளராத நம்பிக்கையோடு ரியாழ் மௌலவி விசாரணையை எதிர்கொள்ளத் தயாரானார். ஜே.வி.பி. கிளர்ச்சி நடைபெற்ற காலமது. நாளைக்கு விசாரணை என்றிருக்கும்போது, லயனல் ஜயதிலக்க ஜேவிபியின் கிளர்ச்சியால் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகிவிட்டார். அதன் பிறகு விசாரணை நடைபெறவில்லை.


பலமான இறைநம்பிக்கையும் ஒரு முன்மாதிரி வாழ்க்கையும் கொண்ட ஒரு மனிதரை முஸ்லிம் சமூகம் இழந்துவிட்டது. ஒரு சமாதான விரும்பியை, சகவாழ்க்கையைப் போற்றும் ஒருவரை இந்நாடு இழந்துநிற்கிறது. மௌலவி ரியாழ் (கபூரி) அவர்களின் மறுமை விமோசனத்துக்காகப் பிரார்த்திப்போமாக!


**எங்கள் தேசம் சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| உள்நாடு | தனிப்பிரதி: 30.00<br>வருட சந்தா: 1200.00<br>ஆறு மாதங்கள்: 600.00 | |
| வெளிநாடு | இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00<br>மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 | அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00<br>இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00 |

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182
தொடர்புகளுக்கு: 077 2992220


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் போர்க்குற்றமும் மரண தண்டனையும்

பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமியின் உதவி பொதுச் செயலாளரும் சங்கரம் தினசரிப் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான கல்விமான் அப்துல் காதிர் முல்லா கடந்த டிசம்பர் 12 ஆம் திகதி இரவு 10 மணிக்கு பங்களாதேஷில் தூக்கிலிடப்பட்டார்.

1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ், பாகிஸ்தானிலிருந்து பிரிந்து தனிநாடாகுவதற்காக நடத்தப்பட்ட போராட்டத்தின்போது இவர் 350 பேர்களை கொலை செய்ததாகவும் பல பெண்களை துஷ்பிரயோகம் செய்ததாகவும் 40 வருடங்களின் பின் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இவர் மட்டுமன்றி, பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமியின் முன்னாள் அமீர், தற்போதைய அமீர், பொதுச் செயலாளர், உதவி அமீர்கள், உதவி பொதுச் செயலாளர்



பொய்ச் சாட்சியாளர்களுக்கு அரசாங்க அதிகாரிகளால் ஒரு வீட்டில் வைத்து எவ்வாறு பயிற்சி வழங்கப்பட்டது என்பதும் அம்பலத்துக்கு வந்தது. ஆனாலும், இவை அனைத்துக்கும் மாற்றமாக இந்த மரண தண்டைனை விதிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முதலாவது மரண தண்டனை நிறைவேற்றப்படும் என அவாமி லீக் தலைவர்கள் பகிரங்கமாகவே கூறிவந்தமை இந்த நீதிமன்றம் எந்தளவுக்கு சுதந்திரமானது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

கள் என மொத்தம் 08 தலைவர்கள் மீது இத்தகைய பொய் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவர்களில் பலருக்கு மரண தண்டனை தீர்ப்பாக வழங்கப்பட்டுள்ளது. அவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

எகிப்தில் கடந்த ஒரு வருடத்தில் பலரது கொலைகளுக்கும் காரணமாக இருந்தார்கள் என இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பின் தலைவர்கள் மீது போலிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு நீதிமன்றங்களில் அவற்றுக்கான விசாரணைகள் எமது கண்முன்னே நடைபெறுவதைப் பார்க்கும்போது, 40 வருடங்களுக்கு முன்னதாக நடைபெற்றதாகக் கூறப்படும் விடயத்தில் ஓர் அரசாங்கம் எவ்வாறும் வழக்குகளைச் சோடிக்க முடியும் என்பது வெளிப்படையானதே.

## இந்தியாவின் கரம்

இன்றைய பங்களாதேஷ் 1971ஆம் ஆண்டுக்கு முன் பாகிஸ்தான் எனும் பெரிய முஸ்லிம் நாட்டின் பகுதியாகவே இருந்தது. இந்தியாவின் ஆதரவோடு பாகிஸ்தானைத் துண்டாடி கிழக்குப் பாகிஸ்தானை ஒரு தனிநாடாக அமைக்க இன்றைய பிரதமர் ஷேக் ஹஸீனாவின் தந்தை முஜிபுர் ரஹ்மான் நடத்திய போராட்டத்துக்கு ஜமாஅத்தே இஸ்லாமி எதிர்ப்பாக இருந்தது. ஒரு முஸ்லிம் நாடு பிளவுபடக் கூடாது என்பதே ஜமாஅத்தின் நிலைப்பாடாக இருந்தது.

இந்திய இராணுவத்தின் துணையோடு பங்களாதேஷ் தனிநாடாகப் பிரிக்கப்பட்டபோது யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டதாக சரணடைந்த பல பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால், அவர்கள் அனைவருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்கள்.

இந்த நிலையில் பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமி மிகவும் சக்தி வாய்ந்த ஓர் அமைப்பாக வளர்சியடைய ஆரம்பித்தது. அவாம் லீக் அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க்கட்சிக் கூட்டணியின் ஒரு முக்கிய பங்காளியாகவும் ஜமாஅத் உருவானது மட்டுமல்லாது எதிர்க்கட்சிக் கூட்டணியின் இயக்க சக்தியே ஜமாஅத் தான் என்ற நிலை ஏற்பட்டது. இது இந்தியாவையும் திகில் கொள்ளச் செய்தது.

கடந்த வருடம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்களாதேஷிற்கு விஜயம் செய்தார். அவரது பயணத்துக்கு முன்னர் இந்தியாவின் பிரதான பத்திரிகைகளின் ஆசிரியர்களோடு ஒரு சந்திப்பை மேற்கொண்டார். அப்போது ஒரு பத்திரிகையாளரது கேள்விக்கு பதில் அளிக்கும்போது, பங்களாதேஷில் ஜமாஅத்தே இஸ்லாமி கட்சியின் வளர்ச்சியே எமது அதிக கவலையளிக்கும் விடயமாகும் எனக் குறிப்பிட்டார்.

எனவே, பங்களாதேஷில் தனது கைபொம்மையான அவாமி லீக் தொடர்ந்து ஆட்சியிலிருக்க வேண்டுமானால், ஜமாஅத்தே இஸ்லாமி பலவீனப்படுத்தப்பட வேண்டும் என இந்தியாவும் கருதியது. இந்தப் போர்க்குற்ற வழக்குகளின் பின்னால் இந்தியாவின் கரமிருப்பது வெளிப்படையாகும்.

## போர்க்குற்ற நீதிமன்றம்

சுமார் 40 வருடங்களுக்கு முன் நடைபெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்களை விசாரிக்க அவாமி லீக் அரசாங்கம் 2009 ஆம் ஆண்டு போர்க்குற்ற விசாரணை நீதிமன்றத்தை அமைத்தது. இது வெறுமனே அரசியல் பழிவாங்கலுக்கான முயற்சியே என எதிர்க்கட்சிகளும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் குற்றம் சுமத்தின.

இந்த நீதிமன்றம் விசாரணைகளை நடத்திச் செல்லும்போதே, அதன் தலைவர் அரசாங்க சார்பு சட்டத்தரணி ஒருவரிடம் வழக்கை எவ்வாறு நடத்தவேண்டும் என Skype மூலம் நடத்திய கலந்துரையாடல் அம்பலமாகியதால் அவர் ராஜினாமச் செய்யவேண்டி ஏற்பட்டது. பொய்ச் சாட்சியாளர்களுக்கு அரசாங்க அதிகாரிகளால் ஒரு வீட்டில் வைத்து எவ்வாறு பயிற்சி வழங்கப்பட்டது என்பதும் அம்பலத்துக்கு வந்தது. ஆனாலும், இவை அனைத்துக்கும் மாற்றமாக இந்த மரண தண்டைனை விதிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முதலாவது மரண தண்டனை நிறைவேற்றப்படும் என அவாமி லீக் தலைவர்கள் பகிரங்கமாகவே கூறிவந்தமை, இந்த நீதிமன்றம் எந்தளவுக்கு சுதந்திரமானது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

இஸ்லாம் ஒரு சக்தியாக வருவதை அங்கிகரிக்க முடியாது தடுப்பதற்காக, சர்வதேச சக்திகள் மேற்கொள்ளும் பிரயத்தனங்களில் பிரதானமானதுதான் அத்தகைய முயற்சியில் ஈடுபடும் இஸ்லாமிய சிந்தனையாளர்களைப் பலவீனப்படுத்துவதாகும். இதனை முஸ்லிம்களையே பயன்படுத்தி மேற்கொள்வதே அவர்களின் திட்டமாகும். இத்திட்டம் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு வடிவங்களிலும் அமுலுக்கு வருகிறது.

எனினும், சத்தியம் வென்றே தீரும் இன்ஷா அல்லாஹ்.

அஹ்மத்

## யார் இந்த அப்துல் காதிர் முல்லா?

அப்துல் காதிர் முல்லா 1948ஆம் ஆண்டு ஒரு மார்க்க ஈடுபாடுமிக்க குடும்பத்தில் பிறந்தார். பாடசாலைக் கல்வியில் சிறந்த தேர்ச்சிகளைப் பெற்ற அவர், இருமுறை புலமைப்பரிசில் பரீட்சைகளிலும் சித்தி பெற்றார். 1964ஆம் ஆண்டு H.S.C பரீட்சையிலும் சித்தியடைந்தயிவர், 1968 ஆம் ஆண்டு BSC பட்டம் பெற்றார்.

1970 ஆம் ஆண்டு பௌதிகவியல்துறையில் உயர்கல்வி பெற டாக்கா பல்கலைக் கழகத்தில் நுழைந்தார். இருப்பினும் பங்களாதேஷ் பிரிவினைப் போராட்டம் காரணமாக அவருக்குக் கல்வியைத் தொடர முடியாமல்போனது.

1975ஆம் ஆண்டு Diploma in Education பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளுடன் சித்தியடைந்தயிவர், உதயன் உயர் கல்லூரியில் பகுதிநேர ஆசிரியராக கடமையாற்றினார். M.Cd பரீட்சையிலும் சித்தியடைந்தவர். பின்னர், அரசாங்கத்தின் பங்களாதேஷ் ரைபல் கல்லூரியில் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றினார். அதே வேளை பங்களாதேஷ் இஸ்லாமிக் பவுண்டேஷனில் ஆய்வாளராகவும் பணிபுரிந்தார்.

1979ஆம் ஆண்டு மினரத் சர்வதேச பாடசாலையை அமைத்து அதன் செயலாளராகவும் கடமை புரிந்தார். 1981 ஆம் ஆண்டு சங்ரம் தினசரிப் பத்திரிகையில் ஆசிரியராகப் பணிபுரிந்ததோடு 1982, 1983 ஆம் ஆண்டுகளில் டாக்கா பத்திரிகையாளர் யூனியனின் உதவித் தலைவராகவும் செயலாற்றினார்.

ஜமாஅத்தே இஸ்லாமி மாணவர் அமைப்பான இஸ்லாமி சத்ரா சங்ஹாவில் 1966 ஆம் ஆண்டு இணைந்துகொண்ட இவர், 1977 ஆம் ஆண்டு பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமியின் அங்கத்தவரானார். அதில் பல பொறுப்புக்களை வகித்ததோடு 2000 ஆம் ஆண்டில் அதன் உதவிப் பொதுச் செயலாளரானார்.

இவை தவிரவும் பங்களாதேஷிலுள்ள பல சமூக நிறுவனங்களிலும் பல்வேறு பொறுப்புக்களையும் அவர் வகித்தார்.

சவூதி அரேபியா, எமிரேட்ஸ், ஜப்பான், சிங்கப்பூர், பாகிஸ்தான் உட்பட பல நாடுகளுக்கும் விஜயம் செய்துள்ளார்.

1977ஆம் ஆண்டு பேகம் ஸன்வர் ஜஹான் எனும் பெண்ணை திருமணம் செய்தார். இவரது மனைவியும் ஜமாஅத்தின் அங்கத்தவர்களில் ஒருவர். இவரது இரண்டு ஆண்மக்களும் நான்கு பெண்மக்களும் படித்தவர்கள், இஸ்லாமியப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள்.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஜனாதிபதியின் மன்னிப்புக்காக விண்ணப்பிக்கலாம் என இருந்தபோதும் தான் செய்யாத குற்றத்துக்காக மன்னிப்புக் கேட்கப் போவதில்லை என மறுத்துவிட்டார்.

இறுதியாக தனது குடும்பத்தினரை சந்தித்த அவர், ஷஹாதத் என்பது ஒரு பாக்கியம். அது தனக்கு கிடைப்பதையிட்டுப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைவதாகவும் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறும் வேண்டினார்.

இப்படி, ஒரு நீண்ட, திறந்த பொது வாழ்க்கையைக் கொண்ட அப்துல் காதிர் முல்லாவை 42 வருடங்களின் பின் பங்களாதேஷ் அரசாங்கம் போர்க்குற்றவாளியாக நிரூபிக்க முயன்றமை விநோதமானதாகும். அல்லாஹுத்தஆலா அவரது பாவங்களை மன்னித்து அவரது ஷஹாதத்தை அங்கிகரிப்பானாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசரிகமவின் நீண்டநாள் கனவு நிறைவேறியது



அபூபக்கர் முஹம்மட் ராபி

அநுராதபுரம் அசரிகம அல் மத்ரஸதுர் ரப்பானிய்யா அரபுக்கல்லூரியில் குர்ஆன் மனனப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இப்பிரதேசத்தின் கனவொன்று நனவாகியுள்ளது.

சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் அசரிகம கிராமத்தில் ஒரு ஜும்ஆ பள்ளிவாசலும் இரண்டு தக்கியாக்களும் இயங்கிவருகின்றன. இரு தசாப்த காலத்திற்கு முன்னர் இங்கு கிதாப் மத்ரஸாவொன்று இயங்கிவந்தாலும் குர்ஆன் மனன மத்ரஸா ஒன்றும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற ஏக்கம் இங்குள்ள மக்களுக்கு நீண்டகாலமாக இருந்துவந்தது.

இந்நிலையிலேயே அஷ்ஷபாப் நிறுவனத்தால் புதிதாக பள்ளியொன்று நிர்மாணிக்கப்பட்டதும் பழைய பள்ளிவாசலை குர்ஆன் மனனப்பிரிவுக்கு பயன்படுத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, கடந்த நவம்பர் 15 ஆம் திகதி பதின் நான்கு மாணவர்களுடன் இந்த மத்ரஸா ஆரம்பிக்கப்பட்டது.

## அடுத்த ஆண்டுக்கான புதிய பயிற்சி நெறியாளர்களை சேர்த்தல்

### கிழக்கு மாகாண பணிப்பாளர் அறிவிப்பு

(குந்தளாய் நிருபர்)

கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இயங்கும் 93 தொழில் பயிற்சி நிலையங்களில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை கிழக்கு மாகாண பணிப்பாளர் கோரியுள்ளார்.

நெசவு பயிற்சி, தும்பு, தச்சு, மட்பாண்டம், பாய், நெசவு, கடைச்சல், இயந்திரவியல், தானியங்கி ஆகிய பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளன.

இவை 06 மாதம் முதல் 01 வருடம் வரையிலான வெவ்வேறு பயிற்சி நெறிகளாகும். பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த மாணவர்கள் விண்ணப்பங்களை பூரணப்படுத்தி பிரதேச செயலகத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் தினம் இம்மாதம் 31 ஆம் திகதியாகும். பயிற்சியாளர்களுக்கு கொடுப்பனவும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளதாக மாகாண பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

## தெல்தோட்டை மஹ்பலுல் உலமா அரபுக்கல்லூரி
## 2014 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர் அனுமதி

பின்வரும் கற்கை நெறிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றது

### 01. ஷரீஆ பிரிவு

இக்கற்கை நெறியில் இணைந்துகொண்ட மாணவர்கள் பின்வரும் கல்வித் தகைமை சான்றிதழ்களை கற்கை நெறியின் இறுதியில் பெற்றுக்கொள்வர்.

1. மௌலவி சான்றிதழ்
2. அல் ஆலிம் ஆரம்ப/ இறுதிப் பரீட்சை சான்றிதழ்கள்
3. தர்மாச்சாரிய கற்கைநெறி சான்றிதழ்
4. க.பொ.த (சா/த), (உ/த) பரீட்சைகளுக்கான சான்றிதழ்கள்
5. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றமைக்கான சான்றிதழ்கள்
6. தொழிநுட்ப பாடங்களுக்கான சான்றிதழ்கள் (ஷரீஆ கற்கை நெறிக்குரிய பாடங்கள் இடம்பெறும் காலப் பிரிவிலேயே கல்லூரியுடன் இணைந்து அரசாங்க அங்கிகாரம் பெற்ற இப்றாஹிமிய்யா தொழிநுட்பக் கல்லூரியின் மூலம் கணினி மற்றும் தொழிநுட்ப பயிற்சி நெறிகளையும் கற்று இச்சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள முடியும்).

### 02. ஹிப்ழ் பிரிவு

அல்குர்ஆன் மனனம், தஜ்வீத், அடிப்படை இஸ்லாமிய ஞானம், தர்பியா முதலிய பாடங்களுடன் கணிதம், தமிழ்மொழி போன்ற பாடங்களும் இடம்பெறும்.

### தகைமைகள்

1. ஷரீஆ பிரிவுக்கு அனுமதிகோரும் மாணவர்கள், 8ம் தரத்துக்கும் ஹிப்ழ் பிரிவுக்கு அனுமதிகோரும் மாணவர்கள், 6ம் தரத்துக்கும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. இரு பிரிவினர்களும் அல்குர்ஆனைத் திருத்தமாக ஓதத் தெரிந்திருத்தல் வேண்டும்.

**மேற்கூறப்பட்ட கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்புபவர்கள் பெயர், விலாசம், கல்வித் தகைமை, தந்தை/பாதுகாவலரின் பெயர், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, 25.12.2013 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.**


THE SECRATARY
Deltota Mahfalul Ulama Arabic College,
P.O. Box: 03, Khadeeja Garden, Deltota.
Tel: 0771394041, 0779850220, 0777768798, 0773868424, 0779958748, 0775192858

**குறிப்பு:**

1. அநாதைகள், மிகவும் வசதி குறைந்த மாணவர்கள் போன்றவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்படும்.
2. இவ்வாண்டு க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான விஷேட கற்கைநெறி தொடர்பான விடயங்களும் இப்றாஹிமிய்யா தொழிநுட்ப கல்லூரிக்கான அனுமதி விபரங்களும் பின்னர் அறிவிக்கப்படும்.

## துணுக்குச் செய்திகள்


தொகுப்பு: எஸ்.எம். அர்ஷத்தீன்



2020ஆம் ஆண்டுக்கான உலக வர்த்தக எக்ஸ்போ கண்காட்சி நடத்துவதற்கு துபாய் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த எக்ஸ்போ கண்காட்சியை நடத்துவதற்கு பிரேஸில், துருக்கி மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளும் போட்டியிட்டிருந்தன. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் இந்த எக்ஸ்போ கண்காட்சி, ஒரு மத்திய கிழக்கு நாட்டில் நடப்பது இதுவே முதன்முறை. இந்த கண்காட்சியை உலகமே பிரமிக்கும் வகையில் நடத்தப் போவதாக துபாயின் மன்னர், ஷேக் அல்மக்தூம் உறுதியளித்திருக்கிறார். இதை நடத்த புதிய இடம் ஒன்றுக்காக, சுமார் ஒன்பது பில்லியன் டொலர்கள் முதலீடு செய்யப்படும். 2015ஆம் ஆண்டுக்கான எக்ஸ்போ கண்காட்சி இத்தாலியில் உள்ள மிலான் நகரில் நடக்கவிருக்கிறது.



தென்னாபிரிக்க அணியின் தொடக்க வீரர் ஹசிம் அம்லா ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்று உலக சாதனை படைத்துள்ளார். இந்திய அணிக்கெதிரான 2 ஆவது ஒருநாள் போட்டியில் தொடக்க வீரராக களமிறங்கி சதமடித்த அம்லா அதில் 59 ஓட்டங்களை எட்டியபோது இந்த உலக சாதனையைப் படைத்துள்ளார். இதுவரை 84 ஒருநாள் போட்டிகளில் அம்லா பங்கேற்றுள்ளார். இதற்கு முன்பு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் விவியன் ரிச்சர்ட்ஸ் 1985 ஆம் ஆண்டு தனது 88 ஆவது இன்னிங்சில் 4,000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்து உலக சாதனையை நிலை நிறுத்தியிருந்தார். இந்நிலையில் விவியன் ரிச்சர்ட்ஸின் 28 ஆண்டு கால சாதனையை தற்போது அம்லா முறியடித்துள்ளார்.



சந்திரனில் இருந்து பூமிக்கு சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரித்து பூமிக்கு கொண்டுவர ஜப்பானின் 'ஷிமிஷு' கார்ப்பரேசன் என்ற நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. ஜப்பானில் கடந்த 2011 மார்ச் மாதம் பூகம்பமும் சுனாமியும் ஏற்பட்டதில் புகுஷிமா அணு உலை வெடித்து சிதறியது. அதனால் அங்குள்ள அணுமின் நிலையங்கள் மூடப்பட்டு வருகின்றன. எனவே, நாட்டின் மின் தேவைக்கு விஞ்ஞானிகள் மாற்று வழியை உருவாக்க முயற்சி செய்து வருகின்றனர். இந்த வகையில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிப்பதை தீவிரப்படுத்தி உள்ளனர். பூமியை பொறுத்தவரை எப்போதும் சூரிய ஒளி கிடைப்பதில்லை. எனவே, சந்திரனின் பூமத்திய ரேகை பகுதியை சுற்றிலும் சோலார் பேனல் தகடுகளை சீராக அமைத்து அதன் மூலம் சூரிய ஒளி மின்சாரம் தயாரித்து பூமிக்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளனர். அதற்கு 'ஜனா ரிங்' என பெயரிட்டுள்ளனர். இதன் மூலம் 13 ஆயிரம் டெராவாட் மின்சாரத்தை தயாரித்து பூமிக்கு கொண்டுவர முடியும். ஒரு டெராவாட் என்பது 1 லட்சம் கோடி வாட் ஆகும். இந்த திட்டத்தின் கட்டுமான பணி வருகிற 2035ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளது.



முதலாவது வர்த்தக செய்மதியை அமெரிக்க விண்வெளி ஆய்வுத் தொழிநுட்பக் கூட்டுத்தாபனம் வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியுள்ளது. உலக தொலைக்காட்சி மற்றும் தொலைத்தொடர்பு செய்மதிகளுக்கான சந்தை வாய்ப்புகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியாக இந்தச் செய்மதி விண்ணுக்கு ஏவப்பட்டுள்ளது. இந்தியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் அதிகரித்துவரும் வாடிக்கையாளர்களை இலக்காக கொண்டு இந்த செய்மதி விண்ணுக்கு ஏவப்பட்டுள்ளது, பூமிக்கு மேலுள்ள ஒழுக்கில் அமெரிக்க விண்வெளி ஆய்வுத் தொழிநுட்பக் கூட்டுத்தாபனம் செய்மதியொன்றை நிலைநிறுத்துவது முதல் தடவையாகும். அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள ஏவுதளத்தில் இருந்து இந்த செய்மதி விண்ணுக்கு ஏவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.எச்.எம். ஹஸன்




**25** வது சர்வதேச மனித உரிமைகள் பேரவை மாநாடு 2014 மார்ச் 3 ஆம் திகதி சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனீவா நகரில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அதன்போது மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிரான தனது அறிக்கையை சமர்பிக்கவுள்ளார். இதற்குச் சமமாக அமெரிக்கா, கனடா, பிரித்தானியா உட்பட ஒரு மேலை நாடுகள் குழு இலங்கை இராணுவம் யுத்தக் குற்றம் புரிந்தது என்று வலியுறுத்தும் ஒன்றிணைந்த முன்மொழிவை மாநாட்டில் முன்வைக்கவுள்ளது. இதற்காக பல அரசசார்பற்ற அமைப்புகள் முனைப்புடன் ஈடுபடுவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

அதன் ஒரு நடவடிக்கையாக, அயர்லாந்தின் சமாதானசபை என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் சார்பில் ஜுட்லால் பெர்னாண்டோ இலங்கை இராணுவம் யுத்தக் குற்றத்தில் ஈடுபட்டதாகக் கூறி 11

மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களும் இலங்கையின் ஊடக அடக்குமுறைகளும் இப்படத்தில் உள்ளடக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன.

இதற்கிடையில் இக்கட்டான ஒரு பொதுத்தேர்தலை எதிர்நோக்கியிருக்கின்ற இந்திய காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசாங்கம் தென் இந்திய வாக்குறுதிகளில் குறிவைத்து இலங்கைத் தமிழர் விடயத்தில் கண்டிப்பாக நடந்துகொண்டு வருவது தெரிந்ததே. அமெரிக்கா கொண்டு வந்த இலங்கைக்கு எதிரான பிரேரணையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்தமை, பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் வராமல் தவிர்ந்து கொண்டமை போன்ற வரிசையில் இப்போது மத்திய நிதியமைச்சர் சீ. சிதம்பரம் வடக்கு, கிழக்குக்கு 13 வது திருத்தத்தின் நன்மைகள் பூரணமாகக் கிடைக்கும்வரை ஓயப்போவதில்லை என்று கூறியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமரை சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். வடக்கு, கிழக்கு ஒன்றிணைந்த 13 வ்து திருத்தத்தின் சகல அதிகாரங்களும் பூரணமாக அமுல்படுத்தப்படல், இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டமை போன்ற விடயங்களே இதன்போது கலந்து

பிரவேசித்துள்ள ஒரு கிறிஸ்தவ மதபோதகர் பற்றிய செய்தி கசிந்துள்ளது. கஸ்பல் ராஜ் என்ற இந்த பாதிரியாரைக் கண்ட இடத்தில் கைது செய்யும்படி அமெரிக்காவின் குற்றப் புலனாய்வு பொலிஸ் (FPI) உத்தரவிட்டுள்ளது. பாதிரியார் திருட்டுத்தனமாக தமிழ்நாட்டுக்கு வந்து புலி ஆதரவாளர்களுடன் இணைந்துள்ளார். இவரை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டும் என ஜனதாக் கட்சித் த்லைவர் சுப்ரமணிய சுவாமியும் ஜெயலலிதா அரசைக் கோரியுள்ளார். தமிழ்நாட்டின் புலி ஆதரவாளர்களுடன் இணைந்து அவர் இலங்கையில் ஈழம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்றும் சுப்ரமணிய சுவாமி வலியுறுத்தியுள்ளார். தமிழ்நாட்டின் பிராந்திய அரசு மட்டுமன்றி இந்தியாவின் மத்திய அரசும்கூட இதனைக் காணாதது போல் இருப்பது இலங்கைத் தமிழருடனான அக்கறையிலல்ல என்றும் எதிர்வரும் தேர்தலைக் குறிவைத்தே காய் நகர்த்தல்கள்

ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளன. வடகொரியாவும் ஆப்கானிஸ்தானும் சோமாலியாவும் வெறும் 8 புள்ளிகளை மாத்திரமே பெற்று பட்டியலில் கடைசியில் உள்ளன.

ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டநெஷனல் நிறுவனத்தின் தலைவர் எச். லெபெலெ, இக்குறிகாட்டியில் முக்கிய விடயமொன்று கண்டறியப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். எல்லா நாடுகளும் போல் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் அதாவது அனுமதிப்பத்திரம் வழங்குவது முதல் சட்டத்தை அமுல் நடத்துவது வரை, ஊழல் நிகழும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளமையாகும். மிக நல்ல நிலையிலுள்ள நாடுகள் என்று அறியப்பட்டுள்ளவற்றில் கூட ஏதோ ஒரு வகையில் இவ்வகை அச்சுறுத்தல் காணப்படுகிறது. ஆசிய பசுபிக் நாடுகளின் வரிசையில் இலங்கை 9 வது இடத்திலுள்ளது.

இந்நிறுவனத்தின் அறிக்கையின் படி பொலிஸ், கல்வி, காணி, அர்சியல் ஆகிய

# மனித உரிமைகள் பேரவையை எப்படி எதிர்கொள்ளப் போகிறது?




நீதிபதிகளைக் கொண்ட ஒரு விசாரணையை ஜேர்மனியின் ப்ரீமன் நகரில் நடத்தியுள்ளார். அந்த வழக்கின் முறைப்பாட்டாளராக ஜுட்லால் பெர்னாண்டோவும் முன்னைய விடுதலைப் புலி உறுப்பினர்களே இதன் சாட்சியாளர்களாகவும் இருந்துள்ளனர். ரோம் நகரில் அமைந்துள்ள நிலையான மக்கள் நடுவர்சபை என்ற அமைப்பே இவ் வழக்கை நடத்தியது. யுத்தத்தில் தமிழர்களைக் கொலை செய்வதற்காக இலங்கைக்கு இந்தியா, அமெரிக்க, பிரித்தானியா ஆகிய நாடுகள் உதவி செய்தன என்ற குற்றச்சாட்டும் இதில் முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த விசாரணையின் தீர்வு இம்மாதம் 16 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2010 இலும் அயர்லாந்தின் டப்லின் நகரில் இதே ஜுட்லால் பெர்னாண்டோ இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றம் சுமத்தியவர் என்பதும் பிரான்ஸில் ஹவ்டாட் என்ற என்.ஜீ.ஓ. பிரதானி, இந்தப் போலி நீதிமன்றத்தில் விடுதலை புலிகள் மீது எவ்வித குற்றச்சாட்டும் முன்வைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கவை.

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு தமிழ் டயஸ் போராவும் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கு எதிரான ஆவணங்களைத் தயார்படுத்தும் நிலையிலுள்ளன. சனல் 4 மற்றுமொரு ஆவணப்படத்தைத் தயாரித்துக் காட்சிப்படுத்தவுள்ளதாகவும் கல்லம் மக்ரேயின் இலங்கை விஜயத்தின்

ரையாடப்படவுள்ளன என்றும் நம்பப் படுகிறது. சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று திருகோணமலையில் காணாமற் போனவர்களின் உறவினர்கள் தாக்கப்பட்ட சம்பவமும் உள்நாட்டு சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களின் கண்டனத்தை பெற்றுள்ளது. இந்த தாக்குதலுக்கு பின்னால் இலங்கையின் இராணுவம் இருப்பதாக தமிழ்த் தரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

பிரான்ஸின் அக்ஷன் ஹங்கர் என்ற தொண்டர் அமைப்பின் 17 ஊழியர்கள் கொலை செய்யப்பட்டது தொடர்பில் அவ்வமைப்பு புதியதொரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இலங்கை இராணுவம் அக்கொலைகளின் பொறுப்பை ஏற்க வேண்டும் என்ற விடயம் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணையொன்றை முன்வைக்க மூன்று முக்கிய நாடுகள் முனையும் வேளையில், அக்ஷன் ஹங்கர் அறிக்கை வெளியிட்டு 24 மணிநேரம் செல்வதற்கிடையிலேயே அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்து போர்க் குற்றங்கள் தொடர்பில் புலனாய்வு செய்யப்படாவிடின் சர்வதேசம் பொறுமை இழந்துவிடும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான புதிய முன்னெடுப்புகள் முடக்கி விடப்பட்டுள்ளன. அதன் ஒரு கட்டமாக விடுதலைப்புலிகளுக்கு புது இரத்தம் பாய்[illegible] இருந்து திரு[illegible]

நடந்தேறுவதாகவும் நோக்குநர்கள் குறிப்பிடுகின்றனர். எதிர்வரும் மார்ச்சில் மனித உரிமைகள் பேரவை அமர்வும் இந்தியப் பாராளுமன்றத் தேர்தலும் நெருங்கி வருவது இலங்கைக்குப் பாதகமாகவே அமையும் என்றும் நம்பப்படுகிறது.

## ஊழல் நாடுகள் பட்டியலில் இலங்கையின் பின்னடைவு

உலக ஊழல் கணிப்பீட்டுக் குறிகாட்டி தொடர்பான 2013 அறிக்கையில் இலங்கையில் அரச துறைகளின் ஊழல் மேலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகின் 117 நாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இந்த கணிப்பீட்டில் 2012 இல் இலங்கை 40 புள்ளிகளை பெற்று 79 ஆவது இடத்தில் இருந்தது. ஆயினும், 2013 ஆகும் போது புள்ளிகள் 37 ஆகக் குறைந்து 91 ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் 12 புள்ளிகள் குறைந்து குறிகாட்டியின் பின்வரிசையை நோக்கி நகர்ந்துள்ளது.


'ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டநெ்ஷனல்' நிறுவனம் வெளியிட்டுள்ள இக்குறிகாட்டியில் அதிகாரத் துஷ்பிரயோகம், இரகசியக் கொடுக்கல் வாங்கல்கள், இலஞ்சம் எடுத்தல் என்பன உலகெங்கும் பேரனர்த்தமாக பரவிக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இக்கணிப்பீட்டுக்கு உற்படுத்தப்பட்ட நாடுகளில் மூன்றில் இரண்டுக்கு அதிகமான நாடுகள் 50 புள்ளிகளை [illegible]வாகப் பெற்றவை. டென்[illegible]சிலாந்து ஆகிய நாடுகள் 91 புள்

துறைகளில் இலங்கை அதிக ஊழலைக் கொண்டுள்ளது என்று காட்டப்பட்டுள்ளன. அந்நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் எஸ். ராணுகே, இலங்கை 50 புள்ளிகளைக்கூட பெற முடியாமையிலிருந்து விளங்குவது, அரச துறைகளில் ஊழலைக் கட்டுப்படுத்த முடியாத நாடுகளின் பட்டியலில் சேர்ந்துள்ளதுதென்பதையே எனக் கூறியுள்ளார். நம் தாய் நாடு ஊழலின் உச்ச நிலையை அடைவதை எந்தக் குடிமகன் தான் விரும்ப முடியும்? பொதுமக்கள் என்ற வகையில் நமக்குள்ள கடமையைச் செய்ய முன்வருவது ஒன்றே முடியுமானதாகும்.

உலகம் பூராகவுவுள்ள அரசாங்கங்களில் காணப்படும் செயற்பாடுகளில் அரசியல் கட்சிகள், பொலிஸ் மற்றும் சட்டத்துறை சார்ந்த ஊழல்கள் உலகுக்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. மேலிருந்து கீழ்வரை பரவுகின்ற ஊழல்களைக் கண்டுபிடிப்பதோ, தண்டனை வழங்குவதோ முடியாத காரியமாகவுள்ளது என்றும் சட்டத்தில் காணப்படும் ஓட்டைகள் மற்றும் அரசியல் தலையீடுகளே இவற்றுக்கு முக்கிய காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது. ஊழல் பட்டியலில் இலங்கைக்கு சமாந்தரமான புள்ளிகளை வேறு இரு நாடுகளும் பெற்றுள்ளன. அவை மாலாவியும் மொரோக்கோவும் ஆகும். அரசாங்கம் ஊழல்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கத் தூண்டும் நோக்கிலேயே இவ்வறிக்கை வெளியிடப்படுவதாகவும் ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர் நெஷனல் நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது பலவும் பொல்லாத பலாய்களும்



மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்காக என்னென்ன முன்னெடுப்புகளை செய்யவேண்டுமோ அதை பட்டியலிட்டு செய்து கொண்டிருக்கிறது பொதுபலசேனா.

வரலாற்றை திரிபுபடுத்தி, சிறுபான்மையினர் இந்நாட்டுக்கு வந்தேறு குடிகள் எனக்கூறி அவர்களை சீண்டும் செயற்பாட்டில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றனர். பள்ளிவாசல்கள், கோயில்கள், தேவாலயங்கள் என இவர்களின் வணக்கஸ்தலங்களுக்கு எதிரான தாக்குதலும் வழிபாடுகளுக்கு எதிரான கோஷங்களும் தொடர்கின்றன.

முஸ்லிம்களின் அடிப்படையான ஹலாலில் கைவைத்து, முஸ்லிம் பெண்களின் ஆடைக் கலாசாரத்துக்கு எதிராக குரல் கொடுத்தது. அவ்வாறே, வர்த்தக தலங்களுக்கு எதிரான தாக்குதல் என அமைதியை சீர்குலைத்து, ஆத்திரத்தை தூண்டி மீண்டுமொரு இரத்த ஓட்டத்தை செலுத்துவதற்கு கங்கணங்கட்டிய இந்த பொதுபலசேனாவின் நோக்கம் நிறைவேறவில்லை. முஸ்லிம்களின் சகிப்புத்தன்மை இந்த இனவாதிகள் எதிர்பார்த்த விளைவைக் கொடுக்கவில்லை.

இப்போதுள்ள அடுத்த துடுப்புதான் சிங்களம் மட்டும் கொள்கையாகும்.

பண்டார நாயக்கவினால் கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் இந்நாட்டில் 30 வருடகால இரத்த ஓட்டத்துக்கு காரணமானது. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஒருமுறை பேசுகின்றபோது, எனது தந்தை எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள் நினைத்திருந்தால் இந்நாட்டில் இனங்களுகிடையில் சமாதானத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அவர் கொண்டு வந்த மொழிச்சட்டந்தான் 30 வருடகால யுத்தத்திற்கு வழிவகுத்தது என்ற தனது மன வருத்தத்தைக் கூறியிருந்தார்.

இப்படி, 30 வருட அழிவுகளுக்கு காரணமாக இருந்த மொழிக்கொள்கை இனிமேலும் மேலெழுந்து இந்நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்லக்கூடாது என்ற நோக்கிலேயே தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சு என்றொரு அமைச்சையும் உருவாக்கியது அரசாங்கம்.

அரசசேவையில் இணைந்துகொள்ளும் ஊழியர்கள் ஐந்து வருடங்களுக்குள் இரண்டாம் மொழித் தேர்ச்சியில் சித்தியடைய வேண்டும் என்ற கட்டாயக் கொள்கையையும் அமுல்படுத்தி, கோடிக் கணக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசன் செலவுகளெல்லாம் அனாவசியமானது என்று ஒரே வார்த்தையில் போட்டு உடைக்கிறதா இந்த பொதுபல சேனா அமைப்பு?

மேலும், சிங்களவர்கள் தமிழை கற்கக்கூடாது என்ற வாதத்தின் மூலமாக தான் சார்ந்த சிங்கள சமூகத்தையே அனைத்துத் துறைகளிலும் அதாள பாதாளத்துக்குள் தள்ள முனைகிறதா?

மொழியறிவு என்பது ஒரு மனிதனையும் ஒரு சமூகத்தையும் பூரணத்தை நோக்கி நகர்த்தும் கருவி. அந்த ஆற்றலை வளர்க்கவேண்டாம் எனக்கூறுவது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதை இந்த பொதுபலசேனா காலம் தாழ்த்தியாவது புரிந்துகொள்ளும்.

இலங்கையில் இன்று, மும்மொழிகளும் தெரிந்தவர்களில் அதிகமானோர் முஸ்லிம்களும் தமிழர்களுமாவர். அதனால்தான் வர்த்தகத்துறையில் அவர்களால் முன்னேற முடிந்துள்ளது என்ற வரலாற்று உண்மை ஏன் இந்த பொதுபல சேனாவுக்கு இன்னமும் தெரியாமலிருக்கிறது?

பொதுபலசேனாவின் இந்த கோஷமானது சிறுபான்மையை விட, பெரும்பான்மைச் சிங்கள மக்களையே அதிகம் பாதிக்கப்போகிறது. நாட்டில் அமைதியின்மையை தோற்றுவிக்கும் வகையில் இத்தனை அடாவடித்தனங்களிலும் ஈடுபட்டுவரும் பொதுபலசேனாவை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருப்பதுதான் வேதனையளிக்கிறது.

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் விதமாக பேசினாலோ, வன்முறைகளைத் தூண்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டாலோ, பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தினாலோ அத்தகையோர் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் பிரயோகிக்கப்படும் என்று மிக காட்டமாக அறிவித்துள்ள அரசாங்கம், இவையத்தனை நடவடிக்கையிலும் பகிரங்கமாக ஈடுபட்டுவரும் இத்தகைய குழு மீது ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அப்படியானால் இச்சட்டமெல்லாம் சிறுபான்மையினருக்கு மட்டுந்தானா?


கூட்டமொன்றில் பேசிய ஜனாதிபதி, இனவாதத் தீயை மூட்டி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. வடக்குக்கு விடிவைத் தேடிக் கொடுத்தவர்கள் நாங்கள்தான் என்று பேசியிருந்தார்.

இப்படி, சமூக உணர்வுகள் பற்றிப் பேசுகின்ற ஜனாதிபதிக்குக் கூட சிறுபான்மையின் உரிமைக் குரல்களும் நடவடிக்கைகளும் இனவாதமாகத் தெரிகிறது; நாட்டையே நாசத்துக்குள் தள்ளிக் கொண்டிருக்கும் பொதுபலசேனாவின், ராவணாக்களின் இதுபோன்ற பொல்லாத பலாய்கள் இனவாதத் தீயாக விளங்கவில்லை போலும்.

இந்த சேனாக்களையும் ராவணாக்களையும் இதேபோக்கில் விட்டால் நாடு மீண்டும் குட்டிச்சுவராகுவதை யாராலும் தடுத்துநிறுத்த முடியாமலாகிவிடும் என்பது மட்டும் தெரிகிறது.

- பஷீர் அலி -

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



(தொடர் 29)

மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழி பெயர்ப்புத் தொடர்

மூன்று நாட்களுக்கு மேல் உழ்ஹிய்யா இறைச்சியை சேமிக்க வேண்டாம் என்ற தடையுத்தரவு விருந்தினர் வருகைதந்திருந்த காரணத்திற்காகவே பிறப்பிக்கப்பட்டது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நாட்டுத் தலைவருக்கு ஒரு விடயத்தை செய்யுமாறு ஏவுவதற்கும் அவ்வாறே ஒரு விடயத்தை செய்யவேண்டாம் என தடுப்பதற்கும் அதிகாரமுண்டு. அச்சந்தர்ப்பங்களில் அவரது கட்டளைக்கு கட்டுப்படுவது கடமையாகும். அதற்கு முரணாக நடப்பதற்கு எவருக்கும் அனுமதியில்லை என்ற கருத்தை இந்த ஹதீஸிலிருந்து விளங்கிக்கொள்ள முடியுமாகவுள்ளது.

இத்தடையுத்தரவினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது கஷ்டத்தை நபியவர்களுக்கு அறிவித்தனர். அப்போது நபியவர்கள், அது ஏன்? என வினவினார்கள். மக்கள் தடையுத்தரவு எனக் கூறியபோது அதற்கான காரணத்தை நபியவர்கள் தெளிவுபடுத்தினார்கள். உண்மையில் இது சட்டவாக்கமாக இருந்திருந்தால், அப்படியான ஒரு சட்டம் இருந்தது. இப்பொழுது அது மாற்றப்பட்டுவிட்டது என அவர்களுக்கு கூறியிருப்பார்கள்.

அவர் தன் மன இச்சையின் படி எதையும் பேசுவதில்லை. அது அறிவிக்கப்படும் வஹியே தவிர. வேறில்லை" (அந்நஜ்மு : 3,4 வசனங்கள்) என்ற வசனத்தையும் அவர்கள் தமது கருத்துக்கு ஆதாரமாகக் கொள்கின்றனர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வஹியையன்றி வேறெதையும் மொழிவதில்லை என இவ்வசனம் கூறுகின்றது. எனவே, அவர் இஜ்திஹாதின் மூலம் சொல்லும் சட்டம் வஹியாக இருக்கமுடியாது. ஆதலால் நபிகளார் இஜ்திஹாத் செய்யவில்லை என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது.

மாறாக தடையுத்தரவுக்கான காரணத்தை நபியவர்கள் விளக்கியதன் மூலம் மக்கள் நலனை கருத்திற்கொண்டு இதுபோன்ற சட்டங்களை தலைவருக்கு பிறப்பிக்க முடியும் என்பதையும் அவருக்கு கட்டுப்படுவது கடமை என்பதையும் மக்களுக்கு போதிப்பதை நோக்காகக் கொண்டிருந்தார்கள் என்பதையும் எங்களால் விளங்கிக்கொள்ள முடியுமாகவுள்ளன. இதன் மூலம் நபியவர்களது ஏவலுக்கும் கட்டுப்படுவது கடமையாக இருந்தது. மக்களுக்கு அதில் தெரிவுச் சுதந்திரம் இருக்கவில்லை என்பதயும் அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. அது, கா்லம் வரையறுக்கப்பட்ட கடமையாகும். அல்லது குறிப்பிட்ட காரணத்திற்காக விதிக்கப்பட்ட கடமையாகும். [illegible]

எனக் கருதும் வரையறையைத் தாண்டமாட்டாது. இது ஆழ்ந்த அவதானத்தையும் வேண்டி நிற்கின்ற மிக நுட்பமான கருத்தாகும். அல்லாஹ்வினால் நேர்வழி காட்டப்பட்டோரைத் தவிர, மற்றோருக்கு அதிகமான விவகாரங்களில் இதனை நடைமுறைப்படுத்துவது கடினமாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது இஜ்திஹாத் குறித்து உசூலிய்யூன்கள் மற்றும் முதகல்லிம்களான முஸ்லிம் அறிஞர்கள் மத்தியில் கருத்துவேறுபாடு நிலவுகின்றது. சட்டவாக்கத்தில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஜ்திஹாத் செய்யவில்லை என அவர்களில் சிலர் கூறுகின்றனர். ஏனெனில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வஹியை பெற்றுக் கொள்வதற்கு சக்தி பெற்றவர்களாக இருந்தார்கள். அவவேளையில் உயர் நிலையிலுள்ள வஹியை விட்டுவிட்டு தாழ்நிலையிலுள்ள இஜ்திஹாதை கைக்கொள்வது அல்லது உறுதியான அறிவைத் தரக்கூடியதை விட்டுவிட்டு ஐயத்திற்குரியதைக் கைக்கொள்வது அவர்களுக்குப் பொருத்தமானதல்ல என்பது அத்தரப்பினரின் வாதமாகும்.

"அவர் தன் மன இச்சையின்படி எதையும் பேசுவதில்லை. அது அறிவிக்கப்படும் வஹியே தவிர, வேறில்லை" (அந்நஜ்மு : 3,4 வசனங்கள்) என்ற வசனத்தையும் அவர்கள் தமது கருத்துக்கு ஆதாரமாகக் கொள்கின்றனர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வஹியையன்றி வேறெதையும் மொழிவதில்லை என இவ்வசனம் கூறுகின்றது. எனவே, அவர் இஜ்திஹாதின் மூலம் சொல்லும் சட்டம் வஹியாக இருக்கமுடியாது. ஆதலால் நபிகளார் இஜ்திஹாத் செய்யவில்லை என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது.


நபிகளார் இஜ்திஹாத் செய்தார்கள் என்று கூறும் அடுத்த தரப்பினர் அல்குர்ஆன், சுன்னா மற்றும் பகுத்தறிவின் ஆதாரங்களைக் கொண்டு மேலே குறிப்பிட்ட தரப்பினருக்கு பதிலளித்துள்ளனர். மேலே அவர்கள் மேற்கோள் காட்டிய வசனம் அவர்களது கருத்துக்கு சார்பான ஆதாரமன்று. ஏனெனில், அந்த வசனம் அல்குர்ஆன் பற்றியே பேசுகின்றது. அபூகதாதா கூறுவதுபோல அவ்வசனத்தின் கருத்து, அல்குர்ஆனில் நபியவர்கள் தனது மன இச்சைப்படி எதனையும் கூறவில்லை. மாறாக அது அல்லாஹ்வினால் அவருக்கு அறிவிக்கப்பட்ட வஹியாகும். இதனை குர்துபி தனது தப்ஸீரில் பதிவு செய்துள்ளார். தப்ஸீருல் குர்துபி பாகம் 17, பக்கம் 84, தாருல் குதுபில் மிஸ்ரிய்யா பதிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA




-மலைஞானி



# விவசாய தொழிலாளர்களுக்கு பொருத்தமற்ற மாடிவீட்டு திட்டம்

ஐம்பதாயிரம் மாடிவீடுகள் பெருந்தோட்டப் பகுதிகளில் அமைக்கப்படும் என 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் ஜனாதிபதி அறிவித்ததையடுத்து விஷயம் பழைய குருடியாக பற்றிக்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. பற்றிக்கொள்ள இதில் என்ன இருக்கிறது என்கிறீர்களா?

2002ஆம் ஆண்டில் ஐ.தே.க. ஆட்சியில் இருந்தபோது வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பதவி ஆறுமுகன் தொண்டமானுக்கு வழங்கப்பட்டிருந்தது. அச்சமயத்தில் அவர் பெருந்தோட்டங்களில் லயம் இல்லாமல் செய்யப்படும் என அறிவித்துவிட்டு மாடிவீட்டு திட்டத்தைக் கொண்டு வந்தார். பிரதமராக இருந்த ரணில் இதற்கு ஒன்றும் சொல்லவில்லை.

முதல் தடவையாக பத்தனை மவுண்ட் வேர்னன் தோட்டத்தில் லயம் இடிக்கப்பட்ட அதே இடத்தில் மாடிவீட்டு திட்டம் அமுல்படுத்தப்பட்டது. லயம் இடிக்கப்பட்ட விடயம் ஊடகங்களில் பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டது. வெள்ளைக்காரன் கட்டிய லயம் முறையை நாங்கள் இடித்து சாவுமணி அடித்துவிட்டோம் என்ற நோக்கில் இந்த லயம் இடிக்கப்பட்டது அனைத்து லயன்களும் இடிக்கப்பட்ட மாதிரி என்ற தொனியில் இ.தொ.கா. வினர் பேசினர்.

அமைச்சர் முத்து சிவலிங்கம் இதுபற்றி பாராளுமன்றத்தில் பெருமிதத்துடன் பேசினார். தோட்டச் சமூகத்துக்கு இந்த அரசில் என்ன குறை? மின்சாரம் வந்துவிட்டது. தனிவீடு கிடைத்திருக்கிறது. மாடிவீடுகளில் அவர்கள் குடியிருக்கிறார்கள் என்று மார் தட்டினார்.

இதேசமயம் மாடிவீட்டுத் திட்டம் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஏற்றதல்ல என்ற அபிப்பிராயத்தை அனேகமாக எல்லாத் தமிழ் ஊடகங்களும் வெளியிட்டன. இ.தொ.கா. மற்றும் ஐ.தே.க. சார்பு தொழிற்சங்கங்களே மாடிவீட்டுத் திட்டத்தை ஆதரித்தன.

வெறும் லயங்களில் மாத்திரம் வசித்து வந்த தோட்டத் தொழிலாளர்கள் தமது காம்பிறாவுக்கு எதிரே அல்லது பின்புறமாக மண்ணால் குடில் அமைத்துக் கொண்டாலும் அது தோட்ட நிர்வாகக் கட்டமைப்புக்கு எதிரானது என்று கூறி தோட்ட நிர்வாகங்கள் அக்குடில்களை தயவு தாட்சண்யமின்றி இடித்துத்தள்ளிய ஒரு காலமிருந்தது. எக்கேடு கெட்டாலும் சரி அந்த காம்பிறாவுக்கு அப்பால் ஒரு சதுர அடிகூட உனக்கு சொந்தமில்லை. எந்தக் கட்டடமும் அமைக்க அதிகாரம் உனக்குக் கிடையாது. அந்தக் காம்பிறாவுக்குள்தான் நீ வாழ்ந்து மடிய வேண்டும் என்பது தோட்டங்களின் கொடூரமான கொள்கையாக இருந்தது. எண்பது, தொண்ணுறுகளில் எல்லாம் இதுதான் சட்டம்.

இந்நிலையில் இருந்து பாரிய அளவிலான முன்னேற்றமாகவே சந்திரிக்கா அம்மையார் அரசில் அறிவிக்கப்பட்ட 7 பேர்ச்சஸ் காணியில் தனிவீடுகள் திட்டத்தை கருதவேண்டும். இது ஒரு புரட்சிகரமான திட்டமாக இருந்தபோதிலும் தொழிலாளர்களின் சேமலாப நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபா கடன் தரப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இந்த வசதியைப் பயன்படுத்தி வெளிநாட்டில் சம்பாதித்துத் திரும்பிய சிலர் தாம் விரும்பியவாறு அழகான கனவு இல்லங்களை அமைத்து திருப்தியடைந்தனர்.

வெள்ளைத் துரைமார் நூறு வருடங்களுக்கு முன்னர் அமைத்த லயன்களிலேயே இன்றைக்கும் பெரும்பாலான மலையகத் தொழிலாளர் சமூகம் வசித்து வருகிறது. தனிவீடு அமைக்கும் யோசனை 1987ஆம் ஆண்டே அரசின் திட்டமாக அறிவிக்கப்பட்ட போதிலும் இன்றுவரை முப்பதாயிரத்துக்கும் சற்று அதிகமான வீடுகள் தோட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒன்பது இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு இரண்டரை லட்சம் வீடுகள் அமைத்தாக வேண்டும்.

எனவே, லயத்து வாழ்க்கை இப்போது முடிவுக்கு வரக்கூடிய ஒன்றல்ல. இதில் சில பிரச்சினைகள் உள்ளன. ஏற்கனவே படித்த தலைமுறையினர், அரச, தனியார் வேலை வாய்ப்புகளைப் பெற்றவர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

தோட்டங்களைப் பிரித்தும் அல்லது தோட்டத்தின் ஒரு பகுதியைப் பிரித்தும் வெளியாருக்கு வழங்கும் அரசியல் திட்டம் நீண்டகாலமாகவே அமுலில் இருந்து வருகிறது. இந்த வெளியார் சிங்கள இனத்தவர்கள் மட்டுமே. இவ்வாறு காணி பிரிக்கப்படும்போது மிகக் குறைந்த சதவீதமான தமிழர்களுக்கே இக்காணித்துண்டுகள் வழங்கப்படுகின்றன.

தோட்டங்களில் மிக நீண்டகாலமாக அங்கயே உழைத்து வாழும் தமிழ்க் குடும்பங்களுக்கு 07 முதல் 10 பேர்ச்சஸ் காணி வழங்கப்பட்டு அவர்களுக்கு வீட்டுவசதி செய்துதரப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் நீண்டகாலமாகவே முன்வைக்கப்பட்டு வருகிறது. ஆனால், இதற்கு அரசு திருப்தியான பதிலளித்ததில்லை. அளிக்கும் என எதிர்ப்பார்க்கவும் முடியாது. ஏனெனில் ஜனாதிபதி என்னதான் மக்கள் தலைவராக இருந்தாலும் சிறுபான்மையினர் விவகாரங்களில் அவரால் தன் சகோதரர்களை மீறியும் தீவிரவாத சிங்கள அமைப்புகளை மீறியும் நடிவடிக்கைகளையோ, முடிவுகளையோ எடுக்கமுடியாது. சிறுபான்மையின கட்சித் தலைவர்களால் அழுத்தம் கொடுக்கும் சூழல் எப்போதோ மலையேறிவிட்டது. இதுதான் உண்மை நிலை.

இந்தப் பின்னணியிலேயே 50 ஆயிரம் வீடுகள், மாடிவீட்டுத் திட்டமாக தோட்ட மக்களுக்கு அமைத்துத்தரப்படும் என்ற அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. நடந்த மத்திய மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்தின் போது வாக்கு சேகரிக்க வந்த ஜனாதிபதி, லயம்முறை ஒழிக்கப்படும் என்றும் ஏனைய சமூகங்களைப் போலவே தோட்ட சமூகமும் கவனிக்கப்படும் என்றும் சொன்னார். ஆனால், மாடிவீட்டுத் திட்டமே அறிவிப்பாக வந்துள்ளது.

ஆறுமுகன் தொண்டமானால் அறிமுகம் செய்யப்பட்ட மாடிவீட்டுத் திட்டம் கடும் விமரிசனத்துக்கு உள்ளானது. பெயர் மாடிவீடு என வசீகரமாக இருந்தாலும் நடைமுறையில் அது மாடி லயமாகவே அமைக்கப்பட்டிருந்தது. கீழே ஒரு ஹோல் மேலே ஒரு ஹோல் இதுதான் மாடி லயம். அறைகள் கிடையாது. விறகடுப்புக்கான புகைபோக்கி கிடையாது. சமையலறை, கழிப்பறை போன்ற ஒரு சிறிய இடம்.

ஒருமுறை ஊடகவியலாளர்கள் மாடி லயத்தை பார்க்கச் சென்றபோது அங்கே வசித்தவர்கள் புலம்பித் தீர்த்து விட்டார்கள். தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்றும் சுவர்களில் இப்போதே விரிசல்கள் ஏற்பட்டு விடுவதாகவும் இரும்பாலான சுழல் படிகள் ஊடாக ஏறுவதும் இறங்குவதும் ஆபத்தான காரியம் என்றும் இதைவிட பழைய லயம் காம்பறாவே போதுமானது என்று அவர்கள் புலம்பினார்கள்.

மாடிவீடு என்பது காணிப் பற்றாக்குறையுள்ள நகர்ப்புறங்களுக்கு பொருத்தமானது. பெருந்தோட்டங்களில் வசிப்பவர்கள் விவசாயத் தொழிலாளர்கள். அவர்களுக்கு அடிப்படை வசதிகள்கொண்ட வீடும் வீட்டைச் சுற்றிலும் காணியும் வழங்கப்பட வேண்டும். காணியில் அவர்கள் விவசாயமும் பண்ணை விலங்கு வளர்ப்பு அல்லது சுயதொழில் முயற்சிகளிலும் ஈடுபட முடியும். இதுவே விவசாயத் தொழிலாளர்களுக்கு பொருத்தமான வீடமைப்புத் திட்டமாகும்.

இப்படி, பொருத்தமான ஒரு வீடமைப்பு திட்டத்தை உருவாக்கி தொழிலாளர் வசம் தந்து விடுவதற்கு சிறுபான்மையினருக்கு நன்மைகள் எதுவும் நேர்ந்துவிடக் கூடாது என்று கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுப் பார்த்துக் கொண்டிருக்கும் அரசுடன் இணைந்து இயங்கிக் கொண்டிருக்கும் சிங்கள தீவிரவாதக் கட்சிகள் இடந்தராது.

இந்த இடத்தில் மலிவு விலையில் தொழிலாளர்களுக்கு உணவுப் பொதி என்ற ஒரு திட்டத்தை சில வருடங்களுக்கு முன்னர் இதே அரசு ஆரம்பித்ததையும் அத்திட்டம் ஒரே தடவையோடு கிடங்கில் போடப்பட்டதையும் நிறைவுகூற வேண்டி இருக்கிறது. மாடிவீடுகள் மலையகத்துக்கு தேவையா, இல்லையா என்ற விவாதம் ஒரு புறம் இருக்கட்டும். இந்த திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் எண்ணம் உண்மையிலேயே அரசுக்கு இருக்கிறதா என்பதே இங்குள்ள கேள்வி. இப்படி ஒரு திடமான தீர்மானம் இல்லாத காரணத்தினால் தான் ஒரு விவசாய தொழிலாளர் சமூகத்துக்கு பொருந்திவராத ஏற்கனவே பரீட்சித்துப் பார்த்து கைவிடப்பட்ட திட்டத்தை அரசு கையில் எடுத்திருக்கிறதோ?

ஏனெனில், இதை அமுல்படுத்த அரசு முனையும்போது எதிர்ப்பு நிச்சயம் கிளம்பும். இந்த எதிர்ப்புகளை சாட்டாக வைத்து, நாங்கள் உதவவும் அபிவிருத்தி செய்யவும் முன்வரும்போது அதை எதிர்ப்பதனால் இத்திட்டத்தை மனவருத்தத்துடன் கைவிட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்ற அறிவிப்போடு திட்டம் கைவிடப்படலாம் என்பதையும் பழைய அனுபவங்களை வைத்து நாம் முடிவுக்கு வரக்கூடியதாக உள்ளது.

பெருந்தோட்டங்களில் ஏராளமான தரிசு காணிகள் உள்ளன. அவற்றை வெளியாருக்கு வழங்காமல் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்கி 10 பேர்ச்சஸ் காணியில் சுய உதவித்திட்டத்தின் கீழ் வீடுகளை அமைத்துக் கொடுத்தால் இந்த அரசையும் ஜனாதிபதியையும் தோட்ட மக்கள் என்றைக்கும் மறக்கமாட்டார்கள். தரிசு காணிகளை வெளியாருக்கு பங்கிட்டு அக்காணிகளுக்கு உறுதிகளையும் வழங்க முடியுமானால் ஏன் அதே வகையில் தொழிலாளர் குடும்பங்களையும் காணி உரிமை கொண்டவர்களாக மாற்றியமைக்க முடியாது?

எளிமையான கேள்வி. ஆனால் இக்கேள்விக்கு பதில் தரக்கூடிய மனவலிமை மலையகக் கட்சிகளிடமும் இல்லை, அரசிடமும் கிடையாது. மலையக மக்களுக்கு சொந்தக் காணியும் வீடும் வழங்குவதில் இனவாத அரசியல் உள்ளது. இந்த இனவாத அரசியலைப் புரிந்துகொள்ள எவருக்கும் விசேட தகைமைகள் தேவையில்லை. இதுவொன்றும் நுட்பமான இனவாத அரசியலல்ல. மிகவும் வெளிப்படையானது.

16

> **“இரும்பாலான சுழல் படிகள் ஊடாக ஏறுவதும் இறங்குவதும் ஆபத்தான காரியம் என்றும் இதைவிட பழைய லயம் காம்பறாவே போதுமானது என்று அவர்கள் புலம்பினார்கள்.”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலுள்ள சிறுபான்மை மக்களின் பலத்தை உடைப்பதற்காக பலர் செயற்பட்டு வருகின்றனர்

## மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்

கொம்பனித்தெரு பகுதியில் 90% முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இங்கு 11 பள்ளிவாசல்களும் 3 முஸ்லிம் பாடசாலைகளும் இருக்கின்றன. இங்குள்ள ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தையில்தான் இந்த கசினோவை நிறுவப் போகிறார்கள். இலங்கையின் முதலாவது முஸ்லிம் நீதியரசர்தான் அக்பர் அவர்கள். அவருடைய பெயரிலுள்ள வீதியில் இந்த கசினோவை நிறுவுவது அவருக்கு செய்கின்ற அவமதிப்பாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். எங்கள் தேசத்திற்கு அவர் வழங்கிய செவ்வியின்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் வழங்கிய செவ்வியின் முழு விபரமும் வாசகர்களுக்காக தொகுத்து வழங்கப்படுகிறது.

**கேள்வி:** கொழும்பில் அண்மைக்காலமாக முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறான நிலைமை தோன்றுவதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?

*பதில்:* கொழும்பு நகரில் முஸ்லிம்களின் சனத்தொகை கூடுதலாக காணப்படுவதுடன் சிங்கள மக்களின் சனத்தொகை குறைந்து வருகிறது என்று நாட்டிலுள்ள இனவாத இயக்கங்கள் இன்று மட்டுமல்ல, 30 வருடங்களாக கூறிவருகின்றனர். அத்தோடு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வந்ததன் பின்னர் எத்தனையோ தடவைகள் தேர்தல் நடந்தும் கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளை அவரால் வெல்ல முடியாமல் இருக்கின்றன. இவ்விடயம் அராசங்கத்திற்கு ஒரு பிரச்சினையாகவும் இருந்து வருகிறது. இதற்கு கொழும்பிலுள்ள 5 தேர்தல் தொகுதிகளிலும் வாழ்கின்ற முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பதால்தான் அரசாங்கத்தால் வெல்ல முடியாதுள்ளது என இனவாதிகள் கருதுகின்றனர்.

கொழும்பு நகரத்தின் 5 தொகுதிகளிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களை சேர்த்தால் கொழும்பு மாநகரசபை தமிழ் மொழிமூலம் கருமமாற்றக்கூடிய மாநகரசபை என்று கூறக்கூடிய அளவுக்கு இங்கு மக்கள் வாழ்கிறார்கள். இதனால் இங்கு வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் பலத்தை உடைப்பதற்காகவும் அவர்களை கொழும்பிலிருந்து வெளியேற்றுவதற்காகவும் பலர் திட்டமிட்டு செயற்படுகின்றனர்.

**கேள்வி:** கொழும்பு கொம்பனித்தெரு மியுஸ் வீதியிலிருந்து அபிவிருத்தித் திட்டத்தின் பெயரில் வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படாதுள்ளன. இவர்களுக்கு நிரந்தர வீடுகளை பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படுகின்றவா?

**அரசாங்கம் கட்டானையில் கசினோவை நிறுவப்போவதாக தகவலொன்று வெளியானது. கட்டானை கிரிஸ்தவர்கள் அதிகம் வாழ்கின்ற பிரதேசம். அப்போது பேராயர் மெல்கம் ரஞ்ஜித் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக அறிக்கையொன்றை வெளியிட்டார். பின்னர், நாம் கட்டானையில் கசினோ கிளப் நிறுவப்போவதில்லை என அரசாங்கம் தெரிவித்தது. பேராயர் மெல்கம் ரஞ்சித்துக்கு இருக்கிற தைரியம்கூட எமது சில உலமாக்களுக்கு இல்லாமல் இருக்கிறது என்பதுதான் கவலையாகவுள்ளது.**

*பதில்:* 2007 ஆம் ஆண்டு இலங்கையில் சார்க் மாநாடு நடைபெற்ற போது, கனேஸ் தெரிவிலுள்ள 300 கும் மேற்பட்ட வீடுகளை அரசாங்கம் எடுத்தது. இதற்காக அரசாங்கம் பேஸ்லைன் வீதியில் வீடமைப்புத் திட்டமொன்றை ஏற்படுத்தி சிலருக்கு வீடுகளை வழங்கியது ஆனால் 80 குடும்பங்களுக்கு இன்னும் நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை. இவர்கள் மட்டக்குழியிலுள்ள வெலிகொட என்னும் இடத்தில் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அதேபோல கொம்பனித்தெரு மியூஸ் வீதியிலுள்ள வீடுகள் 2010 ஆம் ஆண்டு உடைக்கப்பட்டன. அவ்வீடுகள் காலகாலமாக அம்மக்கள் வாழ்ந்த, சட்டரீதியான உறுதிகளைக் கொண்ட வீடுகளாகும். அப்பிரதேசத்தில் பாதுகாப்பு பாடசாலை (Deffence School) அமைப்பதற்கு அரசாங்கம் இராணுவத்தினரை அனுப்பி 24 மணித்தியாலயங்களுக்குள் அம்மக்களை பலாத்காரமாக வெளியேற்றியது.

அதன் பிறகு நாங்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தோம். இதனால் 2011 ஜூன் மாதம் பேஸ்லைனில் நிறுவப்படவுள்ள வீட்டுத்திட்டத்தில் வீடு வழங்கப்படும் என உறுதியளித்தார்கள். இது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பாகவுமுள்ளது. அதுவரை அம்மக்கள் வாடகைக்கு இருக்க வேண்டும். அதற்கு மாதம் 12 ஆயிரம் ரூபா வாடகைப் பணமாக வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், கட்டி முடிக்கப்பட்ட பின்னர் அவ்வீடுகளை மக்கள் கேட்டுச் சென்றபோது நகர அபிவிருத்தி அதிகார சபை வழங்க மறுத்திருக்கிறது. இன்னும் 2 வருடங்கள் வாடகைக்கு இருக்குமாறு அவர்களைப் பணித்திருக்கிறார்கள். இந்த செயற்பாடானது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையே மீறிய செயலாகும். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையே அரசாங்கம் மீறிச் செயற்படுகின்றது என்றால் அரசாங்கத்தை எவ்வாறு மக்கள் நம்பமுடியும்? இதில் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்பதாலா இவ்வாறு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது? என்கிற சந்தேகம் எமக்கு எழுகிறது.

வாழைத் தோட்டத்திலுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகளை உடைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வந்திருந்தார்கள். அதற்கு எதிராகவும் நாங்கள் வழக்குத் தொடர்ந்திருக்கிறோம். நாங்கள் அபிவிருத்தித் திட்டங்களை எதிர்ப்பவர்களல்ல. ஆனால், அரசாங்கத்தின் செயற்பாடுகளில் தான் எமக்கு நம்பிக்கையில்லாமல் இருக்கிறது. புதிய வீடு கட்டித்தருவதாகக் கூறி பாரம்பரியமாக வாழ்ந்த வீடுகளை உடைத்து விட்டு பின்னர் ஏமாற்றுகிறார்கள். இவ்வாறு நாரஹேன்பிட்டி, பொரளை போன்ற பகுதிகளிலும் வீடுகளை உடைத்துவிட்டு, இன்னும் மாற்று ஒழுங்குகள் செய்யப்படவில்லை. கேட்டுச் சென்றால் மிருகங்களை அடித்து விரட்டுவதுபோல் மக்களை விரட்டி விடுகிறார்கள். வாழ்ந்த இடம், தொழில், அவர்களது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை, கலாசாரம் என்பன அவர்கள் வாழ்ந்த பிரதேசத்தில்தான் இருக்கின்றன. இப்படியிருக்கையில் உடனே அவர்களது வாழ்விடங்களை விட்டு வெளியேற்றுவதால் அம்மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள் என்பதை அரசாங்கம் விளங்கி நடந்துகொள்ள வேண்டும்.

**கேள்வி:** பொதுபலசேனாவின் முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து உங்களது கருத்து என்ன?

*பதில்:* பொதுபலசேனா போன்ற இயக்கங்கள் பல இந்நாட்டில் செயற்பட்டு வந்திருக்கின்றன. நாட்டின் சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் இதுபோன்ற பல சிங்களத் தலைமைத்துவங்கள் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்போதல்லாம் அத்தகைய இயக்கங்களுக்கு அரசாங்கம் ஆதரவளிக்கவில்லை. அப்போதிருந்த முஸ்லிம் எதிர்ப்பு இயக்கங்களுக்கும் இப்பொழுது இருக்கின்ற பொதுபலசேனாவுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால் இதற்கு அரசாங்கத்தின் அனுசரணை கிடைப்பதுதான். பொதுபலசேனாவின் செயற்பாடுகளுக்கு எதிராக அரசாங்கம் சட்டநடவடிக்கை எடுப்பதில்லை. அரசாங்கம் இவர்களுடைய விடயத்தில் மௌனம் சாதிக்கிறது. அதுதான் எங்களுக்குள்ள பிரச்சினையாக இருக்கிறது.

**கேள்வி:** அரசாங்கம் பொதுபலசேனாவுக்கு ஆதரவளிப்பதாக கூறுகிறீர்கள். இதனூடாக அரசாங்கம் எதனைச் சாதிக்க நினைக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

*பதில்:* மஹிந்த ராஜபக்ஷவுடைய அரசாங்கம் இந்த நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்தித்தான் ஆட்சியமைத்திருக்கிறது. 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகள் ஆதரவளித்திருந்தன. மஹிந்த ராஜபக்ஷவினுடைய அரசாங்கம் இன துவேஷத்தை ஏற்படுத்திக் கொண்டுதான் இன்னும் ஆட்சி செய்கிறது.

யுத்த முடிவின் பின் இந்த அரசாங்கத்தின் மீது சிங்கள மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பார்ப்பிருந்தது. ஆனால், எதிர்பார்த்தது ஒன்றுமே நடக்கவில்லை. இப்பொழுது பாராளுமன்றத்தில் பட்ஜட் கொண்டு வரப்பட்டிருக்கிறது, இதில் யாருக்கும் எந்த சலுகையுமில்லை. யுத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்த சிங்கள மக்களுக்கும் கூட எவ்வித பிரயோசனமுமில்லை. இன்று விவசாயிகள், தொழிலாளர்கள், பல்கழைக்கழக மாணவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஒவ்வொரு நாளும் வீதியில் இறங்கி போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இப்படி, அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் உருவாகும் எதிர்ப்புகளை வேறோரு திசையில் திருப்பவேண்டிய தேவையிருக்கிறது. அதற்காகத்தான் இந்த பொதுபலசேனாவை அரசாங்கம் பயன்படுத்துகிறது என்று நான் நினைக்கிறேன்.

நேர்காணல்: ஏ. முஹம்மது பாயிஸ்
படப்பிடிப்பு: சபீக் ஹுசைன்

பொதுபலசேனாவின் அலுவலகத்தை கோதாபய திறந்துவைத்தார். கோதாபய, பொதுபலசேனா நல்லவர்கள் என்று நற்சான்றும் வழங்கியிருக்கிறார். அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகம் சிறிகொத்தாவில் பொதுபலசேனாவுக்கு எதிராக கொட்டில் ஒன்று அமைக்கப்பட்டு காட்சிப்படுத்துவதாக எண்ணி அதைத் தடுப்பதற்காக வந்தார்கள். உண்மையில் அது அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக இந்நாட்டில் நடைபெற்ற நிகழ்வுகளின் புகைப்படங்களை காட்சிப்படுத்துவதற்காக நான் அமைத்த ஒரு கொட்டிலாகும். ஆனால், அவர்கள் தங்களுக்கு எதிராக அமைக்கப்பட்டது என்று அங்கு வந்தார்கள். அவர்களை கட்சி அலுவலகத்திற்குள் உள்வர விடாமல் சிங்கள இளைஞர்கள் கோஷமிட்டு விரட்டினார்கள். 'சோகம்' மாநாட்டின்போது கசினோ முதலீட்டாளர் ஜேம்ஸ் பெக்கரைக் கொண்டுவந்தது அரசாங்கம்.


➡ 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவெறியை உடைத்த வரலாற்று நாயகன்

# நெல்சன் மண்டேலா



தென்னாபிரிக்காவில் சோஸா என்னும் பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்தப் பழங்குடி இனத்தின் ஒரு பிரிவினர் தெம்பு மக்கள் என்று அழைக்கப்பட்டனர். தெம்பு இன அரசர், தெம்பு மக்களின் தலைவராக காட்லா அவர்களை நியமித்திருந்தார். நியமனம் செய்த அரசர் பிரித்தானியாவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டவர். காட்லா தன் இன மக்களோடு நெருக்கமான உறவு கொண்டிருந்த தலைவர் என்றாலும் பிரித்தானியாவுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலைமையிலேயே இருந்தார்.

ஓர் ஆபிரிக்கர் பல பெண்களை மணந்து கொள்வது அங்கு வழமையாக இருந்தது. எனவே, காட்லாவுக்கும் நான்கு மனைவிகள் இருந்தனர். இவர்களில் மூன்றாவது மனைவிக்கு மகனாக 1918ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி குனு என்னும் கிராமத்தில் பிறந்தவர்தான் நெல்சன் மண்டேலா.

காட்லா மண்டேலாவுக்கு வைத்த பெயர் ரோலிலாலா மண்டேலா. கறுப்பின மக்கள் மத்தியில் வாழ்ந்து வந்த நெல்சன் மண்டேலா ஐந்து வயது சிறுவனாக இருக்கும்போது முதன் முதலில் ஒரு வெள்ளையரைக் கண்டு திகைத்து நின்றுவிட்டார். நான் அறிந்த யாரும் இத்தனை வெளுப்பாக இருந்ததில்லை, இவர் நிச்சயம் கடவுளாகத்தான் இருக்க வேண்டுமென்று தன் நண்பர்களிடம் பகிர்ந்துகொண்டார்.

ஏழு வயதுவரை அவர் ஒரு போர்வையை மட்டுமே ஆடையாக அணிந்திருந்தார். போர்வையை தோள் பக்கமாக போர்த்தி, இடுப்பில் ஊசி செருகியிருப்பார். ஓடினாலும் ஆடினாலும் அவிழாது. சிறு பராயத்தில் துடிப்புமிக்க சிறுவனாகவே இருந்துள்ளார். கூடுகளிலிருந்து தேன் சேகரித்தார். மாட்டின் மடியிலிருந்து நேரடியாக பால் குடித்தார். கூரான குச்சியைக் கொண்டு மீன்களைக் குத்திப் பிடித்தார். குளிரான ஆறுகளில் குதித்து உடல் நடுங்க, நடுங்க நீந்தி கரையைத் தொட்டார். அத்துடன் ஒவ்வொரு ஆபிரிக்க சிறுவனும் தெரிந்து கொள்ள வேண்டிய குத்துச்சண்டையைக் கற்று சிறு வயதிலேயே வீரமிக்க சிறுவனாக திகழ்ந்தார். இப்படி, ஆரம்ப முதலே அவரது வாழ்கை முட்புதர்கள் நிறைந்த ஒன்றாகவே இருந்தது.

சோஸா மக்கள் மானசீக கடவுளாக கமாடா எனும் கடவுளையே வணங்கி வந்தனர். கிறிஸ்தவ மதம் அறிமுகப்படுத்தப்பட்டபோது இவர்களில் முதன் முதலில் மண்டேலாவின் தாயாரே கிறிஸ்தவ மதத்தை தழுவிக்கொண்டார். இவருக்கு ஃபேனி என்று பெயர் மாற்றப்பட்டது. இதனையடுத்து மண்டேலா மெதடிஸ்ட் வெஸ்லியன் தேவாலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு கிறிஸ்தவ ஞானஸ்நானம் அளிக்கப்பட்டது. காட்லாவின் வம்சத்தில் யாருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. நெல்சன் மண்டேலாவே ஏழு வயதில் முதன் முதலாக பாடசாலைக்கு சென்றார். அவரைப் படிக்கவைத்து சோஸா மக்கள் மத்தியில் ஒரு பெரும் தலைவராக ஆக்க வேண்டுமென்பதே தந்தை காட்லாவின் அவாவாக இருந்தது.

படிக்கப்போவது, ஆங்கிலப் பாடங்களை கற்கப்போவது, பிரிட்டிஷ் சரித்திரத்தை பழகிக்கொள்வது, ஆங்கிலேயப் பழக்கவழக்கங்களை வழிப்படுவது போன்ற விடயங்களில் மண்டேலா அப்போதிருந்தே தொடர்ந்து வந்தார். அனாவசியமாக உனக்கேன் ஆபிரிக்கப் பெயர்? என்று ஆசிரியர் கடிந்து விட்டு ரோலிலாலா எனும் பெயரை நெல்சன் என்று மாற்றம் செய்தார். அன்றிலிருந்து இன்றுவரை ரோலிலாலா மண்டேலா, நெல்சன் மண்டேலா எனும் பெயர்களுடனே வாழ்ந்து வந்தார்.

சோஸா மக்களை வெள்ளையர்கள் அடிமைகளாகவே நடத்தினர். தங்கச் சுரங்கங்களை பெற்றுக்கொள்வதற்காக கறுப்பின மக்களை அடிமைகளாக வேலைவாங்கி, வேலைக்கேற்ற ஊதியத்தையும் கொடுக்காமல் அவர்களை இம்சித்தன. சொந்த மண்ணில் தம்மக்கள் அடிமைப்படுத்தப்படுவதையும் கேவலமாக நடத்தப்படுவதையும் அவதானித்த இளைஞன் நெல்சன் மண்டேலாவின் இரத்தம் கொதித்தது. விடுதலை வேட்கை உணர்வு வீர் விட்டுப் பாய்ந்தது. வெள்ளையர்களிட மிருந்து கறுப்பின மக்களை காப்பாற்ற வேண்டுமென்ற துடிப்பும் உத்வேகமும் அவருக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றன. வெள்ளையர்களால் நெல்சன் மண்டேலா அவமானப்பட்ட பல சந்தர்ப்பங்களுமுண்டு.

வெள்ளையர்களிடமிருந்து தம்மின மக்களை எவ்வாறு காப்பாற்றலாமென சிந்தித்துக்கொண்டிருந்த சமயத்திலேதான் லாஸர் சிடெல்ஸ்கி எனும் யூத உயரதிகாரி ஒருவரின் நட்பு ஏற்பட்டது. அவரிடம் மண்டேலா தன்னின மக்களின் அடிமை வாழ்கைபற்றிய மனக்கவலைகளை பகிர்ந்துகொண்டார். லாஸர் சிடெல்ஸ்கி: நீ ஒரு வழக்கறிஞராக மாறினால் அது முடியும். அப்போதுதான் வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருந்து உன் இன மக்கள் விடுதலை பெற்று சுதந்திரக் காற்றை சுவாசிப்பார்கள். அதற்கு நீ இப்போதிருந்தே போராட வேண்டும் என்று விடுதலைத் தாகத்தை ஊட்டினார்.

1941ஆம் ஆண்டு ஜொகனஸ் பேர்க்கிற்கு சென்று பகுதி நேரத்தில் சட்டக்கல்வியைக் கற்றார். 1943ஆம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்து போராடத் தொடங்கினார். 1956ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகவும் வன்முறையைத் தூண்டியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு மண்டேலாவுடன் சேர்த்து இன்னும் 155 பேர் கைது செய்யப்பட்டார்கள். 1960ஆம் ஆண்டு ஷார்ப்வில் சம்பவத்தில் இவரது 69 போராளிகள் கொல்லப்பட்டார்கள். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி தடை செய்யப்பட்டது, இனி அஹிம்சை வழி பலன்தராது என்று நம்பிய மண்டேலாவும் அவரது நண்பர்களும் ஆயுதமேந்தி போராட முடிவெடுத்து இரகசியமாக நாட்டைவிட்டும் வெளியேறினர். ஆபிரிக்காவின் ஈட்டி எனும் இயக்கத்தை தொடங்குகிறார். 1961 இல் மண்டேலா வன்முறைப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கிறார். புதிய இயக்கத்தின் தலைவராகிறார். பதினேழு மாதகால தலைமறைவு வாழ்க்கைக்கு பிறகு 1962 ஆகஸ்ட் 5ஆம் திகதி கைது செய்யப்பட்ட மண்டேலா ஜொகனஸ்பேர்க் கோட்டையில் சிறை வைக்கப்படுகிறார். ஒக்டோபர் 25ஆம் திகதி வாசிக்கப்பட்ட தீர்ப்பில் ஐந்தாண்டு சிறைத்தண்டனை கிடைக்கிறது. இராஜ துரோக குற்றம் சுமத்தப்பட்டு 1964 ஜூன் 12ஆம் திகதி ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது. ரோபன் தீவில் 18 ஆண்டுகள் சிறைவைக்க உத்தரவிடப்பட்டது. 1968ஆம் ஆண்டு தாயார் மரணமடைந்தபோது அவரின் இறுதிச் சடங்குகளில் கூட பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டது. இனி போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனைக்கு கட்டுப்பட்டால் விடுதலை செய்வதாக 1973, 1983ஆம் ஆண்டுகளில் தென்னாபிரிக்க அதிபர் கேட்டும் அதனை ஏற்க மறுத்துவிட்டார் மண்டேலா. அவரது மனவுறுதி கறுப்பினத்தவர்களை ஒன்றுபட ஊக்கமூட்டியது. நாடெங்கும் போராட்டங்கள் வெடித்தன. மண்டேலாவை விடுவிக்க கோரி உலக நாடுகள் தென்னாபிரிக்காவை நெருக்கத் தொடங்கின, தென்னாபிரிக்காவின் மீது 1986ஆம் ஆண்டு கடுமையான பொருளாதார தடைகளையும் விதித்தன. உலகமே போர்க்கொடி தூக்கிய பிறகு தனது அட்டூழியங்களை உணர்ந்தது தென்னாபிரிக்க வெள்ளையர் அரசு.

இன ஒதுக்கலுக்குள் இருண்டுபோயிருந்த தென்னாபிரிக்காவில் விடிவெள்ளியாக உதித்து, அந்த மக்களின் சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த ஒப்பற்ற பெரியார் மண்டேலா தன் கொள்கைக்காக இருபத்தேழு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துவிட்டு 1990 பெப்ரவரி 11ஆம் திகதி விடுதலை பெற்றார். அதனைத் தொடர்ந்து அன்றைய பிரதமர் டி. கிளார்க் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி மீதான தடையை அகற்றினார். ஜனநாயக அமைப்பை தோற்றுவிக்கும் முயற்சியில் அரசாங்கமும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியும் பேச்சுவார்த்தைகள் நடத்தின. அதே ஆண்டில் இந்தியாவின் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. நெல்சன் மண்டேலா 1991இல் அக்கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டில் இருபத்தொரு ஆண்டு களாக தென்னாபிரிக்காவுக்கு ஒலிம்பிக் கமிட்டி விதித்திருந்த தடையும் நீக்கப்பட்டது. 1993 இல் உலக அமைதிக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. 1994 ஏப்ரல் 26 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் முதன் முறையாக கறுப்பின மக்கள் வாக்களித்தார்கள். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றது. நெல்சன் மண்டேலா மே மாதம் 10ஆம் திகதி தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியாக பதவியேற்றார். அன்றுதான் மண் டேலாவின் தந்தை காட்லாவின் கனவு நனவாகிறது.

நெல்சன் மண்டேலா ஒன்றன்பின் ஒன்றாக மூன்று மனைவிகளை மணந்தார். 1944இல் எவிலின் மேசேயை மணந்தார். இத்தம்பதிக்கு நான்கு பிள்ளைகள். 1958 இல் எவிலினை விவாகரத்து செய்து விட்டு வின்னியை மணந்தார். இத்தம்பதிக்கு இரண்டு பிள்ளைகள். 1998இல் வின்னியை விவாகரத்து செய்துவிட்டு மொசாம்பிகா நாட்டின் முன்னாள் அதிபரின் விதவை மனைவியான கிரேக்கா மேச்சலைதார்.

1998 இல் தென்னாபிரிக்க பாடசாலைகளில் தமிழ், உருது, தெலுங்கு, ஹிந்தி, குஜராத்தி ஆகிய மொழிகளை கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தார்.


1999 இலும் நெல்சன் மண்டேலாவே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு பதவி வகித்ததன் பின் பதவியைவிட்டும் விலகினார். 2013 ஜூன் 08ஆம் திகதி மண்டேலா நுரையீரல் பாதிக்கப்பட்ட நிலையில் பிரிட்டோரியாவிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஜூன் 23ஆம் திகதி அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதென தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேகப் சுமோவின் அலுவலகம் அறிவித்தது. தனது வீட்டில் தங்கி தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்த மண்டேலா, 2013 டிசம்பர் 05 ஆம் திகதி தனது 95ஆவது வயதில் காலமானார். அவர் மறைந்து சென்றாலும் அவர் செய்த தியாகங்களும் போராட்டங்களும் கறுப்பின மக்களின் மனங்களின் நீங்காத நினைவுகளாக என்றென்றும் நிலைத்திருக்கும் என்பது நிச்சயம்.

**சொந்த மண்ணில் தம்மக்கள் அடிமைப்படுத்தப்படுவதையும் கேவலமாக நடத்தப்படுவதையும் அவதானித்த இளைஞன் நெல்சன் மண்டேலாவின் இரத்தம் கொதித்தது. விடுதலை வேட்கை உணர்வு வீர்விட்டுப் பாய்ந்தது. வெள்ளையர்களிடமிருந்து கறுப்பின மக்களை காப்பாற்ற வேண்டுமென்ற துடிப்பும் உத்வேகமும் அவருக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றன.**

எம்.எப்.எம். இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் அணுவொப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முறுகல்



ஈரானுக்கும் அமெரிக்கா உட்பட வல்லரசு நாடுகளுக்குமிடையே கடந்த மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஈரான் தொடர்பான அணு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்தும் முறுகல் நிலை காணப்படுகிறது.


ஒப்பந்தத்தின் படி ஈரானால் 5 சதவீதமான யுரேனியத்தையே செறிவூட்ட முடியும். அதற்காக ஈரான் மீது 6 மாதங்களுக்கு புதிய பொருளாதார தடைகளை அமெரிக்கா விதிக்காது என்பதே அவ் ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும்.

இருப்பினும், அமெரிக்க பாராளுமன்றம் புதிய பொருளாதார தடைகளை ஈரான் மீது விதிக்கக் கோரியது. இதுபற்றி ஈரானின் வெளிவிவகார அமைச்சர் ஜவாத் ஷரீப்: அமெரிக்கா புதிய தடைகள் விதிக்கும் பட்சத்தில் உடன்படிக்கை முறிபடும். நிர்ப்பந்தத்தின் கீழ் பலாத்காரமாக உடன்படிக்கையை செய்ய நாங்கள் தயாரில்லை எனத் தெரிவித்தார்.

காங்கிரஸ் ஏதாவது பொருளாதார தடைகளை விதித்தால் அது அமெரிக்காவின் கடும் போக்கையும் தீர்மானத்தை அடைவதிலுள்ள விருப்பக் குறைவையும் காட்டும். அமெரிக்காவில் இது தொடர்பான குழப்பங்கள் பிரச்சினைகள் இருப்பதை நான் அறிவேன். ஆனால், இவையெல்லாம் நியாயப்படுத்த முடியாது. எங்களுக்கும் பாராளுமன்றம் உண்டு. அதன் மூலம் சட்டங்களை இயற்ற முடியும். உடன்படிக்கையை நிறைவேற்ற தவறினால், நாங்களும் தேவையான சட்டங்களை இயற்றுவோம் என மேலும் அவர் தெரிவித்தார்.

# பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்வதை பிற்போடுமாறு ஜோன் கெரி இஸ்ரேலிடம் வேண்டுகோள்

அமெரிக்க செயலாளர் ஜோன் கெரி இஸ்ரேலிய சிறையிலுள்ள பலஸ்தீன கைதிகளது 3 ஆவது குழுவின் விடுதலையை பிற்போடுமாறு இஸ்ரேலிடம் கோரியுள்ளதாக மாரிவ் செய்தித்தாள் கடந்தவாரம்



செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு ஏற்படுத்தப்படும் தாமதம் காரணமாக பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸிற்கு இஸ்ரேலுடனான சமாதான பேச்சுவார்த்தைக்கு அழுத்தம் கொடுப்பதே ஜோன் கெரியின் நோக்கமாகும் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

என்றாலும் பலஸ்தீன் சிறைச்சாலைகள் அமைச்சர் இஷா கரிகே; இது வரை பலஸ்தீன அதிகார சபைக்கு ஜோன் கெரியுடமிருந்து இவ்விடயம் தொடர்பான எந்தவொரு அறிவித்தலும் கிடைக்கப் பெறவில்லை எனவும் இது இஸ்ரேலின் தந்திரோபாய நடவடிக்கையே தவிர வேறில்லை எனவும் தெரிவித்தார்.

ஜோன் கெரியினால் முன்னெடுக்கப்படும் பலஸ்தீன் - இஸ்ரேலிய சமாதான பேச்சு வார்த்தை தற்போது பின்னடைவை எதிர் கொண்டுள்ள நிலையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

# மண்டேலாவின் மரணத்திற்கு முஸ்லிம் அறிஞர்கள் அனுதாபச் செய்தி



சர்வதேச இஸ்லாமிய அமைப்பு நெல்சன் மண்டேலாவின் மறைவிற்காக தென் ஆபிரிக்க அரசுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் தங்களது ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலையையும் தெரிவித்துள்ளது. சர்வதேச முஸ்லிம் அறிஞர்கள் ஒன்றியத்தின் (lums) தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் மண்டேலாவின் மறைவிற்காக ஆழ்ந்த அனுதாபங்களை வெளிப்படுத்தினர்.

மண்டேலா உலகத்தையும் தனது நாட்டையும் தலைமை தாங்கியதற்காக மாத்திரம் மக்களால் விரும்பப்படாது, அவர் ஒவ்வொரு தனி நபர்களையும் சமூகத்தையும் தொட்டதுடன் அவர்களது விருப்பங்களையும் அச்சங்களையும் கனவுகளையும் செவிமடுத்தார் என கேப் டவுன் பல்கலைக்கழகத்தின் மதங்கள் தொடர்பான கற்கைநெறிக்கான தலைவரும் இஸ்லாமிய கற்கைக்கான பேராசிரியருமான அப்துல்லா தையூப் தெரிவித்தார்.



## பெண்பொலிஸ் அதிகாரிகள் ஹிஜாப் அணிவதற்கு அனுமதி

மேற்கு கனடாவின் அல்பேர்டா மாகாணத்திலுள்ள எட்மொண்டன் நகரில் முஸ்லிம் பெண்பொலிஸ் அதிகாரிகள் ஹிஜாப் அணிவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக புதிய வடிவிலான ஹிஜாபுடன் கூடிய பொலிஸ் ஆடையை தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் சமூகத்திற்கு முஸ்லிம் பெண்கள் தமது பங்களிப்பை வழங்க முடியும் என 'சொறாயா சகி ஹாபிஸ்' என்ற கனடாவின் முஸ்லிம் பெண்கள் அமைப்பின் எட்மொண்டன் [illegible] தலைவர் தெரிவித்தார்.

தொகுப்பு: அலா அஹமட்



# சவூதி - இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் ஜெருஸலத்தில் சந்திப்பு

சவூதி அரேபியாவின் உயர்மட்ட இராணுவக்குழு ஈரானின் அணுத்திட்டம் தொடர்பாக கலந்துரையாட இஸ்ரேலுக்கு இரகசிய விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேலிய வானொலி ஒன்று இது குறித்து தெரிவிக்கையில்: சவூதிஅரேபிய துணைப் பாதுகாப்பு அமைச்சர் அமிர் ஸல்மான் பின் ஸுல்தான் மற்றும் ஏனைய உயர்மட்ட உத்தியோகத்தர்கள் இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தது. ஆனால், இச்செய்தியின் மூலத்தை அவ்வானொலி குறிப்பிடவில்லை. இத்தூதுக்குழு இஸ்ரேலிய உயர்மட்ட இராணுவ அதிகாரிகளை சந்தித்ததாக தெரியவருகிறது.

3 ஆம் உலக நாடொன்றில் இவ்விரு நாட்டு பிரதிநிதிகளிடையே சந்திப்பு இடம்பெற இருந்ததாக ஈரானிய பத்திரிகை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தது.

இத்தகவலை சவூதி அரசு ஏற்கனவே மறுத்துள்ளதாக பிரித்தானிய சன்டே டைம்ஸ் செய் தித்தாள் வெளியிட்டுள்ளது.

# எகிப்தின் அன்னியச் செலாவணி இருப்பு 825 மில்லியன் டொலரால் வீழ்ச்சி




கடந்த ஒரு மாதத்தினுள் எகிப்தினது அன்னியச் செலாவணி இருப்பானது 825 மில்லியன் அமெரிக்க டொலரால் வீழ்ச்சி அடைந்துள்ளதாக எகிப்தின் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஒக்டோபர் கடைசியில் 18.59 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட அன்னியச் செலாவணி இருப்பானது நவம்பர் கடைசியில் 17.76 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்தது. அண்ணளவாக 825 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாதத்தினுள் இழக்கப்பட்டுள்ளன.

நவம்பரில் எகிப்தின் அன்னியச் செலாவணி இருப்பானது எகிப்தின் வெளிநாட்டு கொள்கை மற்றும் பொருளாதார நிலைமைகளால் குறைவடைந்துள்ளது என எகிப்தின் மத்திய வங்கி ஆளுநர் ஹிஷாம் றமீஸ் தெரிவித்தார்.

இதேநேரம் எகிப்தின் ஆட்சி கவிழ்ப்பால் அதனது ஏற்றுமதியானது 8% ஆல் குறைவடைந்துள்ளதாக எகிப்தின் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு பொது அதிகார சபை தெரிவித்துள்ளது.

# சிரிய அகதிகளுக்கு வீட்டுத்திட்டம்



துருக்கிய அதிகாரசபை வீடுகளற்ற சிரிய அகதிகளுக்காக குளிர்காலம் ஆரம்பிக்கும் முன் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க தீர்மானித்துள்ளது.

துருக்கியின் அனர்த்த மற்றும் அவசரகால பணிப்பாளர் நாயகம் கலாநிதி புவாத் [illegible] தமது திணைக்களம் வீடுகளற்ற சிரிய அகதிகளை குளிரிலிருந்து பாதுகாக்க 40000 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணித்து வழங்கவுள்ளதாக தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA




# ஸீஸியின் தோல்விகளும் பன்னாட்டு எதிர்வீச்சும்



சகி பவுஸ் (நளீமி)


எகிப்தின் இராணுவப் புரட்சியை வெற்றிபெறச் செய்வதற்காக ஸீஸி எடுக்கும் அனைத்து வித முயற்சிகளும் தோல்விக்கு மேல் தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கின்றன. அம்முயற்சிகளை அவதானித்த கலாநிதி யூசுப் அல்கர்ளாவி; இராணுவம் தன் கைகளினாலேயே தனக்கு அழிவைத் தேடிக் கொள்வதாகத்தான் எகிப்தில் நான் காண்கிறேன் என்கிறார். இராணுவப் புரட்சிக்கு மார்க்க முலாம் பூசிய முப்தி அலி ஜுமுஆ சமீபத்தில் இலண்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்வதற்கு தயாராக இருந்தார். ஆனால், இலண்டனில் இடம்பெற்ற பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அவர் தனது விஜயத்தை இரத்துச் செய்துள்ளார். இன்னும், சமீபத்தில் மக்கள் பேரலையை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு சட்டங்களை ஜனநாயகத்தின் பெயரால் எகிப்திய இராணுவம் அறிவித்தது. ஆனால், அனைத்தும் வெறும் கடதாசிக் கருப்பெழுத்துக்களே அன்றி, நடைமுறைப்படுத்த முடியாமல் இராணுவம் தவிக்கிறது.

நாட்டின் பொது நிறுவனங்களை கருத்திற்கொண்டு ஆர்ப்பாட்ட தடைச்சட்டத்தை இராணுவம் அறிவித்தது. அச்சட்டத்தை சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் மிகக் கடுமையாக கண்டித்தன. பின்னர், குறித்த சட்டத்தை ஆதாரங்காட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 11 பெண் மாணவிகளை இராணுவ நீதிமன்றம் 11 வருடகால சிறைத் தண்டனை விதித்து சிறைக்குள் தள்ளியது. இதனால், ஆர்ப்பாட்டத்தை அடக்கலாம் என இராணுவம் கனவு கண்டது. ஆனால், பெண் மாணவிகளுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையைத் தொடர்ந்து வீறுகொண்டெழுந்த எகிப்திய பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் நாடளாவிய வேலை நிறுத்தமொன்றை மேற்கொண்டனர். மறுபுறத்தில், பெண் மாணவிகளுக்கு கொடுக்கப்பட்ட சிறைத் தண்டனையை எதிர்த்து சர்வதேச அளவில் பாரிய ஆர்ப்பாட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து சிறையில் தள்ளப்பட்ட பெண் மாணவிகளை மீண்டும் நீதிமன்றத்திற்கு அழைத்து மீள்பரிசீலணை என்றவொரு மகுடத்தில் அவர்கள் குற்றமற்றவர்கள் எனக்கூறி விடுவிக்கப்பட்டனர். நீதிமன்றத்தின் நேர்முரணான இத்தீர்மானங்கள் எகிப்திய இராணுவ நீதித்துறையின் ஒழுங்கீனத்தை சர்வதேசத்தின் முன்னால் அப்படியே தோலுரித்துக் காண்பித்தது. போதாக்குறைக்கு பெண் மாணவிகள் விடுதலை செய்யப்பட்டமை எகிப்திய நீதித்துறையின் சுதந்திரத்தன்மையை எடுத்துக்காட்டுகிறது என எகிப்திய நீதிபதிகள் அறிக்கை வேறு விட்டனர்.

இன்னும், ஜனநாயகமான முறையில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி முஹம்மத் முர்ஸியை பதவி கவிழ்ப்பதில் முன்னின்று உழைத்த இளைஞர் குழுக்களின் தலைவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார். இராணுவத்தினரின் எல்லை மீறிய அடக்குமுறையை கண்டித்து பாதைக்கு இறங்கியமைதான் இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு. இவ்வாறு முர்ஸிக்கு எதிராக உழைத்த அனைத்து இளைஞர் குழுக்களும் மறைமுகமாக இராணுவத்தால் தண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் நாங்கள் முர்ஸியை பதவி கவிழ்த்தமை வரலாற்றுத் தவறு என சிந்திக்க துவங்கியுள்ளனர். எனவே, இவ்விளைஞர் குழுக்களும் இராணுவத்திற்கு எதிராக திரும்பும் பயங்கர சவாலை இராணுவம் எதிர்கொள்கிறது.

சமீபத்தில் எகிப்திய இராணுவ சர்வதிகார அரசாங்கம், சர்வதேசமே இதுவரை அறிந்திராத புதியதொரு சட்டத்தை அறிமுகப்படுத்தியது. இதற்கு சர்வதேச பல்கலைக்கழக வேந்தர்கள் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளனர். அதாவது, பல்கலைக்கழகங்களில் நுழைந்து மாணவர்களை சோதனை செய்வதற்கான உரிமை இர்ராணுவத்திற்கு இருப்பதாக அரசு அறிவித்தமையாகும். இச்சட்டத்தை தொடர்ந்து இராணுவத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் புதியதொரு பரிமாணத்திற்கு திரும்பியது. பல்கலைக்கழக மாணவர்கள் இராணுவத்தின் இச்சட்டத்திற்கு எதிராக களமிறங்கினார்கள். மாணவர்களின் ஆர்ப்பாட்டம் சூடான கட்டத்தை அடையவே, பொறியியல்துறை மாணவர்கள் பலரை இராணுவம் மிகவும் கொடூரமாக சுட்டுத்தள்ளியது. எகிப்திய உள்நாட்டு அமைச்சு, இஃவான்கள்தான் மாணவர்களைச் சுட்டார்கள் இராணுவமல்ல என வழமைபோன்று தன்னை சுத்தப்படுத்திக் கொள்ளும் காரியத்தை ஊடகங்களைப் பயன்படுத்தி சூட்சுமமாக செய்ய முயன்றனர். இங்குதான் ஓர் அதிர்ச்சியளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது: அல்அஸ்ஹர் பல்கலைக்கழத்திலும் இராணுவ சிப்பாய்கள் நுழைந்து மாணவர்களை சோதனை செய்தார்கள். சிலரை கைது செய்தார்கள். மருத்துவத்துறை மாணவன் ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

ஆனால், இர்ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் அல்அஸ்ஹரின் தலைவர் அஹ்மத் தையிப் இஃவான்கள்தான் காரணம் என இராணுவத்திற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்தார். இதேபோன்று கைரோ பல்கலைக்கழகத்திலும் இராணுவம் அட்டகாசம் புரிந்தபோது, அதன் தலைமை பீடமும் தனக்கு சார்பாகவே கருத்து வெளியிடும் என இராணுவம் எதிர்பார்த்தது. அதற்கு மாற்றமாக கைரோ பல்கலைக் கழகத்தின் வேந்தர் உட்பட அதன் உயர் பீடம் இராணுவத்தை கண்டித்து கடுமையான வார்த்தைகளில் அறிக்கையை வெளியிட்டது.



கைரோ பல்கலைக்கழகத்தின் அறிக்கை இராணுவத்தைப் பொறுத்தவரை ஒரு பேரிடியெனலாம். பொதுவாக பல்கலைக் கழக தலைமைகள் தமக்கு சார்பாக நிற்கும் என்பதே இராணுவத்தின் எண்ணம். இதனால், மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை இலகுவாகக் கட்டுப்படுத்தலாம் என ஸீஸி நினைக்கிறார். ஆனால் கைரோ பல்கலைக் கழகத்தின் தீர்மானம் மாணவர்களை இராணுவப் புரட்சிக்கு எதிராக உசுப்பேத்தி விட்டுள்ளது.

எல்லாவற்றையும் விட எகிப்திய இராணுவப் புரட்சியின் வடிவமைப்பாளரான ஸீஸியிக்கு தலைவலியை அதிகரிக்கச் செய்யும் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றுதான் இராணுவப் புரட்சிக்கு எதிராக பன்னாட்டுத் தலைவர்கள் தொடர்ந்தும் கருத்து வெளியிடுவதாகும். பிரேஸில் ஜனாதிபதி: 2014ஆம் ஆண்டு இடம்பெறப் போகும் உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டியின் அறிமுக விழாவுக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகளையே தான் அழைக்கவுள்ளேன் எனக் கூறியுள்ளார். இக்கருத்து முர்ஸியை விடுதலை செய்யவேண்டிய தேவையை வலியுறுத்துவதாகவும் ஸீஸியிக்கு கொடுக்கப்பட்ட மானசீக அடியாகவும் உள்ளது. அர்துகான்: எகிப்திய இராணுவ அரசுடன் எவ்வித உறவுகளும் துருக்கிற்கு தேவையில்லை என குறிப்பிட்டார். 2013 ஆம் ஆண்டுக்கான ஆபிரிக்க ஆசிய முஸ்லிம் நாடுகளுக்கான மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற எகிப்திய இராணுவத்தால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி அத்லி மன்ஸூருக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. அதாவது, மாநாட்டில் கலந்துகொள்ள வந்த எந்த ஆபிரிக்க நாட்டுத் தலைவரும் அவருக்கு கைலாகு கொடுப்பதற்கு மறுத்துவிட்டமையாகும். இந்தப் புறக்கணிப்பு இராணுவ அரசின் உளவியலில் பாரிய பாதிப்பு செலுத்தியுள்ளதாக அரசியல் விற்பன்னர்கள் கருதுகின்றனர்.

சமீபத்திய இரு சம்பவங்கள், எகிப்திய இராணுவப் புரட்சி கடுமையான ஒரு சோதனைக்குள் மாட்டித் தவிக்கிறது என்ற கருத்தை வலுப்படுத்துகின்றன. முதலாவது, எகிப்திய இராணுவ அரசுக்கு எதிராக இன்னொரு சுயேட்சை அரசை எகிப்தின் பிரபலமான அறிஞர்கள் தலைமையில் அறிவிக்கப்படவுள்ளமையாகும். இச்செய்தி உலக இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியத்தின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. எகிப்திய இராணுவப் புரட்சிக்கு கொள்கைவடிவம் கொடுத்த மதச்சார்பற்ற ஊடகவியலாளர் ஹைகல் ஹுஸைன் அண்மையில் வெளியிட்ட கருத்தொன்றில்: ஸீஸி அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்க மாட்டார் என குறிப்பிட்டிருந்தார். ஹைகல் ஹுஸைன் ஸீஸிக்கு மிகவும் நெருக்கமானவர். ஹைகலின் கருத்தானது பல எகிப்திய அரசியல் ஆய்வாளர்களின் ஆழ்ந்த அவதானத்திற்கு உட்பட்டுள்ளது.

மறுபுறத்தில், தற்போது புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள சட்ட யாப்பிற்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஸீஸி தலைமையிலான இராணுவ அரசு தயாராகிக் கொண்டிருக்கிறது. அமர் மூஸாவின் தலைமையில் இருட்டறைக்குள் தயாரிக்கப்பட்ட புதிய சட்ட யாப்பானது, இராணுவத்தை ஐக்கிய நாடுகள் சபையை விட பலமான நிறுவனமாக காண்பிக்கிறது. ஏனென்றால், யாரும் இராணுவத்தை தட்டிக்கேட்க முடியாது என்ற அம்சம் தெட்டத்தெளிவாக யாப்பில் எழுதப்பட்டுள்ளது. இதனை மக்கள் மயப்படுத்தும்போது ஏற்படவிருக்கும் எதிர்ப் புரட்சிகள் எவ்வாறான விளைவுகளை கொண்டுவரலாம்? என்ற கேள்வி இராணுவத்தின் ஈரக் குலையை நடுங்கச் செய்கிறது.

எனவே, ஒரு விடயத்தை சாரம்சமாக குறிப்பிடலாம். அதாவது, முர்ஸி ஆட்சிக் கவிழ்ப்புக்கு உட்படுத்தப்பட்ட போது, மதச்சார்பற்ற ஊடகவியலாளர்கள் இஃவான்களின் கப்பல் மூழ்கிவிட்டது என கேளிக்கையாக எழுதித்தள்ளினர். தற்போது, வீறுகொண்டெலும் மக்கள் மயப்பட்ட போராட்டத்தைக் கண்டு, இராணுவத்தின் நிலை நடுங்க ஆரம்பித்திருக்கின்ற தருணத்தில் இஸ்லாமியவாதிகள் இராணுவத்தையும் மதச்சார்பற்றவர்களையும் நோக்கி, நடுக்கடலில் ஸீஸியின் கப்பலில் ஓட்டை விழுந்துவிட்டது என்கின்றனர். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்கும் இணையம்

நாளுக்கு நாள் இணையத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இணையதளத்தின் பயன்பாடும் தேவையும் இதற்கான காரணங்கள் எனலாம். அதிகரித்துவரும் இணைய தேவைக்கேற்ப இணைய சேவையை வழங்கவேண்டிய தேவையை அதனோடு தொடர்பான நிறுவனங்கள் உணர்ந்தே வந்துள்ளன. இதனால் இணைய சேவை விஸ்தரிப்பதிலும் சிறப்பான சேவையை வழங்குவதிலும் அவை மும்முரமாக ஈடுபடுகின்றன.

இந்தவகையில் இவ்வாறான இணைய சேவை வழங்கும் முயற்சிகள் சிலவற்றைப் பார்ப்போம்.

**Loon Project**

கூகிள் நிறுவனத்தால் உலகம் பூராகவும் இணையத்தை வழங்கும் நோக்கில் செயற்படுத்தப்பட்ட திட்டமே Loon Project ஆகும். உலகின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான கூகிளின் சேவையை பயன்படுத்த வேண்டுமானால் பெரும்பாலும் அவை இணைய இணைப்பையே வேண்டி நிற்கின்றன. இணைய தொடர்பு இல்லாமல் அவர்களின் சேவையைப் பெறுவது சாத்தியமில்லை. எனவே, தமது சேவையை விஸ்தரிக்க அவர்களே முன்வந்து இத்தகைய இணைய சேவையை வழங்குகிறார்கள்.

இராட்சத பலூன்களின் மூலம் 3G சேவை வழங்கப்படுகிறது. உலகில் இருக்கின்ற 2/3 வீதமான மக்களுக்கு இணைய சேவையைப் பெறும் வாய்ப்பே இல்லாமலிருக்கிறது. அவர்களுக்கும் இச்சேவையை அடையச் செய்வதே இவர்களின் இலக்காகும். http://www.google.com/loon என்ற இணைய தளத்தில் இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறமுடியும்.


**internet.org**

அண்மையில் பேஸ்புக் நிறுவனம் Samsung, Ericsson, MediaTek, Opera and Quallcomm போன்ற பெருநிறுவனங்களோடு சேர்ந்து இணைய சேவையை வழங்க முன்வந்துள்ளது. இத்திட்டத்திற்கு Internet.org எனப் பெயரிட்டுள்ளது. உலகில் இன்று 2.7 பில்லியன் மக்களே இணைய இணைப்பைப் பெற்றுள்ளனர். உலகில் இணைய இணைப்பு இல்லாத 5 பில்லியன் மக்களிடம் இணைய இணைப்பை பெற்றுக்கொடுப்பதே இவர்களின் இலக்காகும்.

The future of the world economy is a knowledge economy — the internet, its backbone.

எதிர்கால உலகின் பொருளாதாரம் அறிவுப் பொருளாதாரமே! அதனது முதுகெலும்பாக இருக்கப்போவது இணையமே! என்று அந்த இணையதளத்திலே தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆபிரிக்க நாடுகளில் பெரும்பாலான பிரதேசங்களுக்கு இணைய இணைப்பே இல்லாதிருக்கிறது. இவர்கள் இணையத்தைப் பயன்படுத்துவதற்கு பல்வேறு தடைகள் காணப்படுகின்றன. இணைய சேவையை வழங்கும் நிறுவனங்கள் குறைவு, சேவைக் கட்டணம் அதிகம், இணையத்தைப் பயன்படுத்தும் சாதனங்களின் விலை அதிகம், இணையத்தைப் பயன்படுத்துவதிலுள்ள மொழிரீதியான பிரச்சினை மற்றும் இணையம் தொடர்பான போதிய விழிப்புணர்வு இன்மை என பல காரணங்களை internet.org பட்டியலிட்டுள்ளது. எனவே, இவற்றிலிருந்து விடுவித்து அம்மக்களுக்கும் இணைய பாவனையை வழங்குவதே இவர்களின் இலக்காகக் காணப்படுகிறது.



2012 ஆம் ஆண்டு உலக இணையப் பாவனை விபரத்தை விளக்குகிறது இந்தப் படம்.

இவைதவிர, இணையதளத்தின் சேவையை விஸ்தரிப்பதில் தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களும் மும்முரமாக செயற்படுகின்றன. ■

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org




## இவ்வார சிந்தனைக்கு


நல்ல முடிவுகள் அனுபவத்தில் இருந்து பிறக்கின்றன. ஆனால், அனுபவமே தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கின்றன.

- பில்கேட்ஸ் -

# ஓசோன்படல துவாரத்தை எச்சரித்த விஞ்ஞானி

சூரியனிலிருந்து வெளியாகும் புற ஊதாக் கதிர்களிலிருந்து பூமியை பாதுகாக்கும் ஓசோன் படலத்தில் ஏற்பட்டிருக்கும் துவாரம் குறித்து முதன் முதலாக எச்சரிக்கை விடுத்தவர் இரசாயனவியலுக்கான நோபல் பரிசுபெற்ற ஷேர்வூர் ரோலண்ட் (Sherwood Rowland) ஆவார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பேராசிரியராக இருந்த ரோலண்ட், ஓசோன் படலம் எவ்வாறு பூமியை சூழ அமைந்துள்ளது? சுற்றுச் சூழல் பாதிப்பின் மூலம் அதில் எவ்வாறு துவாரம் ஏற்படுகின்றது என்பது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார். *1974* ஆம் ஆண்டு இயற்கை தொடர்பாக எழுதிய தனது முதலாவது ஆய்வுக் கட்டுரையிலே ஓசோன் படலம் குளோரோபுளோரோக் காபன் துணிக்கைகள் மூலம் பாதிக்கப்படுவதாக எச்சரித்திருந்தார். 3 ஒட்சிசன் அணுக்கள் இணைந்து உருவாகின்ற இந்த ஓசோன் படலம், சூரியனிலிருந்து வெளிவரும் நச்சுப் புற ஊதாக் கதிர்கள் (290 நனோ மீற்றர்களிலும் குறைவான அலை நீளமுடையவை) பூமியை தாக்காது பாதுகாக்கும் பணியைச் செய்கின்றன. இம்மகத்தான தொழிலைச் செய்யும் ஓசோன் படலம் மனிதனின் பல்வேறு முறையற்ற நடவடிக்கைகளால் உருவாகின்ற கரிமச் சேர்ம வளிமங்கள் புவியிலிருந்து 30 கிலோ மீற்றர் தூர வரையுள்ள வளிமண்டலப் படலங்களைச் சிதைவடையச் செய்கின்றமையால் ஏற்படும் தாக்கங்களால் குளோரின் ஒக்சைட்டுக்கள் உருவாகி ஓசோன் மூலக் கூறுகளை நேரடியாக தாக்குகின்றன.



இதனால் ஓசோனின் மெல்லிய படலத்தில் துவாரங்கள் ஏற்பட்டு அதனூடாக புற ஊதாக் கதிர்கள் ஊடுருவி புவியைத் தாக்க வழிசெய்கின்றன என்பதை ஷேர்வூர் ரோலண்ட் தன்னுடைய உதவியாளர் மரியோ மொலினாவுடன் இணைந்து கண்டுபிடித்த இவ்விடத்தை தனது ஆய்வுக் கட்டுரையில் விளக்கியிருந்தார். கட்டுரையில் மும்மொழியப்பட்ட அவரது கருத்துக்களைக் கொண்டு ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ் ஆய்வுக்கட்டுரை வெளியான பின்பே *1985* ஆம் ஆண்டு இரசாயன ஆய்வாளர்கள் அந்தார்டிக்கா கண்டத்தின் மேல் ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்பட்டுள்ளதையும் குளோரோபுளோரோக் காபன் போன்ற வாயுக்களின் தாக்கத்தாலேயே இது உருவாகுவதையும் உறுதிப்படுத்தினர். அதைத் தொடர்ந்தே மேலதிக ஆய்வுகளை இரசாயனவியலாளர்கள் [illegible] றனர்.

அதேவேளை, *1987* ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சர்வதேச உடன்படிக்கையை அடுத்து குளோரோபுளோரோ காபன்கள் CFCFC மீதான சர்வதேச தடைவிதிக்கப்பட்டது. இதன் காரணமாக ஓசோன் துவாரம் கடந்த பத்தாண்டுகளை விட குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஓசோன் படலத் துவாரம் தொடர்பில் எச்சரிக்கை விடுத்த ரோலண்டுக்கு அவருடைய ஆய்விற்காக 20 ஆண்டுகளின் பின்பு *1995* ஆம் ஆண்டே இரசாயனவியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

பார்க்கின்சன் நோய் காரணமாக 2012, மார்ச் 12ஆம் திகதி தனது 84ஆவது வயதில் காலமான ரோலண்ட் வளிமண்டல இரசாயனவியல், வேதிவினை வேகவியல் ஆகிய துறைகளிலும் தனது ஆய்வை மேற்கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

[illegible] உஸ்மான் அகீல்



உலகில் தரையில் வாழும் மிருகங்களில் மிகப்பெரிய உடற்பருமனை உடையது யானைகளாகும். இவை ஆசிய யானைகள் என்றும் ஆபிரிக்க யானைகள் என்றும் இருவகையாகக் காணப்படுகின்றன.

# உடவளவ தேசிய பூங்காவில் குள்ள யானை

குள்ளத்தன்மை (Dwarfism) உலகில் மிகப் பரவலாக அனைத்து உயிரின வகைகளிலும் காணப்படுகிறது. கோழி, நாய், குதிரை, புறா என்று பெரும்பாலான உயிரின வகைகளில் குள்ளமானவை உருவாக்கப்படுகின்றன. இவற்றுக்கு மக்களிடத்தில் பெரும் வரவேற்பும் காணப்படுகின்றன.

குள்ளத்தன்மை என்பது இரு வகையாகக் காணப்படுகின்றது. உடற் பாகங்கள் அனைத்தும் சமமான அளவுடையதாகக் காணக்கூடியது (Propotionate Dwarfism). அடுத்தது உடல் பெரியது, கால் சிறியதாகக் காணப்படும் (Dispropotionate Dwarfism). இவ்வகையில் உருவான உயிரினங்களை உலகில் பல இனங்களிலும் காணமுடியும்.

இவ்வாறு, இயற்கைச் சூழலில் மனிதர்களின் கண்ணுக்குத் தெரியக்கூடியதாக சில மரங்கள், மனிதர்கள், பிராணிகள் என நாம் கண்டுகொள்ள முடியும். ஆனால், காட்டு மிருகங்களில் அவ்வாறு உருவாவது மிகவும் குறைவாகும்.

உலகத்தில் முதற்தடவையாக இயற்கைச் சூழலில் உருவான குட்டையான யானை ஒன்று அண்மையில் இலங்கையின் உடவளவ தேசிய பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த யானையை ரொஹான் விஜேசிங்க தலைமையிலான ஆய்வுக் குழுவினரே கண்டுபிடித்துள்ளதாக கஜா (Gajah) எனும் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் *308* சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட உடவளவ தேசிய பூங்காவில் சுமார் ஆயிரம் யானைகள் வாழ்கின்றன. இந்த யானைகளுள் மிகவும் குள்ளமான ஆண் யானை ஒன்றையே மேற்படி குழுவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த யானை 5 அடி உயரம் மதிக்கத்தக்கதாகவும் கால் மிகவும் குட்டையானதாகவும் உள்ளது. இந்த யானை மதம் பிடித்துக் காணப்பட்டதாகவும் குறைந்தது 20 வயது இருக்கமுடியும் எனவும் அவர்களது அறிக்கையை மேற்கோள் காட்டி அச்சஞ்சிகையில் கூறப்பட்டுள்ளது. இந்த யானையின் உடலின் மேல் துப்பாக்கிச் சூடுகள் காணப்பட்டுள்ளதை அவதானித்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்கரம் பூட்டி அலைகிறது மனசு

வசதியான வீடு, சொகுசான கார், அங்கீகாரமும் அந்தஸ்தும் மிக்க சமூக வாழ்வு கோடி கோடியாக கொட்டக்கூடிய தொழில் தேடுவதிலேயே வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்துவிடும் மனிதனின் உள்ளம் இவற்றை அடைந்துகொண்ட பின்னராவது திருப்தியடைகின்றதா?

இல்லவே இல்லை! இழந்த ஏதோ ஒன்றைத் தேடி மீண்டும் சக்கரம் பூட்டி அலைகிறது மனசு.

சொத்து செல்வங்கள், பணம், பதவி, அழகு, அந்தஸ்து இவை ஒருவருக்கு வழங்கப்பட்டால் நாம் அவரைப்பற்றி என்ன கருதுகிறோம்? அவர் நேரத்துக்குத் தொழுகிறார், நோன்பு பிடிக்கிறார். அதனால் அல்லாஹ் அவருக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கிறான். நாம் செய்யும் நன்மைகளின் காரணமாக அல்லது எமது அமல்களுக்குப் பரிசாக வசதியான வாழ்க்கையும் பணமும் பொருட்களும் கிடைப்பதாக கருதுகிறோம். ஆனால், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய வாழ்வு, வயிற்றில் கல்லைக் கட்டிக் கொண்டிருக்கும் அளவு வறுமை இருந்தது. ஏன், அன்னை பாத்திமா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களது கரங்கள் கஷ்டமிகுதியால் கன்றிச் சிவந்திருந்தன.

வாழ்க்கை சோதனைமிக்கது. எனினும், உள்ளத்தின் நிம்மதியும் இன்பமும் இனிமையும் யாராலும் அடித்துப் பிடுங்கப்பட முடியாதது.

### தாழ்வு மனப்பான்மையை போக்க சில வழிகள்

- நான் அழகானவன் என்பதை முதலில் நீங்களே நம்புங்கள். நிறத்திற்கும் அழகிற்கும் சம்பந்தமில்லை என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். பிறர் ரசித்துக் கூறுவதன் மூலமாகத்தான் நான் அழகு என்று நினைப்பதை நிறுத்துங்கள். உங்களை நீங்களே ரசியுங்கள்.

- எந்த மொழி சரளமாக பேச முடியவில்லை என்றாலும் கவலை கொள்ளாதீர்கள். உங்களை நக்கல் செய்பவரிடம் துணிச்சலாய் எதிர்த்துச் சொல்லுங்கள், இங்கு பலருக்கு அவரவர் தாய்மொழியையே சரியாகப் பேசத் தெரியாதென்று.

- உங்களால் எது முடியாது, உங்களுக்கு எது தெரியவில்லை என்று யாரேனும் சொன்னாலும் அதை விரைவில் கற்றுக் கொண்டு முடித்துக்காட்ட வெறித்தனமாய் முயற்சி செய்யுங்கள்.

- என் வாழ்க்கை சோகம் நிறைந்தது என்று நினைக்காதீர்கள். நிறைவான வாழ்க்கை இங்கு யாருக்குமே அமைவதில்லை.

- உங்களுக்கு எதுவும் தெரியாது; எதிரில் நிற்பவருக்குத்தான் எல்லாமே தெரியும் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். இந்த எண்ணமிருந்தால் நீங்கள் சொல்ல வந்ததை சரியாக, தடுமாற்றமின்றி சொல்லி முடிக்க முடியாது.


- கேள்வி கேட்பதற்கும் உங்களை முன் நிறுத்துவதற்கும் மொழிப் புலமை அவசியம் என்று நினைக்காதீர்கள். உலகில் சரியாக சிந்திக்கவைத்த, கேள்விகளைக் கேட்ட நிறையப்பேர் மொழிப்புலமை இல்லாமல் தங்களுக்கு தெரிந்த வார்த்தைகளைக் கொண்டுதான் தங்கள் கேள்விகளை சரியாக புரியவைத்தவர்கள்.

- அழும்போது தனியாக அழுங்கள். நீங்கள் அழைத்தாலும் சேர்ந்து அழ இங்கு யாருமே வரப்போவதில்லை. துக்கத்தை கரைத்து தூர எறிந்துவிட்டு முன் செல்லுங்கள்.

- உங்கள் அன்பு எந்த இடத்தில் நிராகரிக்கப்பட்டாலும் இழப்பு உங்களுக்கில்லை, அது நிராகரித்தவருக்கே என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

மாற்றத்தை வெளியில் தேடாமல் உங்களுக்குள் தேடினால் தாழ்வு மனப்பான்மையை எளிதில் போக்கி விடலாம்.

ஆதிரா





தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# வலி நிவாரண மாத்திரைகள் உட்கொள்ளும்போது அவதானம் வேண்டும்

Paracetamol (பெரசிடமோல்), இது நம் அனைவருடைய வார்த்தைகளிலும் தினமும் நுழைந்து செல்லும் ஒரு பிரபல்யமான சொற்பதம் என்றால் அது மிகையல்ல. வீட்டைவிட்டு வெளியேறும்போது நாம் எதை எடுக்கிறோமோ, இல்லையோ? ஓரிரண்டு பெரசிடமோல்களை பையினுள் போட்டுக்கொள்ள மறப்பதில்லை. இரண்டு Tablet கள் நம்மோடு இருந்துவிட்டால் இனியேது நோய்கள் என எண்ணிக்கொள்ளும் நம் சமூகத்திடம் நமக்குத் தெரியாத ஒரு பக்கமும் பெரசிடமோலுக்கு உண்டு என்றால் நம்புவீர்களா? ஆம் இதைப்பற்றி தெரிந்துகொள்வது நமக்கு அவசியமாகும்.

நாம் எவ்வகை மருந்தை எடுத்துக் கொண்டாலும் அதற்கென்று ஒன்றிற்கு மேற்பட்ட பெயர்கள் இருக்கும் என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். மருந்துகளின் பெயரீடு இரு வகைப்படும். முதலாவது generic பெயரீடு, உலகளாவிய ரீதியில் அனைவருக்கும் பொதுவான ஒரு தனிப்பெயரீட்டு முறையாகும். இரண்டாவது வகை brand பெயரீடு, குறித்த மருந்துக்கு அதனை தயாரித்து விநியோகிக்கும் நிறுவனத்தினால் வழங்கப்படும் பெயராகும். சந்தைப்படுத்தல் முறையைப் பொறுத்து இப்பெயரின் பிரபல்யம் வேறுபடும். Paracetamol எனப்படுவது ஒரு generic பெயரீடு. இதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு brand பெயரீடுகளுள்ளன. நமது இலங்கையை பொறுத்தவரையில் Panadol, Regamol, Paracitol உட்பட பத்துக்கு மேபட்ட பிரபல brand கள் காணப்படுகின்றன.


Paracitamol ஒரு சிறந்த வலி நிவாரணி மற்றும் காய்ச்சலை குறைக்கும் மருந்தாகும். இது தலைவலி, தசைவலி, Arthritis எனப்படும் மூட்டு வியாதிகள், முதுகுவலி, பல்வலி, தடிமன் மற்றும் காய்ச்சல் போன்ற பல்வேறு நோய் நிலைமைகளுக்கு நிவாரணம் தரக்கூடியது. Paracitamol லை பல்வேறு அளவுவடிவங்களில் சந்தையில் பெறலாம். Suppositories, குளிசைகள், syrups என சிறுவர்களுக்கு வேறாகவும் வளர்ந்தோருக்கு வேறாகவும் பல வடிவங்களில் காணலாம். எவ்வாறாயினும் குறித்த அளவை மீறி பயன்படுத்தும்போது அது உடலுக்கு ஆபத்து விளைவிக்கும். அளவுக்கு மீறிய Paracetamol பாவனையின் ஒரு கொடூரமான விளைவே ஈரல் செயலிழப்பதாகும்.

எனவே, Paracetamol லை பயன்படுத்தும் முன்னர் நாம் கவனிக்கவேண்டிய முக்கிய குறிப்புகள் உள்ளன. நீங்கள் ஏதாவது ஈரல் சம்பந்தமான நோய்களால் பாதிக்கப்பட்டவராயின் கட்டாயமாக Paracetamol லை தவிர்ந்துகொள்ளுங்கள். மேலும், நீங்கள் ஒரு மது பாவனையாளராயின் அல்லது முன்னைய மதுப்பாவனையாளராயிருந்தாலும் சரியே உங்களுக்கு Paracetamol உடலில் நஞ்சாக மாறலாம். ஆகவே கட்டாயமாக இவ்வாறான பிரச்சினைகள் உள்ளோர் Paracetamol உட்கொள்ள முன் அருகிலுள்ள வைத்தியரை அல்லது ஒரு மருந்தகவியலாளரை நாடுவது முக்கியம். மதுவினால் ஈரல் பாதிப்படைவது நாம் அனைவரும் அறிந்ததே. எனவே Paracetamol இவ்விளைவை மென் மேலும் தீவிரப் படுத்தவல்லது. மேலதிகமாக தடிமன், அல்லேர்ஜி மற்றும் வலிகளுக்கான மருந்துகளை உட்கொள்ளுவோர் Paracetamol உட்கொள்ளும் முன்னர் வைத்திய ஆலோசனை பெற்றுக்கொள்வது சிறந்தது. ஏனெனில் அந்த அனைத்து மருந்து குணங்களும் Paracetamol இதனுள் காணப்படுவதால் பயன்படுத்தும்போது அதிகரித்த விளைவைத்தரும்.

Paracetamol லை பயன்படுத்துவதற்கு வைத்திய ஆலோசனை பெறுவது சிறந்த வழிமுறையாகும். மருந்து அளவை கருதினால், வளர்ந்தோர் அதிகமாக ஒரு நேரத்திற்கு, இரண்டு உள்ளெடுக்க முடியும். ஒரு நாளைக்கு 8 மாத்திரை களைவிட அதிகரிக்க வேண்டாம். இரண்டு வயதிற்கு குறைந்த குழந்தைகளுக்கு Paracetamol வழங்குவதாயின் வைத்திய ஆலோசனை கட்டாயமானதாகும்.

➡ 16

சப்னா பின்தி ஹுசைன்
இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்
பேராதனை பல்கலைக்கழகம்.






சமூக உளவியல் தொடர் 19

## நினைவாற்றலை அதிகரிக்கச் செய்ய வேண்டியவை

01. மனதை ஒருநிலைப்படுத்துதல்

தொழுகை, யோகாசனம், தியானம், சமய வழிபாடுகளில் ஈடுபடல் போன்றவை மூலமாக ஆரோக்கியமான மூளைகளில் தகவல்களை குடியேற்றம் செய்வதன் மூலம் சிறந்த நினைவாற்றலை பெறமுடியும்.

02. உடற்பயிற்சி

03. மூளைக்கு பயிற்சி வழங்குதல்

குறுக்கெழுத்துப் போட்டி, எண்புதிர், அயல் மொழிகளைக் கற்றல் போன்றன சில உதாரணங்களாகும்.

04. போசாக்கான உணவு (குறிப்பாக, காய்கறிகள், பழ வகைகள்)

05. போதியளவு உறக்கமும் ஓய்வும்

06. முதிய வயதிலும் ஏதாவது பணிகளை செய்தல்.

வயது செல்லச் செல்ல நினைவாற்றல் குறைவடையும். பணியில் ஈடுபட்டிருப்பவர் ஓய்வுபெற்ற பின் விரைவில் நோய்களுக்கு ஆளாவது இயற்கை. தொடர்ந்து ஏதாவதொரு பணியில் ஈடுபட்டிருந்தால் மூளைக்கு வேலை கிடைக்கும் நினைவாற்றலோடு ஆரோக்கியமும் மேன்மையடையும்.

07. தேவையான அளவு நீர் அருந்துதல் வேண்டும்.

08. மருத்துவரீதியில் துளசி இலையை தண்ணீரில் ஊறவைத்து அந்த நீரைக் குடிப்பதால் ஞாபக சக்தி அதிகரிக்கும்.

09. அதிகாலை நேரத்தில் வெறும் வயிற்றில் பதினைந்து கருஞ்சீரக விதைகளைமென்று தின்று வருதல் வேண்டும்.

10. தூதுவளை, கீரையை, குழம்பு மற்றும் பொரியல் செய்து வாரத்துக்கு ஒரு தடவை சாப்பிட்டு வந்தால் மூளைக்கு வலிமை கிடைக்கும்.

11. பசுமையான வில்வ இலையை அரைத்து சாறெடுத்து குடித்துவந்தால் ஞாபகமறதி நீங்கி நினைவாற்றல் அதிகரிக்கும்.

மாவனல்லை எம்.வய்.எப். சியாமா
மெய்யியல் உளவியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி நிவாரண...

(15ஆம் பக்கத் தொடர்)

Paracetamol syrup இனை பருகும் போது எப்போதும் விசேட அளவு குறிக்கப்பட்ட கரண்டிகளை பயன்படுத்துங்கள். வீட்டுப் பாவனைக்குரிய மேசைக்கரண்டி ஒருபோதும் உகந்ததல்ல. Teblets கையாளும்போது கைகள் உலர்ந்திருப்பது அவசியமாகும். ஒரேயடியாக விழுங்குவதை விட நாக்கில்வைத்து விழுங்குவது மெதுவாக கரைந்துசெல்ல வழிவகுக்கும் சிறந்தமுறையாகும்.

Paracetamol உட்கொண்டபின் ஏதேனும் பக்கவிளைவுகள் காணப்படின் உதாரணமாக, இலேசான காய்ச்சலுடன் வாந்தி வருவதுபோன்ற உணர்வு, வயிற்று வலி, பசியின்மை, கடும் நிறத்தில் சிறுநீர் போக்கு, கடும் நிற மலம், தோல் மற்றும் கண்கள் நிறமாதல் என்பன காணப்படின் உடனடியாக வைத்தியரை நாடுங்கள்

Paracetamol இன் அதிகரித்த பாவனை இலங்கையில் மிகப்பெரிய ஒரு பிரச்சினையாகும். இலங்கை சுகாதார அமைச்சின் ஆய்வறிக்கை: இலங்கையில் 2012 ஆம் ஆண்டில் மட்டும் 820 மில்லியன் Paracetamol teblet களை பயன்படுத்தியிருக்கிறார்கள். அதில் 520 மில்லியன் Teblet கள் அரசாங்க மருத்துவமனைகளில் விநியோகிக்கப்பட்டுள்ளன. முன்னைய வருடங்களோடு ஒப்பிடும்போது இது 250 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகிறது. மேலும் ஒரு நாளைக்கு 1.5 மில்லியன் Teblet கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் சுகாதார அமைச்சு அனைத்து மருத்துவ நிபுணர்களிடமும் பொதுமக்களிடமும் இதனை கருத்திற் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

Paracetamol பயன்பாட்டை சீர்படுத்த புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். சிகரட் பைகளில் காணப்படும் சிகரட் புற்றுநோயை உண்டாக்கும் என்ற வாசகத்தைப்போல் அனைத்து Paracetamol பைகளிலும் Paracetamol இன் அதிகரித்த பாவனை ஈரலை செயலிழக்கச் செய்யும் எனச் சேர்ப்பதுகூட மிகையல்ல என இலங்கை அழகு சாதனங்களை வகைப்படுத்தல் மற்றும் மருந்துப்பொருட்கள் அதிகார சபை (CDDA) இன் பணிப்பாளர் ஹேமானந்த பெனாரகம தெரிவித்தார். அந்தளவுக்கு Paracetamol இன் பாதிப்பு மிகைத்து விட்டது எனலாம். ஆகவே, இனியாவது வலி எடுக்கும் முன்னரே Paracetamol லை போட்டுக்கொள்ளும் பழக்கத்தை விட்டு விட்டு சுகாதாரத்தைப் பேணிக்கொள்வோம்.

## தொடர்ந்து தோற்று...

முன் பக்கத் தொடர்

இப்பட்டியலில் இன்னும் சில உள்ளூராட்சி சபை களும் இணைந்து கொள்ளலாம் என்ற கருத்தும் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறித்த அனைத்து உள்ளூராட்சி சபைகளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பான ஆளுங்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய சபைகளாகும். எனவே, இத் தொடர்ச்சியான தோல்வி கிராமமட்டத்தில் இருந்து அரசாங்கத்தின் எதிர்கால தோல்விக்கான எடுத்துக்காட்டுகளாக இருக்குமோ எனவும் கருத்து வெளியிடப்படுகிறது.

அதேவேளை, இதுகுறித்து அரச உயர் மட்டங்கள் கணக்கின்றி இருப்பதைப் பார்க்கும்போது இந்நடவடிக்கைக்கு எதிராக அரசாங்கத்தின் திட்டமிட்ட நோக்கமொன்று இருப்பதாகவும் சந்தேகம் வெளியிடப்படுகிறது.

அண்மைக்காலமாக நாட்டில் நடக்கும் கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் பலர் ஈடுபட்டு வந்தனர்.

இது நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் அரசாங்கத்துக்கு பெரும் அவமானத்தையும் நெருக்கடியையும் ஏற்படுத்தியிருந்தது. இருந்தும், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட தலைவர்களை பதவிநீக்கம் செய்வதில் அரசியல் ரீதியான சில சிக்கல்களையும் எதிர்கொண்டது. எனவே, வரவு-செலவு திட்டத்தை தோற்கடித்து சில உள்ளூர்த் தலைவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கான மறைமுகத் திட்டமொன்று இடம்பெறலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்படுகிறது.

## றியாழ் மௌலவியின் ...

முன் பக்கத் தொடர்

தன்னுடைய 80 ஆவது வயதில் இறையடி சேர்ந்த மௌலவி றியாழ் அவர்கள், இலங்கை மண்ணில் அகீதாவை பேணுவதிலும் இஸ்லாமிய தூதை எத்திவைப்பதிலும் காத்திரமான பணிகளை மேற்கொண்டவர். இலங்கையில் தூய ஏகத்துவ சிந்தனையை பரப்புவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டவர். அவருடைய நல்லமல்களை ஏற்று பாவங்களை மன்னித்து ஜன்னதுல் பிர்தவ்ஸ் எனும் சுவனத்தை வழங்க உலக இஸ்லாமிய அறிஞர் ஒன்றியம் உட்பட அனைவரும் அல்லாஹ்வை பிரார்த்திக்கிறோம் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## விவசாய....

(09ஆம் பக்கத் தொடர்)

அதனால்தான் பௌத்த பிக்குகள் சிலரினால் இங்குள்ள தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவருமே வந்தேறு குடிகள். இவர்களுக்கு சம உரிமை, விசேட சலுகைகள் வழங்கப்படத் தேவையில்லை என்று பகிரங்கமாகக் கருத்துக்கூற முடிகிறது. முன்னர் இனவாதம் இந்நாட்டில் தலைதூக்கிய சமயங்களில் கூட இவ்வாறான கருத்துக்கள் இவ்வளவு வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டது கிடையாது.

எனவே, 50 ஆயிரம் மாடிவீட்டு திட்டம் என்பது பெரும்பாலும் அறிவிப்பாகவே இருந்துவிட்டுப் போகும் என்பதே பலரின் கணக்கு.

இருப்பினும் ஒரு விவசாய சமூகத்துக்கு வீட்டைச் சுற்றி காணியுடன் கூடிய தனித் தனி வீடுகளே பொருத்தமான திட்டமாக இருக்கும் என்பதை இந்தக் கட்டதிலாவது மலையகக் கட்சிகள் ஒருமித்த குரலில் தெரிவிக்க முன்வர வேண்டும் என்பதை சொல்லிவைக்க விரும்புகிறோம்.

## பெண் நாய்...

முன் பக்கத் தொடர்

இந்த நாய்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் நாய்க்கடியினால் ஏற்படும் ரேபீஸ் உள்ளிட்ட நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் நாயின் சொந்தக்காரர்களுக்கு உரிமம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் நாய்களுக்கு வரிவிதிக்கப்பட்டிருந்தது. அதே திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவித்தார்.

## கக்கூஸ் வரியும்...

முன் பக்கத் தொடர்

2005 ஆம் ஆண்டில் 1.8 டிரில்லியனாக காணப்பட்ட கடன், எட்டு ஆண்டுகளில் 6.6 டிரில்லியனாக உயர்வடைந்துள்ளது.

உலகில் ஆகக்கூடுதலான பணச்செலவுடன் இங்குதான் வீதிகள் அமைக்கப்படுகின்றன. இது அபிவிருத்தி என்ற பெயரிலான ஊழலேயன்றி வேறில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## குருணாகல்...

முன் பக்கத் தொடர்

இதையடுத்து நிரந்தரக் குடியிருப்புகளை அமைத்துக்கொண்ட இப்பிரதேச முஸ்லிம்கள் நிரந்தர வதிவிடத்துக்கான அனைத்து அரச பதிவுகளுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இரண்டு தலைமுறையாக எந்தவொரு இடையூறுகளுமின்றி வசித்து வந்த தமது காணிகளை சுவீகரித்து, கண்டியிலுள்ள பௌத்த விஹாரைக்கு வழங்க எடுத்திருக்கும் இந்நடவடிக்கை தமக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

எனவே, இது தொடர்பில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் உடனடியாகத் தலையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நியாயமான தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமென பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கொழும்பிலுள்ள...

(10ஆம் பக்கத் தொடர்)

சனல் 4 க்கு இலங்கை வர அனுமதியளித்தது அரசாங்கம். அதற்கெதிராக இந்த ஞானசார தேரர் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று கோஷமிடவில்லை. அதுபற்றி அவர் எந்த எதிர்ப்பும் தெரிவிப்பதுமில்லை. எனவே, பொதுபலசேனா அரசாங்கத்திற்குத் தேவையான விடயங்களைச் செய்யும் கொந்தராத்துக்காரர்கள் என்பது சிங்கள மக்கள் மத்தியிலும் நன்கு உணரப்பட்டிருக்கிறது.

**கேள்வி:** கொழும்பில் கசினோ நிலையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளீர்கள். இந்த கசினோவை நிறுவும் அரசின் செயற்பாடு குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** இன்று, கொழும்பிலுள்ள பெரியதொரு பிரச்சினையாக இந்த கசினோ மாறியிருக்கிறது. அரசாங்கம் கட்டானையில் கசினோவை நிறுவப்போவதாக தகவலொன்று வெளியானது. கட்டானை கிரிஸ்தவர்கள் அதிகம் வாழ்கின்ற பிரதேசம். அப்போது பேராயர் மல்கம் ரஞ்ஜித் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக அறிக்கையொன்றை வெளியிட்டார். பின்னர், நாம் கட்டானையில் கசினோ கிளப் நிறுவப் போவதில்லை என அரசாங்கம் தெரிவித்தது. இந்த பேராயர் மல்கம் ரஞ்சித்துக்கு இருக்கிற தைரியம்கூட எமது சில உலமாக்களுக்கு இல்லாமல் இருக்கிறது என்பதுதான் கவலையாகவுள்ளது. நாம் எமது தரப்பில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருக்கிறோம்.

சிங்கள மக்கள் மத்தியிலும் இதற்கான அதிருப்திகள் கிளம்பியிருக்கின்றன. அண்மையில் சோபித தேரர் தலைமையிலான பிக்குகள் இணைந்து கசினோவுக்கு எதிராக கொழும்பில் கூட்டமொன்றை நடத்தினார்கள். இவ்விடயத்தை சிங்கள மக்கள் மாத்திரமல்ல முஸ்லிம்களாகிய நாமும் இணைந்துதான் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். இந்த கசினோ நாட்டிலுள்ள எல்லா மக்களுடைய மார்க்கத்துக்கும் கலாசாரத்திற்கும் எதிரான விடயமாகும்.

**கேள்வி:** ஐக்கிய தேசியக் கட்சியில் அண்மைக்காலமாக தலைமைத்துவப் போட்டிகள் நிலவுகின்றன. இதனால் பலர் மத்தியிலும் அதிருப்திகள் நிலவுகின்றன. இந்நிலைமை கட்சியைப் பலவீனப்படுத்தாதா?

**பதில்:** கட்சிகளுக்கு பிரச்சினைகள் வருவது வழக்கம். அதேபோல்தான் இக் கட்சியிலும் பிரச்சினைகள் இருக்கின்றன. இதன் காரணமாக பலர் கட்சியைவிட்டும் வெளியேறினார்கள். இதுவிடயமாக கட்சி கூடியகவனம் செலுத்துகிறது. கட்சியில் ஏற்பட்டிருக்கும் தலைமைத்துவப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தலைமைத்துவக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டு பெருமளவு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. கட்சியிலுள்ள ஒரு சிலருக்கு இவ்விடயம் தொடர்பில் திருப்தியில்லாமல் இருக்கிறது. அவர்களோடும் சமரச பேச்சுக்களுக்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. பெரும்பாலும் இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு எதிர்காலத்தில் கட்சி நல்லபடியாக வழி செல்லும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

## பயங்கரவாதம் ஒழிக்கப்...

(03 ஆம் பக்கத் தொடர்)

நல்லெண்ணங்களோடு செயல்படும் சூழலொன்றை மலரச்செய்ய முன்வர வேண்டும் எனவும் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

04. சமூகத்திலும் நாட்டிலும் தீமைகளும் வன்முறைகளும் அதிகரித்துச் செல்லும் ஓர் ஆபத்தான சூழல் உருவாகி வருகிறது. இது விடயத்தில் இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் நம்மவர்கள் ஒன்றிணைந்து கைகோர்த்து செயல்பட வேண்டிய தன் அவசியத்தை மாநாடு வலியுறுத்துகிறது. நல்லவர்கள் கைகோர்த்துக் களத்தில் நிற்கத் தவறினால் தீமைப் புயல் அவர்களையும் அடித்துச் சென்றுவிடும் என்பதே வரலாறு.

ஒரு சோதனையை அஞ்சிக்கொள்ளுங்கள். (அது வந்தால்) உங்களில் பாவம் செய்த அநியாயக்காரர்களை மட்டும் அது காவுகொள்ளாது... என இந்த உண்மையை அல்குர்ஆன் பிரகடனம் செய்துள்ளது.

05. இன நல்லிணக்கம் நாட்டின் இன்றைய முன்னுரிமைகளுள் ஒன்றாக ஆக்கப்பட வேண்டும் என்பதை மாநாடு வலியுறுத்துகிறது. காலனித்துவவாதிகள் ஆட்சிசெய்த நாடுகள் அனைத்திலும் பிரித்தாளும் கொள்கையை அமுல்நடத்திய அவர்கள் அங்குள்ள இனங்களையும் சமூகங்களையும் மோதவிட்டுக் குளிர் காய்ந்தார்கள். தங்களது நலன்களுக்காக அவர்கள் விரித்த அந்த சதிவலை இன்னும் அகற்றப்படவில்லை. இந்த சதிவலையில் கடந்த முப்பது வருடங்களாக நாடு சிக்கித் தவித்துள்ளதை உணராதவர்கள் யாருமில்லை. மீண்டும் அவ்வாறானதொரு சூழல் நாட்டில் ஏற்படுவதை அனைத்து இனங்களும் சமூகங்களும் முற்றாக நிராகரிக்க வேண்டும். அந்த சிறப்பு நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் இன நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் சமூகங்களிடையே மலரச் செய்வது அனைவரதும் கடமையாகும். ஒவ்வோர் இனத்திலுமுள்ள கடும் போக்குவாதிகளும் சுயநலமிகளுமே இன நல்லிணக்கத்தை பலவீனமடையச் செய்கிறார்கள். அவர்களை சமூக அரங்கிலிருந்து ஒதுக்கிவிட அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். இத்தகைய கடும் போக்குவாதிகளின் பிரச்சினைகளை சமூகங்களுக்கிடையிலான பிரச்சினைகளாக நாம் மாற்றிக்கொள்ளாமல் எச்சரிக்கையுடன் செயல்படவும் வேண்டும்.

06. சர்வதேச சக்திகள் நமது நாட்டினுள் ஊடுருவல் செய்வதையும் நாட்டின் நலன்களை பாதிப்படையச் செய்வதையும் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. நாட்டின் பிரச்சினைகளை நாட்டின் மக்கள் என்ற வகையில் எமக்குள்ளேயே தீர்த்துக்கொள்ளும் பொறிமுறையொன்று தயாராகுமிடத்து வெளி அழுத்தங்களை எதிர்பார்க்கும் சிறுபான்மை சமூகங்களின் மனப்பாங்கில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும்.

07. சர்வதேச முஸ்லிம் உம்மத்தின் இன்றைய நிலை குறித்து ஆழ்ந்த கவலையையும் அந்த அவலங்களிலிருந்து விரைவான மீட்சி கிடைக்கப்பெற வேண்டும் என்ற எல்லையற்ற ஆவலையும் மாநாடு வெளிப்படுத்துகிறது. பலஸ்தீன், எகிப்து, சிரியா, ஈரான், ஆப்கான், பங்களாதேஷ் போன்ற முஸ்லிம் நாடுகளில் மக்களைக் கொன்று குவிக்கும் அக்கிரமக்கார ஏகாதிபத்திய சக்திகளைத் தண்டிக்காமல் காலம் விட்டுவைக்கப் போவதில்லை. எனினும், அந்த சக்திகள் வல்லரசுகளின் பின்புலங்களோடு இயங்குகின்றன. அவற்றின் தலைவிதிகளைத் தீர்மானிக்கும் வல்லமை படைத்த அல்லாஹ்விடம் முஸ்லிம் சமூகம் கரமேந்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழுகைதோறும் பிரார்த்திக்குமாறு மாநாடு வேண்டிக்கொள்கிறது.

## பொது அறிவு தெரியாத...

முன் பக்கத் தொடர்

ஓர் அமைப்பை நடத்தும் துறவிகள் இனிமேலாவது இன, மதவாத கருத்துகளைக் கூறாது கௌதம புத்தர் அருளிய, ஒரு துறவிக்குரிய பண்புடன் தன்னுடைய அமைப்பை வழிநடத்துமாறும் தமிழ் பௌத்த சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யுத்தத்திற்கு பின் ஜனாதிபதி எமது நாட்டில் இன, மத வேறுபாடற்ற ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக தன்னை அர்ப்பணித்து செயலாற்றிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் ஜனாதிபதிக்கும் நாட்டிற்கும் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் இனவாத கருத்தை தெரிவித்துவரும் பொது பலசேனாவின் கருத்துக்களை வன்மையாக கண்டிப்பதாகவும் யாழ் தமிழ் - பௌத்த சங்கம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புறவியல்

ஏ.எம்.எம். ஸியாத் - இறக்காமம்

## கிழக்குத் தென்கோடி

(சென்ற இதழின் தொடர்)

### இறைநம்பிக்கை பாடல்கள் / ஏகத்துவ பாடல்கள்

இறைவன் ஏகன், அவனுக்கு நிகர் அவனே. என்றே கோட்பாடும் நம்பிக்கையும் கொண்ட முஸ்லிம்களின் வாய்வழிப் பாடல்களில் இறைநம்பிக்கை வெளிப்பாடுகள் இடம்பெறுவது அபூர்வமான விடயமன்று.

இங்கே ஐந்தாறு பெண் பிள்ளைகளைப் பெற்ற பெண்ணொருத்தி கணவனை இழந்த நிலையில், தனது குமர் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி இறைவனிடம் முறையிட்டு நிற்கும் அழுகையும் அவளது நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்ற நாட்டுப் பாடலொன்றைப் பார்ப்போம்:

*அல்லாஹு ¬ என்று*
*அனுதினம் நானிருந்து*
*பதறி அழுதன் மக்காள் - ஒங்கட*
*பங்குகள நான் தேடி*



நல்லடியார்களை இறைவன் சோதித்துப் பார்ப்பதும் அதில் அவர்கள் வெற்றி கொள்ளும் விதமும் அதற்காக இறைவன் வழங்கிய பரிசுகளும் பற்றி வரலாறுகள் ஊடாக அறிகின்றோம். அதேபோன்று, ஒரு பெண்ணிற்கு திருமணம் கைகூடி சில சமயங்களில் அது நிறைவேறாமலே போவதுமுண்டு. இது இறைவனின் சோதனை என அவள் ஏற்றுக்கொள்ளும் மாண்பினையும் பக்குவத்தையும் மற்றொரு பாடல் புலப்படுத்தி நிற்கிறது.

*ஆதி பெரியவனே*
*எங்கள் ஆளும் ரகுமானே*
*சோதினகாரா*
*பொருந்திணண்டா ஒண்ட சோதனய*

திருமண பந்தத்தின் விளைவுகளில் ஒன்று குழந்தை. திருமணமான பெண்கள் குழந்தைப் பாக்கியத்தை எதிர்பார்ப்பதும் தனது தாய்மையை வெளிப்படுத்தவும் விரும்புவது மனித இயல்பே. ஆனால், இந்தப் பெண்ணிற்கு அது வெறும் கனவாகவே ஆகிவிடுகிறது. இறைவனை நோக்கி அவளது கைகள் உவர்கின்றன. அவளது நாவில் சூழலுடன் இயைந்த வார்த்தைகள் உந்திக் கிளம்பி வருகின்றன.

*அல்லையில பன்புழுங்கி*
*ஆபரணப் பாய் எழச்சி*
*போட்டுப் படுக்க ஒரு*
*புள்ளயத் தா ரகுமானே*

வயலும் வயல்சார்ந்த இடம் மருதம் ஆகும். மருத நிலச் சூழல் மிகுந்திருக்கும் பகுதிகளில் வயலோடு தொடர்புடைய பல தொழில்கள் காணப்பட்டன. வரம்பு கொத்துதல், வரம்பு கட்டுதல், அரவடித்தல், பலகையிழுத்தல், விதைத்தல், அளை போடல், எண்ணெய் அடித்தல், புல் புடுங்குதல், வெள்ளாம வெட்டுதல், உப்படி புரட்டுதல், கட்டுக் கட்டுதல், சூடடித்தல் என பலவற்றைக் குறிப்பிடலாம். அவற்றுள் பெண்களும் தமது குடும்பச் சுமைகளைப் போக்குவதற்காக சில வேலைகளில் ஈடுபடுவர். குறிப்பாக, புல் புடுங்குதல், உப்பட்டி புரட்டுதல் முதலானவற்றைக் குறிப்பிடலாம். தொடர்ச்சியாக குனிந்து நிமிர்ந்து, குனிந்து நிமிர்ந்து செய்யும் வேலையாக இருப்பதால், இது இடுப்பு வலியை ஏற்படுத்தக்கூடிய கடினமான தொழிலாகவே காணப்படுகின்றது. தனது வறுமையை போக்கிக்கொள்ள காலங்காலமாக புல் புடுங்கும் தொழிலைச் செய்யும் ஒரு ஏழைப் பெண்ணின் வாய்விட்டுச் சென்ற பாடலில், 'இறைவனின் விதி இப்படி இருந்தால்' நாம் என்ன செய்யலாம்? என்ற தொனி வெளிப்பாட்டை பின் வரும் பாடலில் நன்குணரலாம்:

*புல்லுப் புடுங்கி*
*பொறகாலதான் மேச்சி*
*அள்ளிச் செமக்க இந்த*
*ஆதி உட்ட கட்டளையோ?*

### தாலாட்டுப் பாடல்கள்

நாக்கை அசைத்துப் பாடும் பாடல்களை தாலாட்டு என்பர். இப்பாடல்களில் காணப்படும் ஓசையும் இசையும் குழந்தையை அமைதிப்படுத்தி தூங்கச் செய்துவிடுகிறது. இத்தகைய பாடல்கள் வெவ்வேறு பிரதேசங்களிலும் வெவ்வேறு விதமாக சிற்சில மாற்றங்களுடன் பாடப்படுகின்றன.

*ஆராரோ ஆரிராரோ*
*ஆராரோ ஆரிராரோ*
*ஆரகண்ட ஆராமுதே*
*ஆராரோ ஆரிராரோ*

*தெள்ளமுதும் உண்டாம்*
*தெவிட்டாத கனியும் உண்டாம்*
*உள்ளங்குளிர உரையாடும்*
*பைங்கிளியே*
*கண்மணியே கண்ணுறங்கு*

*பாலை வேண்டினையோ*
*பலகாரம் வேண்டினையா*
*தேனை வேண்டினையோ*
*தினமாவும் வேண்டினையோ*
*கண்ணே என் கண்மணியே*
*கண்ணுறங்கு கண்ணுறங்கு*

கிராமங்கள் இயற்கையிலேயே வளம் மிக்கனவாகத் திகழ்ந்தன. கிராமத் தாய்க்கு தேனும் தெவிட்டாத கனிகளும் இலகுவாகவே கிடைத்தன. அவற்றின் இனிமை சொல்லவியலாதவை. அவற்றை குழந்தைகள் விரும்பி உண்ணுவர். இதையறிந்த தாயானவள் அவற்றை பாடலினுள் உள்வாங்கிப் பாடி மகிழ்விக்கிறாள். மேலும், பிள்ளை விரும்பும் உணவுகளைக் கூறி, எது வேண்டுமோ அதனைக் கேட்டு உண்டுவிட்டு உறங்கு … உறங்கு… என ராகமமைக்கிறாள் தாய்.

*உஞ்சு உஞ்சு நாய்க்குட்டி*
*ஊராவூட்டு நாய்க்குட்டி*
*வாழப் பத்தைக்க தண்ணீரிக்கி*
*வாத்துக் குடிச்சிக்க நாய்க்குட்டி*
*கள்ளன் வந்தாக் கொரச்சிக்க*
*கண்மணி கதிசாவப் பாத்துக்க*

நாட்டார் பாடல் படிப்பதற்கு இலேசானதல்லவா? ஆனால், அது புலப்படுத்திவிடுகின்ற பண்பாட்டு அம்சங்களும் கிராமத்து வாழ்வியல் முறைகளும் பலவாகும்.

வீட்டில் நாய் வளர்ப்பதை யாரும் பெரிதாக விரும்புவதில்லை என்பதை 'ஊராவூட்டு நாய்க் குட்டி' எனும் தொடர் மூலமாகவும் வாழைகள் நிறைந்திருக்கும் இடத்தில் மண்குடத்தில் நீர் நிறைத்து குளிர்ச்சியடைவதற்காக முடிவைப்பதும் திருடர் தொல்லைகள் கிராமப்புரங்களில் அதிகம் இருந்தமையையும் அவனுக்கு மக்கள் அஞ்சுவதையும் நாய் குரைத்து திருடனைக் காட்டிக்கொடுக்க, அவனை ஊரிலுள்ள வலிமையானோர் பிடித்து அடிப்பதும் கிராமத்து சம்பவங்களாகும். இவையனைத்தையும் ஒரு சிறிய பாட்டினுள்ளே வைத்து ஊர்க்கதை கூறுவது போல், பாடலைப் பாடி பிள்ளையை உறங்க வைப்பது மண்வாசனையை வாரிச் சொரிகின்றது.

# புரூணையில் சில நாட்கள்…

தொடர்-16



—— பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com

பணக்காரனாகும் நோக்கில் மண்வெட்டியுடன் காத்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.


அது சரி, மன்னார் கடலிலே மண்ணெண்ணை வருகிறது என்றார்களே, தோண்டுகிறார்களா? என்று புரூணையில் வைத்து இலங்கை நண்பரொருவர் கேட்டார்.

அதெல்லாம் வெறும் பூச்சாண்டி என்று அப்போது நான் சொன்னது உண்மைதான் என்று அந்த நண்பருக்கு இப்போதாவது தெரிந்திருக்கும்.

உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? மன்னார் கடற்பரப்பில் பெற்றோலிய வளம் உள்ளதாகவும் அதனை அகழ்வதற்காக இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்திருப்பதாகவும் அறிக்கை விட்டார்களே. போதாக்குறைக்கு, இன்னும் சில வருடங்களில் நாமெல்லாம் சஊதி அரேபியா போன்று கொடிகட்டிப் பறக்கலாம். இனி றிஸானாக்கள் சஊதிக்கு வேலை வாய்ப்பு தேடி போகத் தேவையில்லை. சஊதிக்காரன் வேண்டுமானால் நம்மிடம் வேலைக்கு வரட்டும் என்றெல்லாம் சட்டைக் குளரை உயர்த்தி கற்பனை வளர்த்துக்கொள்ள வைத்தார்களே ஞாபகம் இருக்கிறதா?

இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்று நினைக்கிறீர்களா?

மீன்பிடி மூலம் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் அன்றாடம் கஞ்சியோ, கூழோ குடித்து வாழ்கை ஓட்டிவந்த புரூணைக்காரர்களுக்கும் 1970 களில் இப்படியொரு கதை விடப்பட்டது.



நீங்கள் மீன்பிடிக்கும் கடலில் தண்ணீர் மட்டுமல்ல அதற்கடியில் பெற்றோலும் இருக்கிறது என்று சொன்னபோது, நம்மைப் போல் கற்பனையில் மட்டும் மிதக்காமல் உடனே மண்வெட்டியை எடுத்தார்கள்.

இனியென்ன? தோண்டத் தோண்ட பெற்றோல்தான்!

மிகப்பணக்கார நாடுகளில் ஒன்றாகத் திகழும் புரூணைக்காரர்களுக்கு சோறு போட்ட கடல் பெற்றோலையும் கொடுக்கிறது.

சரி, உலகிலுள்ள செல்வந்த நாடுகளில் இடம்பிடித்திருக்கும் புரூணையின் பெற்ரோல் வளத்தைப்பற்றி பார்ப்போம். உலகின் பெற்றோல் உற்பத்தி பெறுமதி ஒரு நபருக்கு ஆண்டுக்கு 25 ஆயிரம் ரூபா என்ற மதிப்பில் உள்ளது. புரூணையில் தனி நபர் பெற்றோலிய உற்பத்தியின் பெறுமதி அதைவிட சுமார் 30 மடங்கு அதிகமாகும். அதன்படி ஆண்டுக்கு ஒரு நபருக்கு கிடைக்கும் பெற்றோலிய பெறுமதி ரூபா 7.45 லட்சமாகும்.

பெற்றோலியத்தை அடுத்து இயற்கை வாயுவே இங்குள்ள பிரதான வளமாகும்.

புரூணையின் பெற்றோலிய வளங்களை அமெரிக்க நிறுவனமான ஷெல் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

ஷெல் நிறுவனம் புரூணையில் 20,000 [illegible] அதிக நீளமான எண்ணெய்க் குழாய்களை பராமரிக்கிறது. 40,000 பரல் கொள்வனவுள்ள 50 அடி விட்டத்திலான டாங்கிகளில் மசகெண்ணெய் சேமித்து வைக்கப்படுகின்றது.

நாட்டில் மிகவும் அதிகமானோர் வேலைசெய்யும் தளமாக பெற்றோலியத்துடன் சம்பந்தப்பட்ட தொழிற்துறைகள் காணப்படுகின்றன.

தொழிற்சாலை பகுதியைத் தாண்டி ஷெல் தொழிலாளர்கள் குடும்பத்துடன் வசிக்கும் சேரியா என்ற குடியிருப்புப் பகுதி உள்ளது. அவர்களுக்கு மட்டுமே தனித்துவமான ஷெல் விமான நிலையம் கூட அங்கிருக்கிறது. சிங்கப்பூர், மலேசியா, பேங்கொக், பாலி, ஆஸ்திரேலியா, ஹொங்கொங் போன்ற இடங்களிலிருந்து ஷெல் ஊழியர்கள் அந்த விமான நிலையத்தில் வந்து இறங்குகின்றனர். ஷெல் மருத்துவமனையில் பிறந்த குழந்தைகள் ஷெல் ஊழியர்களுக்கான பாடசாலைக்குப் போய், ஷெல் கிளப்பில் ஓய்வெடுத்து, ஷெல் பீச்சில் விளையாடி, ஷெல் கடையில் பொருட்கள் வாங்கி, ஷெல் வானொலியில் பாடல் கேட்டு ஜொலியாக இருக்கிறார்கள்.

இன்னொரு விடயம், நாடு முழுவதும் மதுபானங்கள் தடை செய்யப்பட்டிருந்தாலும் ஷெல் ஏரியாவில் மதுபானங்கள் வழங்கப்படுவதற்கு எந்தத் தடையுமில்லை.

இப்படி, கொட்டோ கொட்டெனக் கொட்டும் பெற்ரோல் வருமானமெல்லாம் சுல்தானின் கணக்கில்தான் வரவாக வந்து விழுகின்றன. இனியென்ன தங்கத் தட்டில் சாப்பிட வலிக்குமா.

சுல்தான், தான் மட்டும் சுகபோகத்துடன் வாழாமல் நாட்டு மக்களுக்கும் அள்ளிக் கொடுத்து ஐஸ் வைப்பதால் அவர்களுக்கும் எதைப்பற்றியும் கவலையில்லை.

இப்படியாக சுல்தானைப் பற்றியும் அவர்தம் பெருமை பற்றியும் கேள்விப்பட்ட எனக்கு, அவரது மாளிகைக்குச் சென்று சலாம் சொல்லி, நான் ஸ்ரீலங்காவில் இருந்து வந்திருக்கிறேன் என்று பேசி அவரது கையால் டீ ஒன்று சரி குடிக்க வேண்டும் என்று ஆசை!

முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டானாம் என்று என்னை யாரும் சொன்னால் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

டீ என்ன? சுல்தானை கட்டியணைத்து முஸாபாஹா செய்து, அவர் போட்ட புரியாணி சாப்பாடே சாப்பிட்ட சுவாரஷ்யத்தை சொல்ல வேண்டுமானால் இன்னும் இரண்டு வாரங்கள் நீங்கள் காத்திருக்கத்தான் வேண்டும்.

*தொடரும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மரணிப்பதில்லை ராமாயணம்



"என்ர ராசாத்தி... ஒருதடக்க ஐனபோய் எட்டிப்பாத்துட்டு வந்திறன் கிளி..."

"ஒரு தடக்கயுமில்ல ரெண்டு தடக்கயுமில்ல; வாய இறுக்கிப் பொத்திக்கிட்டு பேசாம படுகா... நீ போற போற எடத்தி லெல்லாம் கௌண்டு கெடக்கிறத்துக்கும் ஒன்ன ஏத்தியள்ளுறத்துக்கும் இஞ்ச ஆளுமில்ல... அதுக்கு நெக்கிட்ட காசி பணமுமில்ல..."

"என்ர தங்க மைலே... பொறுக்கொண்ணுதில்ல கிளி... அந்தப் புதினத்த கண்ணால பாத்தாத்தான் நவிசடங்கும்"

"பித்தமென்னமும் தலயில அடிச்சிட்டா இந்தக் கெழவனுக்கு...? ரோட்டு நெறய ஆமிக்காரனுகள அள்ளிப்போட்டிக்கானுகள்; சிங்களமும் ஒழுங்காத் தெரியாத ஒனக்கு இதல்லாம் தேவதானா...? என்ர சின்னப்புள்ள யெள்ள கணகட்டுக்குள்ளயும் ஒன்னச் சமாளிக்கிறதுதான் பெரிய பாடாவதி நெக்கி..."

அவள் சொல்வதிலும் தவறிருக்கவில்லை. இவரை கட்டிலில்தான் போடமுடியும் கட்டில் போடமுடியுமா? பேத்திமார்களின் பிள்ளைகளுடன் சேர்ந்து அன்னாளயக் கதைகள், பாடல்கள் சொல்லிக் கொடுத்து ஓர் இன்பக்கனிவுடன் குந்திருப்பவர் திடீர், திடீரென காணாமல் போவார்.

"தொட்டிலுக்க புள்ள படுக்குது மூத்தப்பா, பாத்துக்கிட்டிரி... ஈனபோய் கெதியா வாறன்..."

பெரிய காவலாளியென்று இவரை நம்பி, தலைமறைவாகி விடுவாள் பேத்தி. வந்து பார்த்தால் ஆளைக்காண முடியாது. போன வழியெல்லாம் தேடியலைந்து, சில சமையம் வெறுங்கையுடனும் திரும்பியிருக்கிறாள்.

நேற்றைய முன் தினமும் இப்படித்தான், அலுப்பாக இருக்குதாமென்று வெளியேறிப் போனவர்தான். இரண்டு நாட்களாகியும் ஆளைக்காணவில்லை.

அகத்தினக்குறிப்பில் பதிந்திருக்கும் அந்தக் காலத்து பால்ய நண்பர்களைத் தேடியலைந்து, அவர் குந்தித்திரிந்து வம்பளந்த கடைபசார், றோட்டோரங்களில் இருந்து பார்த்து களைத்துப் போனதால் தைக்காப் பள்ளியொன்றில் ஆஜரானார்.

இவரது அருவருப்பு அங்கேயுமா? மரைக் காமார்களின் செய்திவந்து தட்டியது பேத்தியை. நான்கு மைல்கள் தூரமென்றால் சும்மாவா? ஆண் துணையில்லாதவள். அன்றிலிருந்து,

"இவர எங்கேயும் விடுவதுமில்ல, தேடித்திரிவதுமில்ல..."

என்ற, மூர்க்கு விகாரமே இவளைக் கனத்துப்போனது.

ஆனால், இன்றைய தருணம் அவர் கண்டிப்பாக போகத்தான் வேண்டும்; அந்தப் புதினத்தைப் பார்க்கத்தான் வேண்டும். இது, அவரது வயதாகிப்போன காலத்தில் கடைசியாசை என்பதால், இதற்குப் பிறகு அவர் இல்லாமல் போனாலும் பறவாயில்லை.

மூலையின் ஓர் ஒதுக்குப்புறமாய் போட்டியிருந்த கயிற்றுக்கட்டிலில் கிடந்தவரை, என்னமாய் புளிந்தது. அழாக்குறையாகக் கெஞ்சினார்; அவள் தலையைக்கூட தடவிப் பார்த்தார். ஆனால், பேத்திதான் விடனுமே?

இப்படியெல்லாம் தனுப்போடுவாளென்று அப்போதே தெரிந்திருந்தால், எத்தனை வருடங்கள் வேண்டுமானாலும் இருந்தரிப்பிலேயே கெடந்து, பூரண நன்மதிப்பில் இந்த அடைவை பெற்றிருக்க முடியும்?

தப்பு... தப்பு... தப்பு... எல்லாமே தப்பாகிப்போனது.

"என்ர ராசாத்தி..."

"இந்த மனியனுக்கு பைத்தியமென்னமும் பிடிச்சிட்டா...? பெனஞ்சிவெச்ச சோத்துக் கல்லயயும் தள்ளி வெச்சிப்பொட்டு, என்ன படமீன எடுக்குற?"

எரிச்சலுடன் குடத்தை கக்கத்தில் நட்டினாள். பண்டிக்கால மூலைக்குள் பூவலில் தண்ணீரிறைத்து அன்னநடையில் வந்து சேர்வதென்றால் எப்படியும் இரண்டரை மணித்தியாலங்கள் கழியும். அது, இவருக்கு வசதியாகிப்போனது. புனர்வாழ்வு குடிநீர் அமைச்சை நினைத்து நன்றிமலர் தூவினார். அது புனரமைப்புச் செய்திருந்தால் இப்படியான தோதுகள் கிட்டிருக்குமா என்பது, இவரது எண்ணம்.

"பேத்தி வாறத்துக்கு முன்ன கெதியாப்போய், கெதியா வந்திடுவம்..."

படிக்கட்டால் மெதுவாக இறங்கி, தெருவோரத்தால் கவனமாக நடந்தார் அந்த முதியவர். முதியவர் என்பதை விட, ஓய்வுபெற்ற ஆசிரியர் என்பதுதான் இவருக்குப் பொருத்தமான மரியாதை.

உள்ளுலகம் முழுக்கவும் புனல்களுக் கூடாக பேதலித்துப் பாய்ந்த அன்றைய சந்தனக்காற்று, அவனது இளம்பருவத்தின் சீர்திருத்தத்தினால் இன்னுமொரு தடக்கவும் சித்தரித்துக் குழைந்தது.

"அவன் எப்படியிருப்பான்...? உண்மையான சீர்திருத்தவாதியாகத்தான் மாறிருப்பானா? இல்லை, சுயநலம் பேசுகின்ற வெறும் மேடைப் பேச்சாளனா...?"

இது இன்று நேற்றயதல்ல, பல ஆண்டுகாலங்களாக விடைதேடிய கேள்வியிது. வானொலியிலும் பத்திரிகைகளிலும் அவ்வளவு எடுப்பானதாய் தோற்றமளிக்காத சரிதத்தோடு, அந்தவொரு புதினத்தை மட்டும் கண்குளிரப் பார்த்துவிட்டால் போதுமென்ற பிளிர்க்கையின் பற்றுதலும் ஈரளிப்பும் உக்கிரமமாயிற்று.

"சேர்..."

"என்னடா கண்ணா...?"

"அஞ்சி முறுக்குல மூனு முறுக்குப் போனா எத்தின முறுக்கு சேர்...?"

"ரெண்டு முறுக்குடா கண்ணா..."

"ரெண்டு முறுக்குதானே...?"

அவன் வியப்பிலே நிறுத்துவான். இவனது குறும்புத்தனங்கள் தெரிந்த வாத்தியார், தன்னைக் காட்டிக்கொள்ளாமல், 'ஆமாம்...' என்று நிறுத்திப் போடுவார்.

அவன், வாத்தியாரின் காதுமடல்களைப் பிடித்து இரண்டு தடவைகள் முறுக்கிவிட்டு கைகொட்டிக் கேளிக்கையாகச் சிரிப்பான்.

மற்ற மாணவர்களுடன் ஒன்றிப் பழகும் ஒழுக்க சிந்தையும் மற்றவர்களுக்காய் இரங்கிப்பேசி நியாயத்துக்காய் துணிந்துநின்று வக்காளத்துப் பெறும் தீர்க்கதரிசனங்களும் வாத்தியாரைக் கவர்ந்திருந்தன.

பொதுநலத்தின் கீழ் பள்ளிக் குடில்களையும் விறாந்தைகளையும் உய்யானமாக அமைத்து; உண்மை யதார்த்தம் பற்றியும் சமூகத்தின் விடுதலைக்காக தெம்பைக் கொடுக்கும் ஆளுமையின் தன்மைகளில் தோதான இளம்பிறையாய் வளர்த்தெடுக்கும் பாணியில் அது ஒவ்வொரு தினத்திலும் ஏப்பமிடுவதை மை கொண்டு, இவனது பெருமூச்சுக் காற்று குறுக்கிட்டதை வாத்தியார் பல தடவைகள் கண்டிருக்கிறார்; வியப்புற்றிருக்கிறார்.

"இந்தச் சின்ன வயசில இவனுக்கிருக்கிர யோசனைகளப் பாரு...?"

தலைவன் தாமாகவே பிறந்து வளரவேண்டும் என்ற கீர்த்தனங்கள், இவன் மீது இயல்பாக உலாவித்திரிந்து அப்பு கூறியிருந்ததற்கு உவமமளித்தது.

'ஒரு சமூக சீர்திருத்தவாதியின் மெய்யான ஓவியத்தை, இந்தப் பிராந்தியத்து மக்களெல்லாம் இரண்டு தசாப்த காலங்களுக்குப் பிறகு தாண்டா அதன் மணத்தை அனுபவிப்பார்கள். அதுவரைக்கும் போலிச் சீர்த்திருத்தவாதிகளே குத்திக்கரண மடித்து, அனுகுண்டு தயாரிக்கும் முறைகள் பற்றியும் சங்கூதுவார்கள் நீ பொறுத்திருந்து பாரடா...?'

தாத்தன் முப்பாட்டன் காலத்தில், வாழைமடலில் வேப்பங்குச்சியால் பொழிந்துவிட்டுப் போன அப்புவின் ஆத்மசாந்தியை, இந்தச் சின்ன வித்தொன்று அடைகாப்பது நிச்சயமாயிற்று.

அமைச்சர்களைப் போலவும் பல கட்சிப் பிரமுகர்களைப் போலவும் ஒவ்வொரு தொனியிலும் மாற்றி, மாற்றிப் பூசனை பாடும் திறமைகளைக் கண்டு அசந்துபோனார்.

"எதிர்காலத்தில இவன ஒரு அரசியல்வாதியாகத்தான் உலகம் பாக்கும்..."

"அது மட்டுமில்ல சேர்... இவண்ட சுவாபங்கள பாக்கக்குள்ள... ஒருவேள மகாத்மாகாந்திக்குச் சொந்தமான வாரிசாகத்தானிருப்பானோ எண்டு நான் நெனக்கன்? ஒரு சித்திரம் பூச்சி, காலுக்க மிதிபட்டுச் செத்துப் போனதுக்கே விம்மி விம்மி குளறிட்டானென்டால் பாருங்களன்"

மரியங்கண்டு டீச்சர் உதட்டில் விரல்களைப் பதித்து ஆச்சரியம் கோரியிருந்த போது,

"அவன், அப்புடித்தான் டீச்சர்... மத்த, மத்த புள்ளகளவிடவும் இவண்ட கொள்கயெல்லாம் இஞ்ச புதுசரிக்கி..."

சில நேரங்களில், வாத்தியாரும் ஆச்சரியப்படுவதுமுண்டு...

"ஏன் சேர் படிக்கனும்...?"

"தல நிமிந்து நடக்கிறத்துக்கப்பா..."

அவன் கேள்விகளுக்கு திடீரென விடையளித்துப் பழகிப்போனவர்தான் வாத்தியாரும்.

"அப்பண்டா... எங்கு வாப்பாவும் தலய நிமித்தினோனே சேர் நடக்காரு... அவரு ஒங்களப்போல படிக்கவுமில்ல, களிசன் போடவுமில்லியே?"

அவன் கேள்விகேட்க ஆரம்பித்துவிட்டால் அன்றைய எல்லா எழுத்து வேலைகளையும் நிறுத்திவிட்டு இவனுக்கு விளக்கம் சொல்லித்தானாக வேண்டும். இல்லையென்றால் வாத்தியாரை விடவேமாட்டான்.

"கிட்ட வா... மகனே..." அவனை ஆதரவோடு அணைத்தெடுப்பார்.

"அவர்களெல்லாம் பாதிமனிசர்களப்பா... நாலெழுத்தும் படிச்சிருந்தாத்தான் முழுமனிசனாகலாம்... முன்னுக்கு வெரலாம்... அப்பதான் நாட்டுக்கு நல்லது செய்றத்துக்கும் மக்களுக்கு உபதேசம் செய்யவும் முடியும். இப்ப என்ன எடுத்துப்பாரு...? ஒன்னப்போல சின்ன வயசிலரிந்து நல்லாப் படிச்சதாலதான், பெரிய மார்க்கெடுத்து இப்ப வாத்தியாராயிட்டன்... ஒங்களுக்கெல்லாம் நல்லதச் செல்லித்தாறன்..."

"அப்புடிண்டா... நானும் நல்லாப் படிச்சி பெரிய மார்க்கெடுத்தா, ஒங்களப்போல பெரிய வாத்தியாராகுவனா சேர்...?"

அவனது கேள்விக்கணைகளின் மடமான விதத்தின் மலிவான மலட்டுணர்ச்சி மிகுந்தலையாய் குமிழி வெடித்து ஊசிமுனைக் காம்பினால் அப்பப்போது ஊற்றெடுக்கும் சீர்திருத்த நாளங்களின் திராவிடங்களும் வலுவில்லாமல் போனதாய் ஊகிக்க முடிந்ததல்ல. இறுதியில் ஒப்புக்கொண்டார். தலைவன் தாமாகத்தான் பிறந்து வளர வேண்டுமென்பதை, களவுமறைவற்றதாக ஒப்புக்கொண்டார்.

"ஆமாம் மகனே... கண்டிப்பாக... நீ நல்லாப்படிச்சி பெரிய மார்க்கெடுத்தா, என்னப்போல வாத்தியாரா என்ன? இந்த நாட்டக் கட்டியாள்ற ஒரு ஜனாதிபதியாகக் கூட, ஒன்னால வர முடியும்... அந்த நம்பிக்க எனக்கிருக்கப்பா..."

என்றோ ஒரு தினத்தில், ஏதோ வொன்றுக்காக நடந்த ஆசிர்வாதமொன்று இன்று அவனை ஓர் இனத்தின் தேசிய தலைவனாக மாற்றிவிடுமென்று கனவிலும்கூடக் கண்டதில்லை.

அன்று, மூன்றாம் வகுப்பில் கஞ்சியூற்றப் பட்ட பாலகன் இன்று பொங்கியெழும்பி, ஓர் இனத்தையே கட்டியாளும் தேசிய தலைவனாக மாறிவிட்டானென்றால் அந்தப் பெருமை வாத்தியாருக்குத்தான். அதிலொரு நிம்மதிப் பெருமூச்சுமேற்பட்டது.

அவர் வாழ்ந்த வாழ்விற்கும் லெட்சியத்திற்கும் விருதுகிடைத்த உயிர்த்துடிப்புள்ள பெருமூச்சது. இனிமேல் அவர் மரணிக்கப்போவதில்லை. ஏதாவதொன்றைச் செய்துவிட்டு நிம்மதியாகச் சாக வேண்டும் என்ற, ஒரு கொள்கைவாதி. மானிட நேயம் தனக்கு எதனைச் செய்திருக்கிறது என்பதை விட, மானிடத் திற்காக தானெதனைச் செய்திருக்கின்றேன்? என்று, அதிகமதிகம் சிந்திப்பவர்.

எக்காலத்திலும் மனிதன் மரணிக்கவே கூடாது. சமூகமவனைப் பேசிக்கொண்டே உயிர் வாழவேண்டும் என்ற விவாதிப்பில் தொடங்கி, குறைந்தபட்சம் ஒரு மரத்தையாவது நட்டிவிட்டுத்தான் அவன் சாக வேண்டுமென்ற, லெட்சிய வெறிபிடித்தவர்.

- வசீ சுலைமான் -

இன்று, அவர் அதிர்ஷ்டசாலிதான். தனது கொள்கையும் லெட்சியமும் அன்றைய பாலகன் இன்றைய தலைவனின் உதிப்பால் நிறைவேறி விட்டதை நினைத்து, நினைத்து ஆனந்தக் கண்ணீர் மல்கினார்.

'இவ்வளவு அடைவுகளையும் ஈட்டிய அந்த மகானை ஒரு தடவையாவது காணக்கிடைக்காதா? அவன் பாதத்தைத் தொட்டு நெஞ்சிலொரு முத்தமிட காலம் கை தராதா...? என்ற ஏக்கம் ஆண்டு காலமாக இருந்துவந்ததும் இன்றைய விழாவின்போது நிறைவேறப் போகிறது. அந்தவொரு வினாடி துடிப்பில் நெஞ்சை நிமிர்த்தி கர்வத்துடன் நடந்தார் அந்த ஓய்வுபெற்ற வாத்தியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீட்சி

வருடங்களின் துடிப்பும்
தருணங்களின் நடிப்பும்
பருவங்களின் பிடிப்பும்
சறுக்கல்களில் முடிகிறது
சுத்திக்கொண்டிருக்கும் பூமியில்
புத்திக்கெட்டு செய்யும் தீச்செயல்களில்
மொத்தமாக ஊறிப்போய்
நித்தமும் நிஜம்மறந்து வாழும் வாழ்க்கை!

என்றோ தெரிந்ததுதான்
நன்றே அறிந்ததுதான்
இன்றும் புரிந்ததுதான் – ஆனால்
என்றுதான் நிறைவேறுவதோ?

*பாதிமா அஸ்பா*
*ஜாமீஆ ஆயிஷா சித்தீக்கா*

# நீயும் வாராயோ

முடியாதென்று நினைத்து
மூலையில் ஒதுங்கிக்கொண்டால்
எம்முன்னோர் வழி வாழும்
முஸ்லிம் சமுதாயம்
முடமாகிப் போகுமல்லவா?
எழுந்திடுவோம்
புறப்படுவோம்
நீயும் நானும் செல்லும்போது
பாதையோர தெருவிளக்கு
தானாய் ஒளிகொடுக்கும்!



*ஹனானா வதூர்*
*ஜாமீஆ ஆயிஷா சித்தீக்கா*

# உயிர் மொழி



# மரந்தாகும் மனிதம்

உறங்கிய உண்மைகள்
கண்மூடித் திறப்பதற்குள்
மனிதத்தைக் களுவேற்றி
பசுத்தோல் புலிகள்
மகான்களாயின

யுத்த சூனியத்திலும்
சுடுகாட்டு மண்ணிலும்
சுனாமியின் இடவிலும்
ஆதாயம் தேடுகிறான்
ஆதரவு கேட்டவன்
அனாதராவாய் அலைகிறான்

சட்டங்களை யாத்தவனே
சத்தமின்றி உடைக்கிறான்
சட்டத்தால் சபதமிட்டால்
சட்டத்தையே மாற்றுகிறான்

அசத்திய அரக்கனின்
அராஜக வம்பர்கள்
அவனியை ஆளும்
அடுத்த பரம்பரையா

விழித்தெழு தோழா!
மண்ணுக்கு வேராய்
உண்மைக்கு உரமாய்
உருவெடுத்து வளர
உடும்பாக பிடித்து – நீ
உயிரையும் கொடுத்திடு

மனிதம் வாழட்டும்
மாண்புகள் வளரட்டும்!

*மீரா எம். அஸ்ஹர்*

# உசிரொண்டு போகுதே...!



வயல் பூமி மத்தியில
வரம்பேறி நடக்கயில
இரவெல்லாம் பேஞ்ச மழ
இதமாக குளிரயில
காத்தோட கலந்துவந்து
களி நிலமும் மணக்குதம்மா...!
கண்பாத்த காட்சியெல்லாம்
நரம்பெல்லாம் ஊடுருவ
நஞ்சுபட்ட மரம்போல
நரம்பறுந்து நிக்கிறேனே...!

தலப்பாரம் கைகள் தாங்க
கைகள் ரண்டயும் கால்கள் தாங்க
கண்ணீர் சுமந்து கண்கள் ஏங்க
கைவிட்டு கதிகலங்கி கிடக்குறேனே...!

முள்ளி மல பக்கத்துல
குடிசையோட பத்துநெலம்
பசுமயாதான் வெளஞ்சி நிக்கும்
பாக்க பார்க நெஞ்சு சொக்கும்
ஏர் பூட்டி நானும்
எடுத்தவழி உழவினாலும்
ஏமாத்தாம என் தங்கம்
எவ்வளவோ தந்துருச்சி...!

பொம்புளப்புள்ள பெத்ததுண்ணு
பொலம்பி நான் அழுததில்ல
அல்லாஹ் தந்த
என் மண்ணோட ஒதவியால
படிப்போட சேத்து
பண்பாத்தான் வளத்துட்டன்
ஒரு கொறையும் வெச்சதில்ல...!

என் மகளுக்கு நான்
கலியாணம் பண்ணிட்டனே...!
என் தங்கம்...
ஒனக்கு நான் தொரோகம்
செஞ்சிட்டனே...!

சீதனத்த கேட்டு என்ர வேதனத்த
பறிச்சிட்டாங்க...!
சாதகமா எடுத்து சோதனய
தந்துட்டாங்க...!
சிறப்பாதான் வெப்போம்ணு
என் மகளையும் எடுத்துக்கிட்டாங்க...!

என் மண்ணை வித்து பொன்னாக்கி
பொண்ண நானும் வாழவெச்சன்
சத்தியமா என் தங்கம்
மனசாற ஒன்ன கொடுக்கலயே...!

உள்நெஞ்சு வலிக்க
உசிரொண்டு போகுதே...!
ஒலகமெல்லாம் தேடினாலும்
ஒன்னைப்போல ஒருசிரு
கெடக்குமா...? என் தங்கம்...!

*எஸ். சிபானி முஹமட்*
*ஒலுவில்.*

# சீச்சீ என்னகா இது உலகம்?

செத்தவன் கண்ணைத் தோண்டியவனும்
நான்
சித்திரம் பார்க்க வேண்டும்
அதி
சீக்கிரமாய் செல்வந்தனாக வேண்டும்
கார் வாகன, வங்களாச் சொகுசில்
என்
கண்மூடித் தூங்கவேண்டும்
புத்திபேதலித்து புழு பூச்சிகள் கடிக்கும்
பொல்லாக் கோத ரிக்கு
நான்
ஆளாக நேரிட வேண்டும்
உழைப்பு ஊதியம் ஏதுமின்றி
ஊர்சுற்ற வேண்டும்
உழைத்ததில் உண்ணுகையில்
ஒடுகாலிகளுக்கெல்லாம்
ஒப்பாரி
சீச்சீ
என்னகா இது உலகம்!
வானம் கீழிறங்கி வந்து
வசதியாவும் செய்தாக வேண்டும்
சொர்க்க வாசலை என்
சொந்தச் செலவில் நிர்வாகம்
செய்தாக வேண்டும்
படித்தவன் முட்டாளும்
முட்டாள் படித்தவனுமாய்
விடியும் பொழுதுகள் யாவும் மாறி
எதிலும்
அடித்தால் அம்மியும் நகருமென்றாகி
ஒரு சொகுசுக் காலத்தில் சும்மா
நாம்
செத்துப் பிழைக்கிறோம்!
மூச்சு நின்றால் எல்லாமே பொய்
இதுவொன்றே எங்களுக்குள்
இன்னுமே என்றும் புரியாத மெய்
இது



எம்மடைமையின் கறையா
எம்மண்டைகளின் குறையா
எல்லாமே பூச்சியம்
சீச்சீ
என்னகா இது உலகம்!

*கலைதாசன் ஹக்கீம்*

# கண்மணியே நீயுணர்வாய்



எண்ணிக் கலங்குகிறேன்
இளநெஞ்சு வேகுறேன்
உன்னை நினைக்கையிலே – நான்
உயிர் வலியை உணருகிறேன்

தனித்துன்னை விட்டுச்செல்ல
தந்தை மனம் ஒண்ணிடுமா?
எழுதிவைத்த விதி முடிந்தால்
எப்படியும் நானிறப்பேன்

கண்மணியே நீயுணர்வாய்– இறை
கவலையோடு வாழ்ந்திடுவாய்

பொல்லாத உலகமிது
புகழ்ச்சியில் நீ மயங்கிடாதே
இல்லாத பழியுரைக்கும்
அதற்கென்றும் அஞ்சிடாதே

பொய்பேசத் துணிந்திடாதே– யாதும்
பொதுவென்று ஏற்றிடாதே
யார் கருத்தோடு பேசிடினும்
உன் கவனத்தை இழந்திடாதே

காலங்கள் சுழலுகையில்
கவலைகள் கூடிவரும்
கோலங்கள் மாறுகையில்
கொடுமைகள் தேடிவரும்
ஆனாலும் கண்மணியே– நீ
அதை வென்று வாழ்ந்திடுவாய்

பசித்திரு, வேண்டுமென்றால்
நோன்புவைத்து மாண்புறுவாய்
தனித்திருக்க நேர்ந்துவிட்டால்
திருமறையெடுத்து ஓதிடுவாய்

ஒழுக்கத்தை கடைப்பிடிப்பாய்
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவாய்
வேண்டாத நேசங்கள்
விட்டொதுங்கி நீ இருப்பாய்

மூத்தோர் சொல் மதித்திடுவாய்
முகத்தில் புன்சிரிப்பை பூத்திடுவாய்
வேடிக்கை களிப்புகளை
வெறுத்தொதுக்கி நீ நடப்பாய்
நெடுந்துன்பம் வாட்டிடினும்
நெஞ்சுறுதி நீ இழவாய்
வஞ்சிப்போர் பேசிடட்டும்– எல்லாம்
வல்லோன் துணை என்றுமுண்டு

தனித்துத் திரிதல் ஆகாதே– தலையை
திறந்துசெல்லல் கூடாதே
உடம்பின் அழகை எடுப்பாக்கும்
ஒட்டிய ஆடையை அணியாதே

ஆடவர் சினேகம் விரும்பாதே–அதில்
ஆபத்து உண்டென்றுணர்வாயே
சுவனத்தை உறுதிகொண்டிட்டால்
சுகமாய் என்றும் வாழ்வாயே

கொதிக்கும் நரக ஜந்துகளின்
கொடுமையெல்லாம் நீ அறிவாய்
வதைக்கும் ஒரு நாளுண்டு– அன்று
துணைக்கு வருவார் யாரும்
இல்லையங்கு !

*-கிராமத்தான் கலீபா-*
*பொத்துவில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**O/L - A/L** பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கும்
மற்றும் வயது கல்வி வித்தியாசமின்றி ஆண்களுக்கும் பெண்களுக்கும்



# LONDON Hotel School

## தொழில் வாய்ப்புக்கும் வெளிநாடு செல்லவும் சுயதொழில் வாய்ப்புக்கும்

**06 மாத காலத்தில் 10 பாடத்திட்டங்கள்**

- Hotel Management
- International Cookery
- Front Office & Reception
- Vegetable & Fruit Carving
- House Keeping
- Food & Beverage
- Pastry & Bakery

**23.12.2013 திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

**10 சான்றிதழ்கள் வழங்கப்படும்.**

**தமிழ் ஆசிரியர்களால் தமிழ் விளக்கத்துடன் பாடங்கள் நடைபெறும்.**

உடனே பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கும் ஒரே தவணையில் பணம் செலுத்துபவர்களுக்கும் 20% விசேட கழிவுகள்

**தொழில் புரிபவர்களுக்கும் உயர்கல்வி மாணவர்களுக்கும் சனி மற்றும் ஞாயிறு காலை 8 மணி முதல் 5 மணி வரை விசேஷட வகுப்பும் பயிற்சியும் நடைபெறும்**

**இலவச மேலதிக வகுப்புக்கள்**

- ஆங்கில அறிவுக்கான வகுப்பு.
- கேக் தயாரித்தலும் வடிவமைத்தல் வகுப்பு
- Italian & European Cookery (Traditional & Modern Cooking Methods)
- Tourism
- Vegetables & fruit Carving

**மேலும் தகைமை பெற்றுக்கொள்வதற்காக**

**5 ★★★★★ நட்சத்திர ஹொட்டல்களில்** பயிற்சி, சம்பளம், டிப்ஸ், உணவு, சீருடை, சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**பயிற்சியின் பின்**

- நட்சத்திர ஹோட்டல்களில் வேலை வாய்புகள்.
- வங்கிக்கடன் வசதிகள்.
- மத்திய கிழக்கு நாடுகளில் கூடிய சம்பளம் பெற்றுக்கெள்வதற்கான வாய்ப்பு
- UK, USA, Canada, Australia மற்றும் ஏனைய நாடுகளில் பட்டப்படிப்பும் தொழில் வாய்ப்புக்கு விசாவுக்கான ஏற்பாடுகள்.
- பயிற்சிகளும் (இன்டசிப் மூலம் தொழில் வாய்ப்புகளும்)
- உயர் கல்வியும் வசிப்பிட வசதிகள்.
- குடும்பத்துடன் செல்ல வாய்புகள்.

கொழும்பில் பயிற்சியின் பின் பகுதிநேர தொழிலுக்கு உதவிகள்

Missed Call செய்து விபரங்களை அறியவும், S.M.S செய்து Email மூலமாக விளக்கங்களை பெற்றுக் கொள்ளவும் தூர பிரதேசத்தினர் வங்கியில் ரூபா 1000/- செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளவும்

**0776 34 69 13**



தூர பிரதேசத்திலிருந்து வருவபவர்களுக்கு இலவச தங்குமிட வசதிகள்.
3 வேளை உணவு வசதிகள்.

**HOTLINE - 0711 60 10 40**

| Bambalapitiya | Nugegoda | Dematagoda | Kandy I | Kandy II | Dehiwala |
|---|---|---|---|---|---|
| 0776 346913 | 0774 323131 | 0774 833444 | 0775 492944 | 0711 60 10 50 | 0712 35 74 12 |

LONDON COLLEGE

## London College of Higher Studies (Pvt) Ltd.

**No. 155/1A, Galle Road, Dehiwala.**
**(Near the Arpico Super Centre)**
**0114 545082 / 0114 545083**

---

## ஓர் அரிய சந்தர்ப்பம்



**கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான சத்திர சிகிச்சை (Cataract Surgery)**

கட்டணம் → ரூபா **9500.00**

**விஷேட வில்லை தேவைப்படின்**

கட்டணம் → ரூபா **15000.00**

**குவைத் வைத்தியசாலை புத்தளம்**

தொடர்புகளுக்கு:
**0322266480, 0777272107, 071 8183833**

மாதம் இருமுறை சுத்னா செய்யப்படும் **2950.00 மட்டுமே**

ஜனவரி மாதத்திற்கான பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

---

## தொழில் நுட்பக்கல்லூரியில் வேலை வாய்ப்பு
## Vacancies in Technical College

கண்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள தொழில்நுட்பக்கல்லூரி ஒன்றுக்குப் பின்வரும் தொழில்களைத் திறைமையாகச் செய்யகூடியவர்கள் உடன் தேவை

**1. Coordinator ( ஒருங்கிணைப்பாளர் ):**

அரச, தனியார், சமூக சார்பான மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும், Stakeholders களுடனும் தொடர்பு கொண்டு கருமங்களைச் செவ்வனே செய்து முடிக்கக்கூடியவர்.அத்துடன் பயிலுனர்களுடனும், மற்ற ஊழியர்களுடனும் சுமுகமான முறையில் குழுப்பணி (Teamwork) யில் ஈடுபடக்கூடியவர்.

**தகைமைகள்:**

1. அரச அல்லது தனியார் நிறுவனம் ஒன்றில் சம்பபந்தப்பட்ட துறையில் 03 வருடங்கள் வேலை செய்த அனுபவம்.
2. செல்லுபடியான மோட்டார் வாகனம் செலுத்தும் அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருத்தல் ஒரு மேலதிக தகைமையாகும்

**2. Automobile Instructor**
(மோட்டார் வாகன மெக்கானிக் தொழில் நுட்ப போதனாசிரியர்).

**தகைமைகள்:**

1. மோட்டார் வாகனத் தொழில் நுட்பத்தில் NVQ level-4 சான்றிதழைப் பெற்றிருத்தல்
2. அதே துறையில் இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.
3. செல்லுபடியாகும் மோட்டார் வாகனம் செலுத்தும் அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருத்தல் ஒரு மேலதிக தகைமையாகும்.

distantf@yahoo.com, isanapice@gmail.com


---

edexcel : UK Assured

இலங்கையில் BCAS CAMPUS மாத்திரமே வழங்கும்

# CAD & BS
**Computer Aided Design & Building Studies**

**With * MEP** — Mechanical Electrical & plumbing



**ரூபா 75,000.00** (குறைந்த பட்சம்)
மாத வருமானம் தரும் தொழில் வாய்ப்புக்களை உத்தரவாதப்படுத்தும் 6 மாத தீவிர பாடநெறி.

மிக வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கட்டட நிர்மாணத்துறையில் கணணி பட வரைஞர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலை வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணணி முறைப் படம் வரைதலில் சிறப்புத் தேர்ச்சியும் (Expert knowledge in CAD) கட்டட நிர்மாணத் தொழில் நுட்பங்கள் தொடர்பான அடிப்படை அறிவும் கொண்டோர்களுக்கான ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன. இந்த தொழில் வாய்ப்புகள் அதிகூடிய வருமானத்தையும் (குறைந்த பற்சம் மாதமொன்றுக்கு ரூபா 75,000.00) உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக உயர்கல்வி வாய்ப்புக்களையும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளையும் வழங்கிவரும் முன்னணி நிறுவனமான BCAS CAMPUS மாத்திரமே வழங்கும் CAD & BS பாடநெறி உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் மேற்குறிக்கப்பட் திறன்களைப் பெற்றுத் தருவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட தகைமைகளையும், 4 சான்றிதழ்களையும் பெற்றுத் தருகிறது. அத்தோடு Edexcel-UK நிறுவனம் நேரடியாக வழங்கும் மற்றுமொரு சான்றுதழும் கிடைக்கிறது.

CAD & BS பாடநெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் சுயமாகவே உடனடித் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் அதே வேளை பெரும்பான்மையானவர்கள் BCAS CAMPUS இன் உதவியுடன் மத்திய கிழக்கில் CAD Draughtsman, Construction Supervisor, Junior Quantity Surveyors, Land Surveying Assistant போன்ற தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்...

**Duration: 6 Month**
பாடநெறி முடிவில் **4** சான்றிதழ்கள்

- Professional Diploma in CAD (Awarded By Edexcel UK & BCAS Campus)
- Certificate in Building Studies
- Certificate in MEP Applications
- Certificate in Technical English

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Corporate Office :
32, Dharmarama Road,
Colombo 06, Sri Lanka.
Tel : 011 2501145
Email: info@bcas.lk

| | |
|---|---|
| Kandy Campus | 344, Peradeniya Road, Kandy, Sri Lanka. T: 081 2224731 |
| Batti Campus | 294, 1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka. T: 065 2228451 |
| Wayamba Campus | 103, Dambulla Road, Kurunegala, Sri Lanka. T: 037 2233339 |
| Jaffna Campus | 16, Point Pedro Road, Jaffna, Sri Lanka. T: 021 2219910 |
| Qatar Centre | PO Box: 35406, No: 36, Al-Ain St, Hilal, Doha-Qatar. T: +974 44366572 |

www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org